


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக குறைந்த கட்டணத்தில்

# அதி கூடிய காப்புறுதி

## Compare Our Guaranteed
### 10 Year renewable rates for Your Self!

| AGE | $100,000 | | $250,000 | | $500,000 | |
|---|---|---|---|---|---|---|
| | Male | Female | Male | Female | Male | Female |
| 35 | $8 | $7 | $13 | $11 | $ 21 | $16 |
| 40 | 9 | 8 | 16 | 13 | 27 | 22 |
| 45 | 12 | 10 | 23 | 18 | 40 | 30 |
| 50 | 17 | 12 | 34 | 23 | 63 | 41 |
| 55 | 23 | 17 | 50 | 34 | 95 | 63 |

NON- SMOKER MONTHLY RATES *Rates may vary depending on health

வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி
அடமானக் காப்புறுதி
*R.E.S.P 20%* அரச மானியத்துடன்
15% டிப்புளோமா மானியமும் வழங்கப்படும்



உங்கள் காப்புறுதி
நிராகரிக்கப்பட்டதா?
கவலையை விடுங்கள்
அழையுங்கள்

Trusted Choice

**Siva Kandiah**
**Insurance Broker**
**BAsp, CSC, CPH, CIFC**
(Over 17 Years Canadian Banking & Financial Exp.)

சிவா: **416-992-1259** Off: 416 315 8100 Fax: 416 750 3751

INDUSTRIELLE ALLIANCE · RBC Insurance · Manulife Financial · Canada Life · Unity Life of Canada · Assumption Life

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




AGR நகை மாளிகை



வியக்க வைக்கும் நவீனடிசைன் AGRதங்கநகைகள்
திருமண ஓடர்களுக்கு சிறப்பு விலைகள்

துரித பணமாற்று சேவை

இலங்கையில்
கொழும்பு
மட்டக்களப்பு
திருகோணமலை
புத்தளம்
யாழ்ப்பாணம்
சிலாபம்
நீர்கொழும்பு

இந்தியாவில்
திருச்சி
சென்னை

ஐரோப்பாவில்
லண்டன்
சுவிஸ்
ஜேர்மனி
பிரான்ஸ்

தூரகிழக்கில்
சிங்கப்பூர்
மலேசியா
அவுஸ்திரேலியா

2004 தமிழர் நாட்குறள்
குறிப்பேடு விரைவில்

தொடர்புகளுக்கு:
Tel: 416-261-0024
2637 Eglinton Ave, East, Scarborough, ON.

416-264-8798
CAR
மண்ணையும் மனங்களையும் நேசிப்போம்

tvi
416-593-9300
TAMIL VISION INC.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் இன்பம்

மாவலன் —

வேலைக்கான முன்னேற்ற பாடுகளைச் செய்துவிட்டு அவன் படுக்கைக்குச் செல்வதற்கு தாமதித்துவிட்டது.

தேர்வுக்காக இரவிரவிரவாக படித்துவிட்டு ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிவிட, தேர்வுக்கான நேரம் வந்ததும் உறக்கம் கலையவில்லை. தேர்வில் தேற முடியவில்லை.

ஆறு மணிக்கே காலை நேர நிகழ்சிகளை ஒலிபரப்ப வேண்டிய அதிகாரி அந்த நினைப்பே இல்லாமல் உறக்கத்தில் மூழ்கிவிட்டால் அன்றைய வானொலி நிகழ்ச்சிகளின் நிலை என்னாவது?

குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட விடயம் தொடர்பான பாடத்திட்டத்தை ஒரு ஆசிரியர் கற்பிக்க மறந்து விடுகின்றார். தேர்வு நெருங்கிவிட்டது. அந்த மாணவர் நிலை என்னாவது?

வீட்டிலிருந்து அவசரமாக வெளியேறி பேரூந்தில் ஏறிவிடுகிறாள் அப் பெண்மணி. அதன்பின் அவளுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. வரும்போது கதவைப் பூட்டி வைத்தேனா? அடுப்பை நிறுத்திவிட்டேனா?

இவ்வாறான 'குழப்பங்களும்' சந்தேகங்களும் எதனால் ஏற்படுகிறது? இதற்கெல்லாம் காரணம் மறதி. மறதியின் விளைவுகளும் தாக்கங்களும் கணக்கிட முடியாதவை. இந்த மறதியுடைய எவரும் எப்பொழுதும் எதிலும் வெற்றி பெறமுடியாது.

இதைப் போன்றே மாபெரும் படையணியும் படைக்கருவிகளையும் கொண்டிலங்கும் இராணுவ பிரிவு. எதிரி படையைக் கண்டு அஞ்சிவிட்டால் அப்படை வெற்றி பெறவே முடியாது. அச்ச மனநிலை தோல்விகளையே தோற்றுவிக்கும்.

வெற்றிக்கான முதல காரணமாக விளங்குவது அச்சமின்மையே. மகா கவி பாரதி பாடுகிறார் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே" என்று பாடுகிறார்.

அச்சமென்பது மடமை என்று பாடுகின்றார் கவிஞர் கண்ணதாசன். இப்பாடல்களை மந்திரமாகக் கூறும்போது வீரம் பொங்கும். வெற்றிகள் குவியும். சொல்லின் திறனூடாக அச்சம் கொன்று, அரணை வெல்வோம். இவ்வாறு மறதி தவிர்த்து முன்னேற்றம் காண்போம்.

அச்சம் தவிர்த்து அரணை வெல்
மறதி தவிர்த்து உயர்வைக் காண்.

எனவே தான் வள்ளுவர் கூறுகிறார் எவ்வளவுதான் படையும் பாதுகாப்பும் இருந்தாலும் பயம் இருந்தால் வெற்றி பெறமுடியாது. மறதி இருந்தால் முன்னேற முடியாது.

இதே வள்ளுவம் தந்த குறள் -

"அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு."

அதிகாரம்:54 - பொச்சாவாமை - பாடல்: 534

**Is it time to SELL your home? Thinking to BUY?**

**Resale homes, Commercial & Industrial properties**

**Have Credit Problems. No Problem!!!!** Each Problem has unique Solution!

*The main reasons to Sell/ Buy with MOHAN*

*Personal Care for each client
*Mohan has buyer/Seller in GTA, Brampton, Mississauga, Markham, and Oakville
*Your agent, ranked as 13th (July 2003)
*And much more reasons.

**Call *Mohan* at 416- 298-8200 (24H)**

Century 21

Percy Fulton Ltd.
Bus:416-298-8200(24 H)
#1 Office in Canada
13 Years Champions





**Moham Subramaniyam**
Associate Broker
**Double Centurion Awarded**
Master Club Award winner
**Mohan** has ranked as 13th agents

**(Not intended to solicit properties currently listed for sale)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிகெடுக்கும் நண்பர்கள்

வீட்டிற்குள் எமக்கு மகிழ்ச்சி தருபவர்கள் கணவன், மனைவி, பிள்ளைகள், குடும்பத்தவர்கள் என்றால் வீட்டிற்கு வெளியே நமது நண்பர்கள்தானே.

ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு மிகுதியான நண்பர்களைப் பெற்றிருக்கின்றானோ அவன் வாழ்க்கையில் அவ்வளவுக்கு அவ்வளவு சந்தோஷத்துடன் இருப்பான் என்பதே முதமொழி. எனினும் நமது நண்பர்கள் அனைவரும் நம்மிடத்தில் உண்மையான நட்பை வைத்திருப்பார்கள் என்று மட்டும் நம்பிவிடக்கூடாது. நட்பிலேயும் பல படிகள் உண்டு. உயிருக்குயிரான நண்பர்கள்முதல் அண்மையில் பழகிற நண்பர்கள் வரை பலவிதமான நண்பர்களோடு பழக வேண்டி ஏற்படுகின்றது.

நமக்கு எத்தனை நண்பர்கள் இருந்தாலும் அவர்களுள் ஒரு சிலரை மட்டும்தான் எம்முடைய குடும்ப நண்பர்களாக ஏற்றுக் கொள்ளலாம். எம்மிடம் உண்மையான நட்பை வைத்திருக்கும் மனம் விட்டுப் பழகும் நண்பர்களிடம் மாத்திரமே நாம் எமது அந்தரங்க விஷயங்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். எல்லோரிடமும் வளவளா என வம்பளந்து நமது உள்ளக் கிடக்கைகளை கொட்டி வம்பில் மாட்டிக் கொள்ளக்கூடாது. சிலர் சிரிக்க சிரிக்கப் பேசுவார்கள். வசீகரமான முறையில் பேசி எம்மை மடக்கி விடுவார்கள். ஆனால் இவர்களது இந்த சிரிப்புக்குப் பின்னால் சில தீய குணங்களும ஒளிந்திருக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

இன்னும் சிலரோ எப்போதும் 'சிடு சிடு'வென எரிந்து விழுவார்கள். எவருடனும் இனிமையாகப் பேசமாட்டடார்கள். எதிலும் ரசனை இருக்காது. ஆனால் இவர்களிடம் சிலரைக் கவரக்கூடிய நல்ல குணங்களும் இருக்கும்.

இவர்கள் பெரும்பாலும் சொன்ன சொல் மாறாதவர்களாக, நம்பியவர்களைக் கைவிடாதவர்களாக இருப்பார்கள். இவர்களை நாம் முழுமையாக நம்பலாம். நட்பை வைத்திருக்கலாம். உண்மையான நண்பர்களிடத்தில் நாம் எதையும் ஒளிவு மறைவு இன்றிப் பேசலாம். நமது அந்தரங்க பிரச்சனைகளுக்கு அவர்களிடம்ஆலோசனை கேட்கலாம். உதவி பெறலாம். அவர்களிடம் காணப்படும் குறைபாடுகளை உரிமையுடன் கண்டிக்கலாம். எமது குறைகளை கண்டிக்க சந்தர்ப்பம் வழங்கலாம். வாதாடலாம். சண்டை போடலாம். இதனால் உறவில் எந்த விதமான விரிசல்களும் ஏற்படாது.

எனவே நாம் நட்பின் ஆரம்பத்திலேயே உண்மையான நண்பர்களிடம் மாத்திரமே மனத் திறந்துவெளிப்படையாக நமது உள்ளக் கிடக்கைகளைக்கொட்ட வேண்டும். சிலர் நட்புடன் பழகி குடி கெடுக்கும் நண்பர்களும் இருக்கலாம். இவர்கள் குடும்பத்திற்குள் ஒருவராக இருந்து கொண்டு குழப்பத்தை ஏற்படுத்திவிடுவர். கணவர், மனைவிக்கிடையே இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி விரில்சல்களை, சண்டைகளை ஏற்படுத்திவிடுவர். நண்பர்களில் நல்லவர்கள் பலர் இருக்கலாம். கெட்டவர்களும் இருக்கலாம், ஆனால் பிரித்தறிய முடியாது. எனவே எப்படிப்பட்ட நட்பும் ஒரு எல்லையுடன் இருப்பதே நல்லது.

நன்றி - சுவாதி.


ஸ்காபுரோ நகரில் முன்னணியில்

**MARDI GRAS**

மாடி கிறா **BANQUET HALL**

திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்தநாள்
ஒன்றுகூடல்
அனைத்து
விழாக்களையும்
எம்மிடம்
ஒப்படையுங்கள்
நாங்கள் திருப்தியுடன்
உங்களை
அனுப்பிவைக்கிறோம்





Chandra (kumar) or Jeya
(416)-757-4288




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சரித்திரம்

தொடர்........

*செந்தமிழேந்தி........*

**குடிகள் வருதல் - பட்டாபிஷேகம்**

யாழ்ப்பாணன் அக்குடிகளை மரக்கலங்களிலேற்றிக்கொண்டு தன் மனைவியோடும் மந்திரி பிரதானி சேனையோடும் மீண்டுவந்து நல்லூரிலே வசித்தான். நல்லநாளிலே யாழ்ப்பாணன் பட்டாபிஷேகமும் பெற்றுத் தனது நாட்டுக்கு யாழ்ப்பாணமென்னும்பெயரும் வழங்கினான். அவன் தனக்கு மந்திரியாகவந்த சேதிராயனுக்குப் புத்தூரென்று பின்னர் வழங்கப்பட்ட இடத்தைத் திருத்தி அவ்வூரை அவனுக்குக் கொடுத்தான். அது புதிதாக அமைக்கப்பட்ட ஊராதலின் புத்தூரெனப்பட்டது. நிலவளம் நீர்வளஞ் சோதித்து அநேகவிடங்களைக் காடுகெடுத்து நாடாக்கி நெல்விளைவிக் கவுந் தொடங்கினான்.

அதன்பின்னர்த் தொண்டைமானுடைய மரக்கலங்களும் வந்தன. உப்பேற்றும் பொருட்டு ஒருகால்வாயும், மரக்கலங்கள் தங்குதற்கு ஒரு துறையும் அவன் அனுப்பிய சனங்களால் அமைக்கப்பட்டன. அச்சனங்கள் உப்பளத்துக்குச் சமீபத்திலே குடிகொண்டார்கள். அச்சனங்கள் உப்பெல்லாவற்றையுந் திரட்டிக் காலந்தோறும் அம்மரக் கலங்கிளலேற்றி அனுப்பி வந்தார்கள். அம்மரக்கலங்கள் மீண்டுவரும்போது, நெல், கறிச்சம்பாரம், வஸ்திரமுதலியன கொண்டுவந்து யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டைமான் சனங்களுக்குக் கொடுத்துப் பண்டமாற்றி மீளும். தொண்டைமான் ஏவலாளரால் அமைக்கப்பட்ட கால்வாய் தொண்டைமானாறு என இன்றும் வழங்குகின்றது. தொண்டைமானது கருமாதிகாரியாகிய வீரப்பராயனிருந்தவிடம் இன்றும் வீரப்பராயன் குறிச்சி எனப்படுகின்றது. தொண்டைமான் கருமமாக வந்த சனங்கள் பெரும்பாலும் தொண்டை நாட்டின் வடபாகத்திலிருந்து வந்தவர்கள்.



HOME SELLERS
How Much Do You Want For Your Home?
I Can Show You How To Get Your Price.
Free Market Evaluation!
No Obligation!
TOTAL COMMISSION 2.5% - 3.5%
Thana Manickavasagar
Sales Representative
416- 290-1200 - Bus.
416- 728-5772 - Driect
Century 21
Affiliate Realty Inc.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் குடிகொண்டபகுதி வடமராட்சியெனப்பட்டது. அவர்கள் பாஷை தெலுங்கு. அதுபற்றியே யாழ்ப்பாணத்திலே கடவுபிச்சு வாய்க்கத்தி(பீச்சாக்கத்தி) முதலிய தெலுங்குச் சொற்கள் வழங்குவவாயின. அவர்கள் விஷ்ணுவை வழிபடுவோர். அதுபற்றி வல்லிபுரமென்னுங் குறிச்சியிலே ஒரு விஷ்ணுவாலயமுண்டாவதாயிற்று. வவ்லிய தேவன் அதிகாரஞ் செய்தவிடம் வல்லிபுரமெனப்பட்டது. ராயன், தேவன், கிழான், மழவன் என்னும் சிறப்புப்பெயர்கள் அந்நாள் வெளாளர்க்குரியன. தெலுங்குபாஷையும் தெலுங்குநாடும் வடுகெனப்படும். அதுபற்றியே அந்நாட்டிலிருந்திங்குவந்து குடிகொண்ட வடமரை வடுகரென்று கூறுவர். அவ்வடமருள்ளே போகியர் ஒரு தொகையினர். இடையராகிய கோபிகர் பெரும்பாலார். கோபிகர் பிற்காலத்திலே கோவியரெனப்பட்டார்கள். கோபிகரைப்போலவே உப்பமைக்கும் பொருட்டு வந்த அளமரும் பெரும்பாலார். போகியருட்சிலர் யாழ்ப்பாணனுக்கும் சிலர் வீரப்பராயனுக்கும் சிலர் சேதிராயனுக்கும் சிவிகையாட்களாகிச் (சிவிகையார்) சிவியாரெனப்பட்டார்கள். நல்லூர் இராஜதானியிற் குடிகொண்ட சிவிகையார் பின்வந்த தமிழரசரோடு வந்து தமக்குரிய குடிமைகளுடன் கிராமங்கொண்டவர்கள்.

## யாழ்பாணன் கொடி

யாழ்ப்பாணனும் சேதிராயனும் கல்வியிலே சிறந்தவர்களாதலின் தமது குடிகளுக்கு நெல்விளைவு குறையாவண்ணம் நிலங்களைத் திருத்தியும் குளங்கள் கால்வாய்களை வெட்டியும் நாட்டைத் திருத்தியதோடு, நாட்டிலே நல்லொழுக்கமும், ஒற்றுமையும், ஈசுரபத்தியும் அபிவிருத்தியாகுமாறு ஒரு பாடசாலையும், புரோகிதராகத் தம்மோடு வந்த கச்சிக்கணேசையர் கொணர்ந்த சித்திவிநாயகரையும் ஓராலயம் வகுத்துத் தாபித்தனர். இதுவே யாழ்ப்பாடி காலத்தில் உண்டாகிய விக்கிநேசுராலயம். இது நல்லூரில் எவ்விடத்திலிருந்ததென்று தெரியவில்லை. சிவியா தெருவில் இப்போதுள்ள சித்திவிநாயகராலயத்திலுள்ள விக்கிநேசுரமூர்த்தி அதுவேபோலும். நெல்லுப்பயிரோடு செந்தமிழ்க்கல்விப் பயிரையும் யாழ்ப்பாணத்திலே அவவிருபயிரும் அபிவிருத்தியாகிக் கொண்டே வருகின்றன. யாழ்ப்பாடியுடைய கொடி யாழைக் கையிலேந்திய சயமகட்கொடி. அது மிதுனக்கொடியெனவும் படும். அதுவே சங்கிலியரசினிறுதியாகவுள்ள யாழ்ப்பாணத்து அரசரெல்லாங்கொண்ட கொடியாம். யாழ்ப்பாடி சாதியிலே தொண்டைமண்டலத் துயர்குடிச் சைவ வேளாண் முதலி. யாழ்ப்பாடியினது திருவுருவச்சிலை(யாழ்ப்பாடி திருவுருவச் சிலையொன்று யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல ஸ்தானத்தில் அமைத்துவைத்தல் நம்மவர் கடனாம்) யைப் பின்வந்த அரசர் தமது கோட்டைவாயிலிலே நாட்டிப் போற்றிவந்தனர். அது நிற்க.


# WHY PAY RENT?

**WHEN YOU CAN OWN YOUR OWN HOME!**

**LET ME HELP YOU FIND YOUR DREAM HOME AT AN AFFORDABLE PRICE SUITED JUST FOR YOU AND YOUR FAMILY IN AN AREA OF YOUR CHOICE.**

Century 21
Affiliate Realty Inc.



**Thana Manickavasagar**
Sales Representative
416- 290-1200 - Bus.
416- 728-5772 - Driect




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்பாடி இறந்தது

யாழ்ப்பாடி (யாழ்ப்பாடியாகிய அந்தக கவிவீரராகவனும் வேறு. இற்றைக்கு 250வருடத்துக்கு முன்னிருந்த கவிவீரராகவனும் வேறு. பிந்திய முத்தமிழ்க் கவிவீரராகவமுதலியாரும் வேறு) எழுபது வருஷம் அரசுசெய்து தன் சுற்றமும் குடிகளும் வயிறலைத்திரங்கப் பரகதியடைந்தான். அவனுக்குப் பின் சேதிராயனும் ஆண்சந்ததியின்றி இறந்தான். தொண்டைநாட்டரசனாகிய தொண்டைமானுடைய சனங்களாய் யாழ்ப்பாணத்திலிருந்தோர் தொண்டைநாட்டிலிருந்து ஒருவர்பின்னொருவராய் வரும் உப்பதிகாரிகளால் ஆளப்பட்டு வந்தார்கள். யாழ்ப்பாடி குடிகள் அரசின்றி நெடுங்காலம் வாழ்ந்தனராயினும் அவருட் பயிரிடுங் குடிகளே சந்ததிசெய்து, தொகையிற் பெருகினர். இராசசேவை செய்தும் அரண்மனைக்கு வேண்டும் காருககம்மியத் தொழில்கள் புரிந்தும் வாழ்ந்தோர் அரசனின்மையால் தொண்டைமண்டல முதலிய தேசஞ் சென்றனர். ஆயினும் நெடுங்காலம் யாழ்ப்பாணம் நாட்டுத்தலைவரால் ஆளப்பட்டு வந்தது.

### மழவராயன்

சேதிராயன் சந்ததியில் வந்த ஒரு கன்னிகையைப் பொன்பற்றியூரிலிருந்து வந்த மழவராயன் என்பவன் மணம் புரிந்திருந்தான். அவன் யாழ்ப்பாணம் அரசின்றிக் கெடுவதைக் கண்டு ஓரிராசகுமாரனை நாடிக் கொண்டுவருமாறு சோழநாட்டுக்குச் சென்றான். அங்கே சோழன் புத்திரனொருவன் மதுரையிலே கல்வி பயின்று வருகின்றானென்பது கேட்டுச் சோழராசாவினது அனுமதியோடு மதுரைக்குப் போய்ப் பாண்டியனுக்கு விண்ணப்பஞ் செய்தான். பாண்டியன் அக்கோமகனை அழைத்து, மழவராயன் விண்ணப்பத்தைக் கூறி, அவன் மனக்கருத்தை உசாவினான். கோமகன் அதற்கிசைய பாண்டியன் அவனையும் அவன் தேவியையும் வேண்டும் பரிவாரங்களும் சிறுசேனையும் திரவியமுங் கொடுத்தனுப்பினான். அவன் புறப்பட்டுத் திருவாரூருக்குச் சென்று தந்தையிடஞ் சிலநாள் வைகினான். அதற்கிடையில் மழவராயன் தொண்டைநாட்டுக்குப் போய், குடும்பத்தோடு சில பிரபுக்களையும் அவர்களோடு பயிரிடுங் குடிகளையும். காருககம்மியர்களையும், ஏனையசாதிக் குடிகளையும், கொண்டு வருவேனென அவ்விராசகுமாரன்பால் விடைபெற்றுச் சென்று, அநேக குடிகளை மரக்கலங்களிலேற்றியனுப்பிவிட்டு மீண்டு திருவாரூரை அடைந்தான்.


# சுவாருதி VIDEO/AUDIO
Sales & Rentals

Video/Audio Sales & Rental
World Wide System Transfer
PAL VHS, PAL DVD, S.VHS To VHS Or DVD
Audio Casette to Audio CD
We do Record your selection of songs

Tel: 416-754-0730
4810 Sheppard Ave E Unit 226 Scarborough, ON






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே இராசகுமாரனும் தந்தைபால் விடைபெற்று அவன்கொடுத்த வரிசையோடு கோடிக்கரை வழியாக யாழ்ப்பாணத்தை அடைந்து, இங்குள்ள குடிகளும் நாட்டுத் தலைவர்களும் எதிர்கொண்டுபசரிக்கச் சென்று நல்லூரை அடைந்தான். தொண்டை நாட்டினின்றும் புறப்பட்ட பிரபுக்கள், தங்கள் பத்தினிமார் கடல்யாத்திரைக் குடன்படாரெனக்கண்டு, தொண்டை நாட்டிலுள்ள பெண்ணையாற்றில் மரக்கலமேறி அக்கரை சென்று மீள்வோமென அவரை வஞ்சித்துக் கொண்டுபோய்ப்,, பெண்ணையாற்றுத் துறையிலே மரக்கலத்திலேற்றித் தாமுமேறி இரவெல்லாமோடி விடியவந்து, யாழ்ப்பாணத்திலே இப்போது பண்ணைத்துறை யெனப்படும் துறையிலே இறங்கினார். அவர்பத்தினிமார் தாமேறிய பெண்ணையாறும் யாழ்ப்பாணக்கடலும் ஒன்றுபோலிருப்பது கண்டு இஃதெவ்விடமென்றபோது , பெண்ணைத்துறையென்றமையால் அதுமுதல் அத்துறை பெண்ணைத்துறை (பண்ணைத்துறை) எனப்படுவதாயிற்று. அதுநிற்க

## கோயில்கள்

நல்லூரையடைந்த இராசகுமாரன் ஒரலங்காரமான பெரிய மாளிகையும் அரணும் மதிலும் அகழியும் சிங்காரவனமும் அமைப்பித்து, மந்திரி பிரதானிகளுக்கு மாளிகைகளும், அந்தணர் வணிகர் வேளாளர்களுக்கு இருக்கையும், வீதிகளும் யானைப்பந்தி குதிரைப்பந்திகளும், யானை குதிரையேற்றச் சாரிவீதிகளும் செய்வித்து நல்லூரைச் சிறந்த நகரமாக்கினான். நகரத்துக்குக் கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்கே வீரமாகாளி கோயிலையும், தெற்கே கைலைவி நாயகராலயத்தையும், வடக்கே சட்டநாதர் கோயிலையும் கட்டுவித்தான். தனது புரோகிதராகிய கங்காதர ஐயருக்கும அவர் பன்னியார் அன்னபூரணியாருக்கும் ஏனைய அந்தணருக்கும் அக்கிரகாரங்களும் அமைப்பித்தான். அதன் பின்னர் ஓர் ஏரி தோண்டுவித்து, யமுனையிலிருந்து அந்தணரைக்கொண்டு காவடிகளில் எடுப்பித்த தீர்த்தத்தை அதில்விட்டுதற்கு யமுனையேரியெனப் பெயரிட்டான். இது நிகழ்தது கலி 3000ல்.(B.C. 101.)


தொடரும்........


சொகுசான பயணங்களை சுகமாக அமைத்துக் கொள்ள

**A-1 Travel & Tours**

ஒருமுறை தாயகம் சென்றுவரத் தயாராகி விட்டீர்களா?

- ஐரோப்பா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வசிக்கும் உங்கள் உறவுகளைக் கண்டு வர விரும்புகிறீர்களா?
- ஒரே செலவில் தாயகம் செல்லும் பாதையில் உறவுகளையும் கண்டு வர விரும்புகிறீர்களா?



இன்றே அழையுங்கள் 416-289-6114

a-1travelandtours@bellnet.ca

' எப்பொழுதும் எங்கள் கவனத்தில் நீங்கள் '




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் உலகத் தமிழ் மாநாடு

1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியான சில சுவையான செய்திகள்:

* 18வது நூற்றாண்டில் பாரிஸில் தமிழ் கற்பிக்கப்பட்டது.

பேராசிரியர் பில்லியாஜாட்.

* டச்சு அறிஞர்கள் 17, 18வது நூற்றாண்டுகளிலேயே தமிழ் நூல்களை மொழி பெயர்த்தார்கள். - லெய்டன் பல்கலைக்கழக அறிஞர் லேய்டன்.

* இலங்கையில் முதன் முதலாக 1842ல் "உதய தாரகை" என்ற தமிழ் சஞ்சிகை வெளியானது.

15ம் நூற்றாண்டில் 18 தமிழ்ப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. 1772ல் முதன்முதலாக மலையாள நூல் லத்தீன் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது.

- பேராசிரியர் தனிநாயகம் அடிகள்.

## திருவள்ளுவர்

உலகப் பொதுமறையாம் திருக்குறளை அருளிய சான்றோர் திருவள்ளுவர். எந்நாட்டவர்க்கும், எம்மொழியினர்க்கும், எவ்வினத்தவர்க்கும், எச்சாதியினர்க்கும், எக்கட்சியினர்க்கும், எக்கொள்கையினர்க்கும், எக்காலத்தவர்க்கும் பயன்படும் நூல் திருக்குறள்.

## ஜி.யு. போப்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வெஸ்லியன் சங்கத்தாரால் சமயத் தொண்டு புரிதற்காகத் தமிழ் நாட்டிற்கு அனுப்பப் பெற்றவர். தமிழ் கற்று திருக்குறளையும், திருவாசகத்தையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர். தாம் இறந்த பின், தமது சமாதிக் கல்லில், "Rev.G.U.Pope, a student of Tamil Literature" என்று பொறிக்குமாறு வேண்டிக் கொண்டவர். அவரது கல்லறையில் அவ்வாக்கியத்தை இன்றும் காணலாம்.

அவர் வாழ்ந்த காலம் 1820 - 1918

## கால்டுவெல்

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப வந்த அறிஞராகிய கால்டுவெல் தமிழ் கற்றார். தமிழின் பெருமையை உணர்ந்தார். தமிழ் ஓர் உயர் தனிச்செம்மொழியென்று கண்டார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் சிறந்த ஓர் ஆராய்ச்சி நூலை இயற்றினார். தமிழ் மொழியின் செம்மையை உலகில் பரப்பினார்.



The MORTGAGE Centre
We bring Canada's leading lenders to you.
PEROSNAL LOANS & LINE OF CREDIT (Up to $50,000 Un secured)
BUSINESS LOANS & LINE OF CREDIT CREDIT CARD
CONSOLLDATION LOAN
NO BROKEAGE FEES.
SAMEDAY APPROVEL.
WE DO FOR GOOD CREDIT AND NEW CREDIT
Residential. Commercial. Industrial.
- Switch at no additional cost
- No Legal or Appraisal cost
- 2nd Mortgage and Line of Credit
- Good, Bad, No Credit
- Discharged Bankruptcy
- New Immigrant program



Mobile:
416-918-7346
Office: 416-850-7070
Rajee Iyadurai
Mortgage Specialist
1560 BRIMLEY ROAD SUIT 217 SCARBOROUGH ONTARIO M1P 3O9




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GASA Restaurant
## Takeout- Catering



திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் அனைத்து கொண்டாட்டங்களுக்கும் தேவையான உணவு வகைகள் விசேட முறையில் தயாரித்து கொடுக்கப்படும். கனேடிய உணவு வகைகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**Tel: 416-321-1219**

**2950 Kennedy Rd, Unit 3 Scarborough, ON. (Kennedy & North of Finch)**

## The Moddcham Funeral Home

## மோட்சம் இறுதிக்கிரியை மண்டபம்




பிரிவும் துயரும் தவிர்க்க முடியாதது
அப் பிரிவிலும், எம் சாஸ்திர
சம்பிரதாயங்களுடன் இறுதிக் கிரியைகளை
நடாத்தி துயருறும் மனங்களுக்கு
ஆறுதல் அளிப்பதே எமது நோக்கம்.

**Tel:416-282-6999 Fax:416-282-6777**

**4242B, Kingston Road East, Toronto, Ontario - M1E 2M7**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகச் சிமிழ்

- பிரியமுள்ள கலாதரன்


கசாமுசாவென எங்கும் கூச்சலும், சத்தமும். தலைக்கு மேல் கடந்து செல்லும் வீரிடல்களில் பயம் இருந்தது, உற்சாகம் இருந்தது, பரசவம் இருந்தது, சந்தோஷம் இருந்தது. வீரிடல்கள், உற்சாக கூச்சல்களின் மத்தியில் உருண்டு கொண்டிருந்தது அந்த அதிசய உலகம்.

மனசுக்குள் இருந்த குழந்தைகள், அவிழ்த்துவிடப்பட்ட கோழிக் குஞ்சுகள் போல - எங்கும் எதிலும் ஏறி இறங்க, துள்ளிக் குதிக்க, எல்லாம் மறந்து குதூகலிக்க - 60, 50, 40, 30 என எங்கும் கொஞ்சம் பயம், கூட குதூகலம் என்று குழந்தைகள்...

நினைவுகளில் சிக்கிப் போயிருக்கும் வாழ்க்கையின் சிக்கு அவிழ்த்தால் - சிக்கல்கள் இல்லாத அந்த சின்ன வயது ஞாபகங்கள்தான் சிரிப்பை எடுத்து வருகின்றன. அதை மீண்டும் வாழ்ந்து பார்க்க - அழைப்பும், வாய்ப்பும் தருகின்ற அந்த வினோத உலகத்தில் ஓர் நாளில் - மீண்டும் குழந்தையாய்...

தைரியம் கூட்டி, எச்சில் விழுங்கி, வரிசையில் நின்று கொஞ்சம் வீறாப்போடு - வெளியில் நின்று பார்க்கும் உறவுகளை பார்த்து சிரித்து - தலையசைக்கும் போதெல்லாம் - உள்ளே உருளும் பயக் குமிழியை யாரும் காணா வண்ணம் பத்திரப்படுத்தும் அவஸ்தையை அனுபவித்திருக்கிறீர்களா?

ஏறி அமரும் போது கொஞ்சம் சந்தோஷம், கொஞ்சம் அச்சம் என கவலையாய் முகம் இருக்க - மெல்ல மெல்ல உயரே போகும்போது கொஞ்சம் 'ஜிவவென' பறக்கும் உணர்வும், பயத்தின் உணர்வும் பரவ, மேலே சென்று, நின்று, நிதானித்து, பின் வேகமாய் சரியும்போது - அடி வயிற்றில் கெட்டியாய் உணரும் பயமும், இறுகப் பிடிக்கும் கைகளும் கீழே எதையாவது ஊன்ற தேடும் கால்களும், யாரையும் கேளாது இறுக மூடிக்கொள்ளும் கண்களும், "ஐயோ, யாராவது நிறுத்தி தொலையுங்களேன்..." என வாய் வரை வந்து - வெட்கத்தால் ஊமையாகிப் போகும் வார்த்தைகளும், கடந்து செல்லும் அந்தசில வினாடிகள் அல்லது நிமிடங்களில் அனுபவிக்கும் அவஸ்தையை நீங்களும் அனுபவித்திருக்கிறீர்களா?

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

பல் வைத்திய நிலையம்

9:00AM - 9:00PM வாரத்தில் 7நாட்களும்

Dr. Iru Vijayanathan

குடும்ப பல் வைத்தியர்

3150 Eglinton Ave, E (Markham& Eglinton)

சந்திப்புக்கு அருகாமையில்

416-264-3232




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானத்திற்கு, மெல்ல மெல்ல வேகம் குறைந்து வந்து - அந்த சவாரி முடியப்போகும் நேரத்தில் பாதிக் கண்களால் பார்த்து - பின் விழிகள் விரிய - வெளியில் நிற்போரை ஒரு வெற்றிப் பார்வையோடு பார்த்தாலும் - கூடப் பயணித்த குழந்தைகளின் கூச்சலும், சிரிப்பும், குதூகலமும் - உள்ளே கொஞ்சம் பொறாமையை நிறைத்து வைக்க - அதை மீறி இறங்கி நடக்கும்போது - கலைந்திருக்கும் தலையை அலட்சியமாகக் கோதி, ஒரு தள்ளாட்டமான நடையுடன் - அது ஏறி இறங்கியதால்தான் ஏற்பட்டது என்பதை மறைத்து - ஒரு வெற்றிப் புன்னகையோடு - சந்திர மண்டலத்தில் இறங்கி திரும்பி சாதனை புரிந்தவன் போல் - பயத்தையும் - அடி வயிற்றின் கேவலையும் மீறி நடந்து வந்திருக்கிறீர்களா?...

அதன் பின்னர், இனி செத்தாலும் எதிலும் ஏறுவதில்லை என மனசுக்குள், அச்சடித்த - பத்திரம் ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியே வந்து வீரப் பிரதாபங்களை சொல்லிக் கொண்டு நகர. அடுத்த சவாரியின் அருகில் - 'ஏறுங்கோப்பா' என்று அப்போதுதான் மிக மிக அன்பாக மனைவி அனுப்ப 'இல்லையப்பா... குழந்தைகள் விளையாடட்டும்... அதுகள் ஏறட்டும்' என்று சொல்லி நகர்வதற்காய் பிரயத்தனப்பட - நெட்டி தள்ளி 'ஏறுங்கோப்பா...' நற நறவென்று பற்கள் அரைபடுவதை மெல்ல தவிர்த்து கொஞ்சம் சிரித்து - அசடு வழிந்து அதன் பின் மீண்டும் ஏறி அனுபவித்திருக்கிறீர்களா? அனுபவித்திருந்தால் - சொர்க்கமும் நரகமும் அதுதான் என உணர்ந்திருப்பீர்கள். சொற்ப வினாடி சொர்க்கமும் நரகமும் - அதிகமாய் கோடைகளில் விற்கப்படுகின்றன. பார்க்கலாம். மாறி மாறி வரும் பருவ காலங்கள். மாறி - வேறாகிப் போகும் எங்கள் பருவங்களில் எதிர்ப்படும் இந்த சொற்ப வினாடி சொர்க்கம் - நரகம். அகப்படலாம் இல்லை தப்பிக்கலாம். இரண்டிலும் ஏதோ ஒன்று கிடைக்க ஒன்றை இழப்போம்.

RESTAURANT, TAKEOUT AND CATERING

தரமும், சுவையும் குன்றாமல் அனுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட சிறந்த இலங்கை, இந்திய உணவு வகைகள். உங்கள் நாவுக்கும் வயிற்றுக்கும் திருப்தியளிக்கும் —



416 - 752 - 5760 2398 Eglinton Ave., E., (Kennedy&Eglinton) Scarborough, Ont., M1K 2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி

- கத்துக்குட்டி.

மனம் என்பது மலரைப் போன்றது. மிகவும் மிருதுவானது. உணர்ச்சிகளினால் உள்ளத்தில் ஏற்படும் விளைவுகள் மனிதனை சில வேளைகளில் முற்றுமுழுதாக மாற்றிவிடுகின்றது.

தோல்வி இந்த வார்த்தையை எவ் மனிதனும் விரும்பமாட்டான். மனித மனங்கள் தோல்விகளை எளிதாக தாங்க மாட்டாததே இதன் காரணம்.

இன்று சிறகுகள் நிகழ்சிக்காக என மனப்பார்வைக்கு சிறகு கட்டியவேளை தோல்வி எனும் வார்த்தையுடன் சிறகடிக்கின்றேன்.

வெற்றி கொண்ட மனிதனுக்கு எல்லாம் சுலபமாகவும் சர்வசாதாரணமாகவும் தெரிகின்றது. தோல்வி கண்டவனுக்கு வாழ்க்கையிலே விரக்தியுணர்வு பய உணர்வு மேலோங்குகின்றது. தோல்வி கண்டவனுக்கு சிறு கல்லும் பெரும் மலைபோலவும் வெற்றி கொண்டவனுக்கு பெரும் மலையும் சிறு கல் போலவும் தோன்றும். இவையெல்லாம் எம் மனதிலே ஏற்படும் தாக்கங்கள்தான்.

உண்மையில் தோல்விகள் என்பது தோல்விகள் அல்ல. வெற்றிகள் என்பது வெற்றிகளும் அல்ல.

எவனொருவன் தோல்வியைக் கண்டு துவளாமல் அடக்கத்ததுடன் மீண்டும் முயற்சிக்கின்றானோ அவனுக்கு நிச்சயமாக வெற்றியுண்டு. அதேபோல் வெற்றி மயக்கத்திலே மமதையடைந்து மயக்கத்தில் மூழ்கிவிட்டால் வெற்றியாளன்கூட தோல்விகளைச் சந்திக்கின்றான்.

எல்லோரைப் போலவே நானும்...
புதிதாகச் சொல்ல எதுவுமில்லை!

ROYAL LEPAGE

வீடு வாங்க விற்க

பரஸ்பர உறவு...பரஸ்பர பலாபலன்
அழையுங்கள் ...



த. சிவதாசன்
T. Sivathasan (TAM)
4218 Lawrence Ave. East
Toronto, ON, M1E 4X9

TEL : (416) 284 4751 CELL : (416) 804 3443



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே எதுவுமே நிரந்தரம் இல்லை. எனவே தோல்விகள் வெற்றியாகலாம்.

தோற்றவனைக் கூட மரியாதையுடன் நடத்தும் வழக்கம் மனிதனுக்கு ஏற்பட வேண்டும். உதாரணமாக குத்துச் சண்டை வீரர்களைப் பார்த்தால் இரத்தம் சொட்ட சொட்ட போட்டியில் ஈடுபடுவார்கள். ஒருவர் வென்றபின் தோல்வியாளரை வென்றவர் அணைத்து ஆறுதல்படுத்துவார். இது சகஜம். சிலவேளை அன்று தோற்றவர் அடுத்த வெற்றியாளராக் கூட இருக்கலாம். வென்றவர் அடுத்த முறை அடிவாங்கலாம்.

வெற்றியின் மயக்கம் தோல்வியின் கலக்கம் இவையிரண்டையும் சாதாரணமாக ஒன்றிணைக்கப் பழகிவிட்டால் வாழ்விலே நின்மதியாக வாழலாம். புதுவெற்றிகள் சிலருக்கு தலைக்கனத்தைக் கொடுத்துவிடும். தலைக்கனம் கூட கூட அதுவே அவனுக்கு அவமானத்துக்கு அடிகோலும். வரும் பலவற்றை அது போவதற்கு என்றெண்ணவேண்டும்.

அறுப்பவை எல்லாம் அழிவுக்காக என எண்ணாமல் அதை விதைப்பதற்காகவே என எண்ணும் மனப்பான்மை வளர வேண்டும். சிறகுகள் கேட்டுகொண்டிருக்கின்றீர்கள். தோல்வி இது நிரந்தரமல்ல. இது மனது சிறகடிக்கும் நேரம்.கோடைக்கு பின் மாரி. மாரிக்குப் பின் கோடை இது யதார்த்தம்.


வெற்றியின் மமதையும் தோல்விக்கு வழிசமைத்துவிடும். வெற்றித் தேரில் ஏறியபின் தேரையும் குதிரையும் பார்த்து கொண்டிருந்தால் போதுமா? பாதையைக் கணித்து தேரை ஓட்டவேண்டும்.

புது வெள்ளத்தில் நனைந்தால் காய்ச்சல் வருவதுபோல் புது வெற்றியில் மூழ்கி யதார்த்தை மறந்தால் தோல்வியும் அவமானமும் ஏற்படும். அதேபோல் தோல்வி கண்டவனை அவமானப் படுத்துவதும் பழிவாங்குவதும் அறிவீனம். வெற்றியும் தோல்வியும் நிரந்தரமல்ல.

இதிகாசங்கள், புராணங்கள், சரித்திரம் இவற்றை நாம் ஆராய்ந்தால் வெற்றியாளர்கள் தோல்விகளையும், தோல்வியாளர்கள் வெற்றிகளையும் கண்டுகொள்கின்றார்கள். எவருடைய ஆசைகளும் பூரணமாக நிறைவேறியதாகச் சரித்திரம் இல்லை. பஞ்சணையில் துயிலவேண்டிய சீதை காடு சென்றாள்.

கடல் கடந்து சாம்ராஜ்யம் அமைத்த தோழர்கள்கூட ஆட்சியை இழந்தது சரித்திரம்.காந்தியடியின் கனவு இந்தியா எங்கே?
ஹிட்லரின் கனவு நிறைவானதா?
உலகம் என்பது ஓர் வாடகை வீடு. நாம் வாழும் காலங்கள் சிறிது. அதற்குள் எமக்கு எவ்வளவு ஆசைகள். வெற்றியில் வீறாய்ப்புக்கொள்வதும் தோல்வியில் துவள்வதும் தேவையா? இரண்டையும் சாதாரணமாக எடுத்துக் கொண்டால் நாம் பல மன உளைச்சல்களிலிருந்து மீண்டு விடலாம்.

வீடு வாங்க விற்க
இந்த மண்ணில் உங்களுக்கென
ஒரு சுய அடையாளம்
தேவைஅது தனித்
தன்மையானதோர் வீடு.
SPECIALIZED
IN
MORTGAGE
குறித்த நேரத்தில் குறித்த இடத்தில்
வீடு வாங்கவும் விற்கவும் ஆழசவயபாரு
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்.
Rajeef Koneswaran
Executive Realty
416-568-1078





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுமுறைக் காலம்

விடுமுறையில் போர் நிறுத்தம்
நடைமுறையில் உள்ளதால்
தாய் நாட்டைத் தரிசிக்க
விமானம் ஏறியல்லோ
விரைகின்றார் ஈழத்திற்கு
பல ஆண்டு காலம்
பார்க்காமல் இருந்த
ஈழத்து உறவுகளை
கண்டு கதை பேசி
மகிழ்வுடன் இருந்தாலும்

விடுமுறை முடிய
வாடகை வீட்டில் வாழ்வதற்காக
வாழும் மண்ணுக்கு
வந்துதானே ஆகவேண்டும்
அந்நிய நாட்டில்
வேலையும் வீடுமாய்
வாழ்கின்ற நாம்
விடுமுறை நாளென்றால்
பூங்காவும் கடற்கரையுமென
அலைந்து திரிந்து

உழைக்கும் பணத்தை
பல செலவு செய்து
காலத்தைப் போக்கி நாம்
கனடாவில் வாழ்கின்றோம்.
தமிழ் ஈழத்தில் விடுமுறை
நாள் என்றால்

வீட்டைச் சுற்றி உள்ள
பனை தென்னை வாழை
தோட்டத்தைப் பார்த்து வந்தாலே
எத்தனை நாள் என்றாலும்
விடுமுறையில் ஓர் ஆனந்தம்
அதுவே எமக்கு பேரின்பம்.

வாழும் மண்ணிலோ
பார்ப்பதற்குப் பல
அதிசயங்கள் இருந்தாலும்
விடுமுறையில் சென்று நாம்
அத்தனையும் பார்ப்பதற்கு
பணந்தானே முக்கியம்
பணம் இல்லையேல்
பிணம் என்பது போல்
விடுமுறையில் நாம்
வீட்டில் இருந்தாலும்
நடைமுறையில் நன்றாய் வாழ
பணம்தானே எமக்கு வேண்டும்.

அதனால் விடுமுறைக்காலம்
பலமுறை வந்தாலும்
பல இடங்களைப்
பார்ப்பதற்குச் சென்றாலும்
பணந்தானே எமக்கிங்கு தெய்வம்
அதைத்தேடவே நாம் படும் துன்பம்
வார விடுமுறை வந்தாலே பேரின்பம்

என்றும் உங்களை நேசிக்கும்
கவிப்புயல்
கி. பத்மராசா

## விடுவிப்போம் விடுகதைகள்

01. ஓடும் என்பார்கள் அது ஓடாது. அது என்ன?
02. மூடி திறந்ததும் மூக்கைத் துளைக்குது. அது என்ன?
03. குப்பை பெருக்கும் சொந்தக்காரக் கூட்டம் அது எது?
04. நெய்யாதது ஆனால் தையாமல் தீராது. அது எது?
05. பூக்காமல் பிறந்த காய். பொரிக்காமல் கிடைக்கும் காய் என்ன காய்?
06. சிவப்புச் சிப்பாய்க்குக் கறுப்புக் குல்லா அது எது?
07. அறைக்கு மேலே கீழே ஐந்தைந்து அடுக்குகள். அது எது?
08. தந்தைக்கோ அடி. தனயனுக்கோ படி. அது யாது?
09. வெள்ளை அரிவாள் வீதியில் கிடக்குது. அது என்ன?
10. பூவுக்குள் பூவைத்துப் போர்திய பூ. அது என்ன?

தொகுப்பு: சிராத்தி.

விடை 77ம் பக்கம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படமாகப் போகும் கதை

# உன்னிடம் மயங்குகின்றேன்

- அற்புதராசா -

எப்பவுமே பொம்பளைங்க அதை சொல்ல மாட்டாங்கடா நாமதான முதல்ல போய் நம்ம காதலை சொல்ல வேணும்.

சுரேஷ் ஜன்னலில் தெரியும் வானத்தை பார்த்துக் கொண்டே சொன்னான்.

ஆகாஷ் அவளை நான் உயிருக்கு உயிராய் லவ் பண்ணுறன்டா. அவளை பார்த்திலிருந்து அவளை என்னால மறக்க முடியல...

ஆனா அவ என் காதலை ஏற்றுக்கொள்ளுவா என்பதில்தான் எனக்கு பயமா இருக்கு. ஏன் என்று சொன்னா அவங்க குடும்பத்துல ஒன்னுமே இல்லாத என்னை ஏத்துக்குவாங்களா?

இப்படி நிறைய சந்தேகம் எனக்கு இருக்குடா?

ஆனா ஒன்று நிச்சயம் நான் சுவேதா மீது வைச்ச காதல எப்பவுமே உண்மையானது, எப்பவுமே மாறாது...

அந்த வாசலின் அருகே சுவேதா வந்து நின்றதை யாரும் பார்க்கவில்லை சுரேஷ் பேசிய அனைத்தும் அவள் காதில் விழுந்தது.

அவள் கண்கள் பனித்தது. இதயத்தில் காதலின் வலி என் சுரேஷ் ஐ லவ் யூ...

செல்ல ராஸ்கல் ஏன்டா நீ என்னிடம் சொல்லவில்லை...

நான் என்ன மனசு இல்லாதவளா?

இந்த வார்த்தைகளைத்தானே நான் உன்னிடமிருந்து எதிர்பார்த்தேன்...

சுரேஷ்சிடம் தவறு விட்டு சென்று கைப்பையை எடுக்க வந்தவள் அவள் இதயத்தை அவனிடம் விட்டு விட்டுச் சென்றாள்.

தொடரும்....


SCARBOROUGH DENTAL OFFICE


416-757-9999



FAMILY DENTIST
DR.V.J. KISHEN KUMAR
General- Dentistry & Orthodontice

வாரத்தில் 7 நாட்களும் 9.00am-9.00pm சேவை வழங்கப்படும்

SCARBOROUGH DENTAL OFFICE
Lawrence / Birchmount Center
2155 Lawrence Avenue suite #10
Scarborough m1r 5g9







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு தரும் சிறப்பு

பரம்ஜீ

நாம் இருக்கும் வீடு, நாம் சுகமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு முக்கியமான ஒன்றாகும். நாம் வாழுகின்ற நாட்டையும், அதன் காலநிலைகள், சுற்றாடல்களைப் பொறுத்து அவற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள, எமது வசதிகளுக்கு ஏற்றவகைகளில் நாம் இருக்கும் வீடுகளை அமைத்துக் கொள்ளுகின்றோம். வீடு என்பது எமது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருந்தபோதும், நல்ல வசதிகொண்ட வீடு ஒன்றில் வாழவேண்டும் என்ற விருப்பம் சாதாரணமாக எல்லோரது எண்ணங்களிலும், கனவுகளிலும் இருப்பது பொதுவாகும். ஒவ்வொருவரும் இருக்கும் வீடுகளையும், வசதிகளையும் பொறுத்தே அவர்கள் வாழ்க்கையில் எந்தளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று பொதுவாகக் கணக்கிடுவதுண்டு. ஏழைகளின் வீடுகள் குடிசைகளாகவும், பணம் படைத்தவர்களின் வீடுகள் மாளிகைகள் போன்று இருப்பதையும் உதாரணமாகச் சொல்லலாம்.

நிலம் வாங்கி, நாள் பார்த்து, அத்திவாரம் வெட்டி, வீடுகட்டி பரம்பரை பரம்பரையாக அந்த வீடுகளில் வாழ்ந்த காலம் அன்று. பாடுபட்டு உழைத்து சேமித்த பணத்தை ஒரு வீடு வாங்குவதில் முதலிட்டு, அந்த முதலீடே எமது எதிர்காலத்தின் மூலதனமாக எண்ணி வாழுகின்ற காலம் இன்று. வாடகை வீடுகளில் காலத்தையும், பணத்தையும் வீணடிக்காமல், வசதிக்கேற்ற ஒரு வீட்டை முதலில் வாங்கி, அந்த வீட்டில் சிலகாலம் வாழ்ந்த பின்பு, புத்திசாலித்தனமாக வீட்டை நல்ல விலைக்கு விற்று வரும் ஆதாயத்தில் இன்னும் வசதிகூடிய வீடொன்றை வாங்கி கூடிய பணத்தை சேமிக்கவும், பணத்தைப் பெருக்கவும், அதனால் நாமும் எமது உறவுகளும் வசதியாக வாழ நாம் இருக்கும் வீடுகளே எமக்கு இந்த நாட்டில் உதவியாக இருக்கின்றன. வேலை செய்யும் காலங்களில் பாடுபட்டு உழைத்த பணத்தை நல்ல முறையில் திட்டமிட்டு வீடுகளில் முதலிட்டதனால் வந்த பயனை, ஓய்வு காலங்களில் பலர் அனுபவிப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்கத்திய நாடுகளில் காலம் காலமாக வாழ்பவர்களின் வெற்றியின் இரகசியமும் இதுவே ஆகும். வசதி படைத்த பலர் பல வீடுகளை வாங்கி வைத்திருப்பதன் நோக்கமே, வீடுகளில் முதலிடுவதால் நல்ல இலாபத்தைச் சம்பாதிக்கலாம் என்பதற்கேயாகும்.

JET TRAVELS





To All Destinations:
Better Price - Great Service

Tel:416-291-0177
Fax: 416-291-4049
4429 Sheppard Ave, East
Scarborough, ON. M1S 1V3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணில் கருவிழிகளில் புதிய அலங்காரங்கள் ! இது 2004 ம் ஆண்டின் நாகரிகம் !

உலகின் ஒரு புறத்தே மனிதன் மாற்றி உடுக்க உடையில்லாமல் தவிக்கிறான் என்னும் ஓலங்கள் முடிந்தபாடில்லை. இருந்தாலும் மேலை நாடுகளிலோ கண்களில் அலங்காரம் செய்வது கூட நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முற்காலத்தில் கண்களுக்கு வெளிப்புறத்தில் மை தீட்டுவது நாகரிகமாக இருந்தது. இப்போது அது கண்ணின் கரு விழிக்குள் புகுந்து நாடகமாடுகிறது. இங்கே 2004 ம் ஆண்டில் வரவிருக்கும் கண்களின் லென்ஸ்கள் தரப்படுகின்றன. கண்களை இப்படியெல்லாம் மாற்றமுடியுமாவென அதிசயிக்கத் தோன்றுகிறது. இப்போது தமிழகத்தில் இருந்து வரும் தொலைக்காட்சி நாடகங்களில் சில நீல விழிகளைச் செருகி நம்மவருக்கு நாடகம் காட்டித் திரிகிறார்கள். இனி இப்படியான லென்ஸ்களையும் போட்டு, பேய்க்கதைகளை எடுத்து 300 அல்லது 400 வாரங்கள் காலம் ஓட்டிவிடப் போகிறார்கள் என்பதுதான் அடுத்த கூத்து.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புடன் வாழ்ந்திட....

### மனை ஒன்று அமைந்திட

### அழையுங்கள்

### சாண் தயாபரன்

(சண்முகசுந்தரம் தயாபரன்)

# #1

**OFFICE**

**IN CANADA**

13 yr. Canadian Champion





**Shan Thayaparan**

**Sales Representative**

**Call: 416-567-7675**

Mortgage இலகுவாக
பெற ஒழுங்குகள்
செய்து தரப்படும்

Century 21

**Percy Fulton Ltd.**

Buy or Sell With Shan
and Collect AIR MILES

*SPECIAL RATE*
*FROM ROYAL BANK*
*FOR OUR CLIENTS*



Bus: 416-298-8200 Cell: 416-567-7675 Fax:416-298-6602
2911 Kennedy Road Toronto, ON. M1V 1S8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DENISON
## DISCOUNT PHARMACY

இலவச விநியோக சேவை

அழையுங்கள் 905-479-8999





எம்முடன் தமிழில்
தொடர்பு கொள்ளலாம்
இலவச விநியோகம்
தள்ளுபடி விலைகள்
முதியோருக்கும்
சமூகநல உதவி
பெறுவர்களுக்கும் $2.00
அறவிடப்படமாட்டாது

**FREE DELIVERY**
**DISCOUNTED PRICES**





## தொடர்புகளுக்கு:
## வேலு

## Tel:905-479-8999

**7380 McCowan Road, #9A Markham ON. L3S 3H8**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் 01-01-04

# காக்கைச் சிறகினிலே கண்ணம்மா....

-சிவவதனி பிரபாகரன்-



வெறுமனே 'வழிப்போக்கர்' உறவுதான் எனும் எண்ணத்தில் அலங்கரிக்கப்பட்ட கடவுளர் சிற்பங்களில் கண்களை பதித்திருந்தாள். அவளருகில் விழிகளில் தவிப்போடு அன்னம்மா. அவர்களை நோக்கி வந்த புரோக்கர் அன்னம்மாவிடம் "அவன்தான் மாப்பிள்ளை பெடியன்." என்றார். அவர் சொன்ன திசையில் தற்செயலாக விழிகளை திருப்பியவள் பார்வை 'அவனில்' குத்திட்டு நின்றது. அவன்... அவன்... உருண்டு பிரண்டு பின்னோக்கி ஓடிய காலப் புள்ளிகளின் நிறுத்தத்தில் அவன் தெளிவாக தெரிந்தான். "எப்படி இங்கு?" தன்னையே இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பவனிடம் இருந்து தன் பார்வையை மீட்டாள்.



Vijay A. Mariampillai
Mortgage Specialist

THE MORTGAGE ALLIANCE COMPANY OF CANADA TN

Cell: (416) 566-0621
Office: (416) 499-4700
Fax: (416) 499-9546
Website: www.tmacc.com/vijay
E-mail: vijay@tmacc.com/vijay

Toll Free: 1-877-366-3487

HEAD OFFICE
2005 Sheppard Ave. East.
Suite 200
Toronto, Ontario
M23 5B4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நாட்களில் தயாளினி கறுப்பு நிறமாக இருந்தாலும் மிகவும் அழகாகத்தான் இருந்தாள். இயல்பாகவே அவளுள் இருக்கின்ற துருதுருப்பு, கெட்டித்தனங்கள் அவள் அழகை மெருகூட்டின. அவளை நாடி வண்டுகளென பல இளைஞர் கூட்டம் மொய்த்த போதும் அவள் தெளிவாக அவர்கள் விண்ணப்பங்களை நிராகரித்து கல்வியில் கருத்தாய் இருந்தாள். அவ்வேளையில்தான் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதியாக வந்த அவன் அவர்கள் பாடசாலையில் அவளது வகுப்பில் இணைந்திருந்தான்.

இனக்கலவரத்தின்போது அவனது கொழும்பிலிருந்த வீடு எரிக்கப்பட்டு, தந்தை வெட்டிக் கொல்லப்பட்டு, தாயும் மகளுமாய் அனைத்தையும் இழந்து அவனது பேரன் பேர்த்தி வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்களது வீடும் அவளது வீடும் ஒரே தெருவில்தான் இருந்தன. அவர்கள் துன்பங்களை நன்கறிந்துணர்ந்தவர்களாய் மிகவும் ஆதரவாகவும் பாசமாகவும் அவளது குடும்பத்தார் அவனது குடும்பத்துடன் பழகினர். தயாழினியின் தந்தை அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ததோடு அவனையும் பாடசாலையில் சேர்த்துவிட்டார். தயாளினியின் பெற்றோரின் 'பிறருக்கு உதவும்' சுபாவம் அவளிடமும் இயல்பாக இருந்ததனால் பாடசாலையில் அவள் அவனுக்கு மிகவும் உதவியாக இருந்தாள். தந்தையை இழந்த அதிர்ச்சி, துக்கம் போக்க ஆறுதல் வார்த்தை கூறினாள். அன்பாக பழகினாள். கல்வியில் மனதை செலுத்த முடியாது தவித்த பொழுதெல்லாம் அவன் கவனத்தை திருப்பி கல்வியில் செலுத்த வைத்தாள். பல சமயம் அவனது பாடசாலை 'வீட்டு வேலைகளைக்கூட' அவளே செய்தான். பாடசாலையில் ஏனைய இளைஞர்கள் "நீ அவனை காதலிக்கிறாயா?" என கேட்ட போதெல்லாம் "காதல் எண்டால்த்தான் இப்படி உதவிகள் செய்து அன்பாக பழகவேணுமா?" என பதிலடி கொடுப்பாள்.

காலப்போக்கில் ரஞ்சித் மனதளவில் பூரணகுணமாகி கல்வியில் சிறந்து விளங்கத் தொடங்கினான். அவனது இயல்திறமைகள் வெளிப்படலாயின. இவ்வேளையில்தான் அவனுள் அவள் மீது காதலும் அரும்பிற்று. கள்ளமில்லாமல் பழகுபவளிடம் எப்படி சொல்வதென தவித்தான். ஒருவாறாக தன் மனத்தை திறந்து காட்டியும் விட்டான். முதலில் அதிர்ந்துதான் போனாள் தயாளினி. இதனை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதன்பின் அவனோடு பேசுவதையே குறைத்துக்கொண்டாள். தவிர்த்துக் கொண்டாள் என்றே சொல்லலாம். ஆனால் அவன் விடுவதாக இல்லை. சுற்றிச் சுற்றி வந்தான்.

வீடு விற்க! வாங்க!
Century 21
Affiliate Realty Inc
80 Corporate Dr 208
Scarborough, ON.
இலவச வீட்டு மதிப்பீடு
Quick Sale
இலவச Mortgage
Inspection Assistance
Sale Is Guaranteed
or I Will Buy!
அழையுங்கள்! PAT
416-894-1187
R. புஷ்பகாந்தன்(PAT) B.Sc. Eng.
Sales Representative




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக் காலம் நெருங்கிற்று. இலங்கையின் தரப்படுத்தல்களாலான பாரிய பாதிப்பை இளைஞர்கள் எதிர்நோக்கும் பல்கலைக்கழக நுளைவினை தீர்மானிக்கும் உயர் தரப்பரீட்சைதான் அங்கு வாழ்கின்ற இளைஞர்களது வாழ்வை நிர்ணயிப்பதாக அமைவதனை தாயாளினி நன்குணர்ந்து கல்வியிலிருந்து கவனத்தை திசைதிருப்பாமல் இருந்தாள். ஆனால் ரஞ்சித்தோ அவளின் பதிலுக்கான தவத்திற்காக காத்திருந்ததால் படிப்பில் கவனத்தை செலுத்தவில்லை. தன்னால் ஒருவனது வாழ்வு பாதிப்புறுகிறதே என்ற ஆதங்கத்தில் ஒருநாள் அவனை சந்தித்துப் பேசி புத்தி கூறினாள்.

"ரஞ்சித் நீங்கள் இப்படி செய்யிறது கொஞ்சமும் சரியில்லை. அப்பாவை இழந்து தவிக்கிற உங்கட அம்மாவை யோசிச்சுப் பாருங்கோ. அவவுக்கு வேற ஆரிருக்கினம் உங்களைவிட்டால்? நீங்களும் பொறுப்பில்லாமல் இப்படி படிப்பிலயும் கவனமில்லாமல் காலத்தை வீணாக்கினால் பிறகெப்படி?"

"அந்த இந்த கதையை விடும் தயாளினி. உமக்கு உண்மையிலேயே என்ட வாழ்க்கையில அக்கறை இருந்தால் தயவு செய்து என்ட காதலை ஏற்றுக் கொள்ளும். நீர் மட்டும் எனக்கு துணையா வந்தால் போதும். எதை வேணுமெண்டாலும் சாதிச்சு காட்டுவன். சரியெண்டு சொல்லும் தயா.''

தயாளினிக்கு அவனில் காதல் இருந்ததோ இல்லையோ ஆனால் அளவுக்கதிகமான அக்கறை அவன் மேலும் அவன் குடும்பத்தின் மீதும் இயல்பாகவே இருந்தது. எனவே தான் பின் விளைவுகளை சிந்திக்காமல் அவனுக்காக அந்த பதிலைச் சொன்னாள்.

"என்ன?"

''காதல் எண்டுபோட்டு சுத்தித்திரிய எல்லாம் நான் வரமாட்டன். பரீட்சைகள் முடியிறவரை உங்களை சந்திக்கவே மாட்டன். நீங்களும் படிக்கிறதில கவனத்தை செலுத்தவேணும். உங்கட பல்கலைக்கழக அனுமதியில்தான் எங்கள் காதல் தொடர்கிறதா இல்லையா எண்டது தங்கியிருக்கு. அதால படிப்பில கவனத்தைச் செலுத்துங்கோ.''

"Thanks தயாளினி. அப்ப நீரும் என்னை விரும்பிறீர் அப்படித்தானே? அது ஒன்றே போதும். நீர் சொல்லிறது எல்லாத்தையும் கேட்டு நடக்கிறன். என்ட வாழ்க்கையின்ட சோகங்களைப் போக்கி வசந்தம் வீசச் செய்த உமக்காக நான் என்னவும் செய்வன். ஆனால் நீர் மட்டும் எனக்கு வேணும்."

CitY TonerS

Toner Cartridges
Laser Printers
Fax Machines
Photocopiers



- All new Components
- High yield Cartridges
- Free cleaning For all Laser Printers
- Over night Delivery
- Free pick up on Empty Cartridges
- We buy your Empty Cartridges

1560 Brimley Rd., Suite 219, Toronto, ON M1P 3G9
Tel: (416) 430-0809 Fax: (416) 430-0810 Email: info@citytoners.com
www.citytoners.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிட்டு அவள் பதிலுக்கும் காத்திராமல் சென்றுவிட்டான். அவன் தீவிரமாக பேசியது அவளை அதிர வைத்தது. அவள் அவனை படிக்க வைப்பதற்காகவே அப்படி அவனிடம் சொன்னாள். இதனால் என்ன நடக்கப் போகிறதோ? என்ற நெருடல் எட்டிப்பார்த்தது.

அதன்பின் அவள் அவனை சந்திக்கவில்லை சிலகாலம். பரீட்சைகள் ஆரம்பித்தபோது மட்டும் அவள் அவளது நண்பி ஒருத்தியிடம் ஒரு கடிதத்தை கொடுத்திருந்தான். அதில் அவனது காதலின் ஆழ அகலங்களை ஒப்புவித்திருந்ததோடு பரீட்சைக்கு அவனை வாழ்த்தியும் இருந்தான். அந்த கடிதத்தின் காதல் வரிகள் அவள் மனதில் பதிந்ததுண்மை. ஆனால் காதலுக்கு அவகாசம் கொடுக்க அவளுக்கு நேரமிருப்பதாக தோன்றவில்லை. ஆனாலும் அவனது அந்த கடிதத்தை பத்திரமாக எடுத்து வைத்தாள்.

பரீட்சைகள் முடிந்தன. பதிலுக்காக காலத்தை வீணடிக்க வேண்டுமே என்ற வேதனை அவளுள்.

காலத்தை வீணாக்காமல் Computer வகுப்புக்கள் சென்று படிக்க ஆரம்பித்தாள். மறுபடியும் ரஞ்சித்தின் தொல்லை சுற்றிச் சுற்றி வந்தான்.

"நீர் சொன்னபடி நல்லாப் படிச்சு Exams உம் நல்லா செய்திட்டன். இன்னமும் ஏன் என்னட்ட இருந்து ஒதுங்கி நடக்கிறாய் தயா." அவனின் பேச்சில் தொனித்து எழுந்த ஒருமை விழிப்பு அவளுள் அதிர்ச்சியைத் தந்தது.

"உங்கட பரீட்சை விடை வரட்டும். அதற்குப்பிறகு பார்ப்பம். இப்ப என்னோட வந்து இந்த பாடங்களையும் படியுங்கோவன்" அவனது கவனத்தை திசைதிருப்பும் நோக்கில் சொன்னாள்.

"நிச்சயமா தயா. இந்த சாட்டிலையாவது உம்மை அடிக்கடி பார்க்கலாமே. உம்மோட பேசலாமே...."

அதன்பின் இருவருமாகவே வகுப்புகளுக்குச் சென்று வந்தனர். கணனிக் கல்வியில் அவனிடம் இயல்பாகவே அதிக ஆர்வம் இருப்பதை அவள் கண்டாள். ஊக்குவித்து அவனும் அவளுக்கு தெரியாதவற்றை சொல்லிக் கொடுத்தான். பாசமாக பழகினார்கள். ஆனால் 'காதல்' என்ற மோகஉணர்வோடு அவளை அவன் அணுகிய போதெல்லாம் அவள் விலகிச் சென்றாள். ஆனால் அவளுள்ளம் அவளுக்கே தெரியவில்லை. அவனை காணாத ஒரு நாளும் நாளாக அவளுக்கு இருப்பதில்லை.

இந்த இனிமையான காலங்களில்தான் அந்த கொடிய சம்பவம் நிகழ்ந்தது.




சாமி அன் சன்ஸ்
புத்தம் புதிய டிசைன்களில் வெளியூர்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரீக மங்கையர், ஆடவர், சிறுவர், சிறுமியருக்குரிய சகலவிதமான உடுப்பு வகைகளையும்தரமான 22K தங்க நகைகள்
தரமான CD மற்றும் ஓடியோ, கசற்றுக்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான துரித பணமாற்றுச் சேவை.
கதிரைகள், தலைப்பாகை, சோடனை நகைகள் வாடகைக்கு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
TEL: (416) 298-1598 FAX: (416) 298-2849
1884 B, KENNEDY ROAD,(At Ellesmere) SCARBOROUGH,ON.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடத்திற்கு 20000 லீட்டர் மைபூச வேண்டிய பாலம் !

இங்கே நீங்கள் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ பாலத்தையே காண்கிறீர்கள். இப்பாலத்தின் மேலுள்ள 65 வருடங்கள் பழமை மிக்க கேபிள்களுக்கும், குழாய்களுக்கும் மைபூசுவதற்கு மொத்தம் 20.000 லீட்டர் மை பாவிக்கப்படுகிறது. சுமார் 40 மை பூசும் தொழிலாளர்கள் வருடம் முழுவதும் இதற்காகவே பணியாற்றுகிறார்கள். கடலில் இருந்து வரும் உப்புக் காற்றினால் இதன் இரும்புக் கம்பிகள் துருப்பிடிக்கின்றன. பாலத்தின் சுமை தாங்கிகளை விரைவான துருப்பிடித்தலில் இருந்து தடுப்பதற்கு தொடர்ந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. இடுப்பில் பாதுகாப்புச் சங்கிலி பொருத்தி, தலை சுழலும் உயரத்தில் நின்று பணியாற்ற வேண்டியது இவர்களின் கடமை. மை பூசும்போது கீழே பார்த்தால் அவ்வளவுதான், கீழே விழுந்து விட்டால் கேட்கவே தேவையில்லை. ஆனால் உயரத்தில் தொங்கியபடியே மைபூசிப் பழகியவர்களுக்கு இது ஒரு விளையாட்டு அவ்வளவுதான்.




ACTION HONDA

HONDA

I Will Beat Any Price



Bad Credit? I Will Help You

Call me Now!!

416-704-1179

4334 Kingston Rd, Scarborough

Sothees




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர்.. மட்டும்...

## புரூட் நட்கேக்
## [Fruit-nut-Cake]

2 அவுன்ஸ் 'பம்பின் பிறிசேவ்' (Pumpking preserve)
4 அவுன்ஸ் சிறிய திராட்சை (Currants)
4 அவுன்ஸ் முந்திரி வற்றல் (Sultanas)
2 அவுன்ஸ் கன்டீட் பீல்' (Candired-peel)
2 அவுன்ஸ் முந்திரிப் பருப்பு (Cadju)
4 அவுன்ஸ் 'பட்டர்'
4 அவுன்ஸ் ரவை
1/2 ரின் ரின்பால் (Condensed Milk)
1/4 சுண்டு சீனி
2 தேக்கறண்டி(மட்டமாக) அப்பச் சோடா
1 சுண்டு தண்ணீர்
சிறிது உப்பு
தேவையான எண்ணெய்த தாள்(Oil Paper)

தயாரிக்கும் முறை
2"வரை உயரமும் 3/4 அடி சதுரமுமான ஒரு கேக்வேகவிடும் தட்டிற்கு உட்புறம் முழுவதாகச் சிறிது 'பட்டர்' பூசி இதன்மேல் இருபட்டாக எண்ணெய்த் தாள்(Oil Paper) இட்டு ஆயத்தமாக்கிக் கொள்க.

பழவற்றல்கள், முந்திரிப் பருப்பு ஆகியவற்றைச் சுத்தமாக்கிச் சிறிய துண்டுகளாக வெட்டி ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு 'பட்டர்', பால், சீனி, 1/4 சுண்டு தண்ணீர் ஆகியவற்றுடன் சேர்த்து அடுப்பேற்றி, ஒரு கொதியான பின் 2 நிமிடங்கள்வரை வேகவிட்டு இறக்கி, நன்றாக ஆறியபின் அப்பச்சோடா, மா, ரவை, உப்பு, மிகுதித் தண்ணீர் ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கலந்து கொள்ள.

இக் கலவையை, ஆயத்தம்பண்ணி வைத்துள்ள கேக் தட்டில் 1"உயரத்திற்கு இட்டு அழுத்தமாக்கி, சூடேறிய 'அவுணில்' (Moderate Oven) 1/2 மணி நேரம் வேகவிட்டு எடுக்கவும்.

பதமாக வெந்த கேக்கின் மேற்பாகம் சிவந்திருப்பதோடு, ஒரு சுத்தமான ஈர்க்கினால் குத்தில் பார்க்கும்போது ஈர்க்கில் மா ஒட்டிக்கொள்ளாது.

இந்தக் கேக்கைத் தட்டுடன் ஆறவிட்டுப் பின் துண்டுகளாக வெட்டிப் பயன்படுத்திக் கொள்க.

இந்தக் கேக் 'றிச் கேக்' (Rich Cake) வேலவேதான் நன்றாகவிருக்கும்.

இதை எமக்கனுப்பியவர் - C. ராணி.



N.K.S. DRAPERES & BLINDS

உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளுக்கும், கேட்டின் துணிவகைகளுக்கும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

தொடர்புகளுக்கு: சேகரா

MARKHAM 905-944-0218 416-738-3370

SCARBOROUGH 416-321-6420 416-738-3370






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிப் புரியாணி

தேவையான பொருட்கள்:

1 - முழுக் கோழி (900-1000 கிராம்வரை)
1 - கோப்பை நறுக்கிய வெங்காயம்
(சிறிய வெங்காயமாக இருந்தால் சுவையாக இருக்கும்)
1 - முழு உள்ளிப் பூடு
2 - பச்சை மிளகாய்
1 - தேக்கரண்டி கறிமிளகாய்த்தூள் அல்லது தேவையான அளவு.
1 - சிறிய இஞ்சித்துண்டு.
1 - மேசைக்கரண்டி கசகசா.
4 - மேசைக் கரண்டி நெய்
* - தேங்காய்ப் பால்(1 பாதி தேங்காயில் எடுத்தது) அல்லது 2 கப் பால்.
* - பசுமதி அரிசி 500 கிறாம்.
* - உப்பு தேவையான அளவு.
* - கறுவா 5 அல்லது 6 செ.மீ.அளவு.
* - கராம்பு 5

செய்முறை:

கோழியை பெரிய துண்டுகளாக (8 அல்லது 10) வெட்டவும். இஞ்சி, உள்ளி, பச்சை மிளகாய், கசகசா ஆகியவற்றை அரைத்து வைத்துக் கொள்ளவும். அதன்பின்னர் ஒரு தாச்சியில் நெய்யைச் சூடாக்கி கராம்பு, கறுவா, வெங்காயத்தைப் போட்டு தாளித்து அதனுடன் வெட்டி வைத்த கோழி இறைச்சியை போட்டு அதனுடன் அரைத்துவைத்திருந்த கலவையையும் சேர்த்து 10 நிமிடங்கள் வரை வேகவைக்கவும். வேறு ஒரு பெரிய தாச்சியில் தேங்காய்ப் பாலுடன் தேக்கரண்டி அளவு உப்புச் சேர்த்து அரிசியைக் கழுவி அதனுடன் சேர்த்து பால் வற்றும்வரை வேகவைக்கவும். அரிசி நீர்ப்பதம் இல்லாமல் வெந்ததும் நடுவில் இடம் நீக்கி முதலில் செய்து வைத்திருந்த கோழிக் கலவையை ஊற்றி மூடி மெதுவான சூட்டில் சோறு பதம்வரும் வரை வேக வைத்துப் பரிமாறவும்.

TOP BREAD BAKERY
டொப் பிறெட் பேக்கறி
டேக் அவுட் அன் கேற்றறிங்
கனேடிய அரசு அங்கீகாரம் பெற்றுச் சுகாதார அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் பலவருட அனுபவம் கொண்டவர்களினால் தயாரித்து வழங்கப்படுகிறது.
50 தொடக்கம் 200 வரையிலான சபைகட்கு தேவையான சைவ, அசைவ உணவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.


3-3251 Kennedy Road, Unit
Scarborough, ON.
Tel: 416-298-1561



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றங்களும் மரபணுக்களும் !

டி.என்.ஏ தொழில் நுட்பம் எதிர்கால உலகை மேலும் பல மாற்றங்களுக்குள் தள்ளிவிடும் என்பதை இனியும் மறுத்தல் முடியாது. மனிதனால் மரபணுத் தொழில்நுட்ப மூலம் உருவாக்கப்பட்ட டாலி ஆடு இந்தவகையில் முதலாவது படைப்பு.



காப்புறுதி, குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத்திட்டம், ஓய்வுதிய சேமிப்புத் திட்டம், அனைத்துக்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்.

ஸ்ரீதரன் துரைராஜா

**Associate Life Underwriter**

**Tel: 416-918-9771**

RBC Insurance

INDUSTRIELLE ALLIANCE

Manulife Financial





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது வேண்டுமா?

தலையைத் தூக்கிப் பார்த்தேன் இன்னும் கட்டில் சுத்திக் கொண்டுதான் இருந்தது. சாடையாக கண்ணைத் திறந்து பார்த்தேன். என் மனைவி ரூபி பத்திரகாளி கோலம் சற்றுத் தணிந்து ஏதோ ஒரு பேப்பரை பார்த்துக் கொண்டு இருப்பது தெரிந்தது.

கனகாலத்திற்கு பின்பு எனது நண்பன் தனது வீட்டிற்று அழைத்திருந்தான். நானும் எனது மனைவியும் மகனும் அங்கு போயிருந்தோம். மத்தியானச் சாப்பாட்டை எனது நண்பனின் மனைவி சமைத்துக் கொண்டு நின்றா. எனது மனைவியும் சேர்ந்துதான் சமையல் நடந்துகொண்டிருந்தது. எனது நண்பன் விஸ்க்கிப் போத்தலை கொண்டுவந்து மேசையில் வைக்க இருவரும் கொஞ்சம் கொஞ்சம் கிளாசில் ஊத்தி 'சியேஸ்' சொல்லி ஆரம்பித்தோம். நான் வாயில் கிளாசை வைத்துக் கொண்டு குடிக்கத் தொடங்க எனது மனைவி என்னை ஒரு பார்வை பார்த்தா. எனக்கு விளங்கிவிட்டது. இண்டைக்கு இருக்கும் விளையாட்டை. ஆனாலும் மனிசி வாய் திறக்கவில்லை. காரணம் எனது நண்பனின் மனைவி ஒன்றும் பேசாமல் தன்ரை மனிசன் குடிக்கும் பொழுது சந்தோஷமாக கதைத்துக் கொண்டு இருக்க தான் ஏன் வீணாக வாயைத் திறக்கவேண்டும் என்ற எண்ணமோ என்னமோ கண்ணால் மட்டும் சுட்டெரிக்கும் பார்வையை வீசிக்கொண்டிருந்தா.

நானும் வாயில் வைத்து கன நாள். சந்தர்ப்பத்தை ஏன் விடுவான். நானும் எனது நண்பனும் முந்தி சேர்ந்து குடித்து கும்மாளம் அடித்தகை மறக்கமுடியவில்லை. சும்மா ஒரு ஆசை கொஞ்சம் கொஞ்சமாக இருவரும் குடித்துக் கொண்டு இருந்தோம். நண்பனின் மனைவி கணவாய்ப் பொரியல், இறால் பொரியல் என்று 'ரேஸ்ட்'டுக்கு மேசையில் கொண்டு வந்து வைத்தா. பொரியலையும் சாப்பிட்டு விஸ்க்கியையும் குடிக்க அந்த மாதிரி இருந்தது. எனக்கு ஓரளவுக்கு ஏறிக்கொண்டு இருந்தது. பல்லுப்புடுங்க ஊசி போட்ட வாய்மாதிரி விறைத்துக் கொண்டு வருவதை உணர்ந்தேன். எவ்வளவு கவனமாக கிளாசை மேசையில் வைத்தேன் ஆனாலும் அது விஸ்க்கிப் போத்தலுடன் உரைஞ்சிக்கொண்டு எனது மனிசி என்னைப் பார்க்க வைத்தது.

ஸ்காபரோவில் தமிழ் மக்களுக்கென
தரமும், சுவையும கூடிய புதியதோர் உணவகம்
Mano
CATERING AND TAKE OUT
SRI LANKAN, INDIAN,
MALAYSIAN &
CANDADIAN CUISINE
Tel: 416-264-5550
2522 Eglinton Ave. East.
(Midland/Eglinton)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கண் கொஞ்சம் பூஞ்சலடித்தும் மனிசியின் அக்கினிப் பார்வை எனக்கு வடிவாகத் தெரிந்தது. என்னென்று இன்று வீட்டுக்குப் போய் சமாளிக்கப் போகிறேன் என்ற ஒரு தவிப்பும் எனக்குள் இருக்கத்தான் செய்தது. நான் செய்வது பிழை என்பது எனக்கு நன்கு தெரியும். ஆசை ஆசை ஆரைத்தான் விட்டது என்ன செய்வது. எனது நண்பனோ எனக்கு இன்னும் இன்னும் ஊத்தித் தந்து தானும் குடித்துக் கொண்டு இருந்தான். அவன் எதற்கும் அசையாதவன் போல் நிதானமாக இருப்பது எனக்கு அவமானமாக இருந்தது. எனது பேச்சில் சில மாற்றங்கள். நான் உளறுவது எனக்கு தெரிகிறது. இருந்தும் எனது கிளாசில் இருந்ததை ஒரே மடக்கில் குடித்துவிட்டு மச்சான் இனி சாப்பிடுவம் என்று சொல்ல "எல்லாம் ஆயத்தமாக இருக்குது வந்து சாப்பிடுங்கோ" என்று நண்பனின் மனைவி சொன்னா. நான் ஒரு மாதிரி கதிரையைப் பிடித்துக் கொண்டு எழும்பி மெதுவாக மெல்ல மெல்ல நடந்து சாப்பாட்டு மேசைக்குப் போனேன். கால்கள் ஒன்றோடு ஒன்று என்னையறியாமலே பின்னிப் பின்னி வருவதை உணர்ந்தேன். எனது மனைவியின் முகத்தைப் பார்க்கும் திராணி எனக்கில்லை. காரணம் இனி எனக்கு நடக்கப் போகும் கிரித்தியங்களை நினைத்து முடிவெடுக்க முடியாமல் கதிரையில் இருந்து சாப்பிட ஆயத்தப்படுத்தினேன்.

எனக்கு சாப்பிடும் எண்ணம் இருந்தாலும் சாப்பிட மனம் இல்லை. அப்படிச் சாப்பிடாவிட்டால் எனது மனைவி நினைப்பா எனக்கு வெறி என்று. நான் எனக்கு வெறி இல்லை என்று காட்டிக்கொள்வதற்கு எடுத்த முயற்சிகள் எல்லாம் என்னைக் காட்டிக் கொடுத்துக் கொண்டே இருந்தது. சாப்பிடுவம் என்று சோத்தைக் குழைத்து ஒரு கவளம் ஒரு மாதிரி கஷ்டப்பட்டு வாய்க்குக் கிட்ட கொண்டுபோனால் வாய் இருக்கும் இடம் மாறி கை அங்காலும் இங்காலும் ஆடுவதை நான் உணராவிட்டாலும் எனது மனைவி உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தா. ஆனால் ஒன்றும் பேசவில்லை. நண்பனின் மனைவி பகிடிவிட்டு கதைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டு இருந்தா. எனது மனைவி அடக்க ஒடுக்கமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தா என்று சொல்லுவ தற்கில்லை. ஏதொ சொல்வதற்கு வாய் உன்னித்ததை அந்த வெறியிலும் எனக்கு நன்கு கண்டுகொண்டேன். என்ன செய்வது தலைக்கு மேல் போய்விட்டது. அமைதி காக்கவேண்டும் என்று நான் நினைத்தும் நான் ஏதோ ஏதோ சொல்லுவது போல் எனக்குத் தெரிந்தது. சாப்பிட்டு முடிந்ததோ முடியவில்லையோ என்னால் கதைக்க முடியவில்லை. எழும்பி கை கழுவினது மட்டும் எனக்கு சிறிது நினைவு. ஒன்றும் கதைக்காமல் கதிரையில் இருந்து ஒரு பக்கம் தலையைச் சாத்திக்கொண்டு நித்திரை கொண்டிருப்பேன் என நினைக்கிறேன்.

எனது நண்பன் எங்கு போனான் எங்கிருக்கிறான் என்ற நினைப்பு எனக்கில்லை. "அப்பா வாங்கோ போவம்" என்ற எனது மகனின் குரல் கேட்டது. சரி என்றும் சொல்லாமல் மச்சான் நான் போட்டுவாறன் என்று நண்பன் இருக்குமிடமும் தெரியாமல் சொல்லிப் போட்டு காரில் ஏறி இருந்தேன். இனி நடந்தவைகளை நீங்கள் கொஞ்சம் கேளுங்கோ.


# GOWRIEMALAN ASSOCIATES

- Accounting
- Income Tax
- Real Estate
- Finance
- Immigration
- Social Services
- Auto Accident Benefit Claims



Tel: 416-742-0449 Fax: 416-744-3011




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு வெக்கமில்லையோ போன இடத்திலை இப்படிக் குடிக்கிறதே. கெடு தீந்ததோ அல்லது இன்னும் கிடக்கோ. ஏதோ காணததை கண்டமாதிரி. மானம் ரோசம் ஏதும் இருக்கோ. மிருக சாதி சீ இப்படியான ஒரு வாழ்க்கை வேண்டுமோ. ஒரு இடத்திற்குப் போனால் கட்டாயம் குடிக்க வேண்டுமோ. அப்படிக் குடித்தாலும் ஒரு மரியாதைக்கு கொஞ்சம் எடுத்து விட்டு சாப்பிட்டு வரவேண்டியதுதானே. விஸ்க்கியைக் கண்டதும் வக்கு வக்கென்று நாய்மாதிரி குடித்து மானம் கெடவேண்டுமோ? நான் சொல்லுறது கேக்குதோ, மண்டைக்குள் ஏறுதோ. உப்பிடி கெடுவென்றால் போத்தலை வாங்கி வீட்டில் வைத்து மதவிப் போட்டு இருக்க வேண்டியதுதானே. வெளியிலை போய் மற்றவர்களை அவமானப் படுத்த வேண்டுமோ?" என்று மனசி வாய்க்கு வந்தபடி திட்டத் தொடங்கி விட்டா. அத்துடன் பெண்களின் கடைசி ஆயுதமான கண்ணீர். அழத்தொடங்கிவிட்டா மனைவி.

நான் செய்த பிழையை இனி மறைக்க முடியாது. எனக்கு தலையை சுற்றிக்கொண்டு வந்தது. சத்தி வரும்போல் இருந்தது. நான் எப்பவும் இப்படியாக குடிக்கப் போகும்பொழுது எனது கால்சட்டைப் பொக்கற்றுக்குள் ஒரு 'சொப்பிங் பாக்' வைத்துக் கொள்வது வழக்கம். ஏனென்றால் சத்திவந்தால் அதை பாவிக்கலாம்தானே. கனடாவில் வெளியிலை சத்தியெடுக்க முடியுமோ? மெதுவாக அந்த பாக்கை எடுத்து அடக்கமுடியாமல் இருந்த சத்தியை அதற்குள் எடுத்தேன். சாப்பிட்ட சாப்பாடு, குடித்த விஸ்க்கி அத்தனையும் பாக்கில் நிறைந்து கொண்டு இருந்தது. மனைவியும் ஏதோ ஏதோ எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தா. என்னால் அதை கிரகிக்க முடியவில்லை. ஒரு மாதிரி சத்தி பாக்குடன் தலைகவிழ்ந்தபடி வீட்டிற்குள் நுழைந்தேன். பின் என்ன நடந்தது என்ற நினைவு தப்பி இப்பொழுது கட்டிலில் இருக்கிறேன்.

கொஞ்சம் கோப்பி குடிக்க வேண்டும் போல் இருந்தது. இப்பொழுது நேரம் என்ன என்றும் தெரியவில்லை. மெதுவாக ரூபி என்று மனைவியை அழைத்தேன். இன்னும் குடிக்கிற எண்ணம் இருக்கோ என்று சள் என்று எரிந்து விழுந்தா ரூபி. அத்துடன் நான் திரும்பவும் கப் சிப். இனி நான் குடிக்க மாட்டன் என்று மெதுவாகச் சொல்ல ரூபிக்கு திரும்பவும் வந்தது ஆத்திரம். உப்பிடி எத்தனை தரம் சொல்லியாச்சு. அந்தச் சொல்லுக்கு ஏதும்மரியாதை இருக்கோ? அந்த நேரத்திற்கு சொல்லுவது பிறகு ஏதும் கண்டால் சொன்னதை மறந்து திரும்பவும் குடிக்கிறது. வளர்ந்த பிள்ளைகள் வீட்டில் இருக்கினம் என்ட நினைப்பு இருக்கா? அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டாமோ? கடவுளேன் ஏன் எனக்கு இந்த வாழ்க்கையைத் தந்தார். ரூபி அழத் தொடங்கிவிட்டா. நான் என்னத்தைச் சொல்லுவது. வாய்திறந்தால் வீண் பிரச்சனை என்று சத்தம் போடாமல் திரும்பவும் கட்டிலில் படுத்துவிட்டேன். இனியும் நான் குடிப்பனோ எனக்கே சொல்லத் தெரியவில்லை.

- இயூஜின்




மேலதிக தொடர்புகளுக்கு:
ஆ. முருகதாஸ்
416- 286-3121 / 416-286-9417 Cell: 416-420-1309
Web: nathaswarathavil.com
E-mail:psa@nathaswarathavil.com

NATHASWARA THAVIL MUIC OF CANADA
நாதஸ்வர தவில் இசை - கனடா

P.O. Box: 41514, 1711 McCowan Road,
Scarborough, ON. M1S 5G8
Tel: 416-286-3121, 416-286-9417
Cell: 416-420-1309

எங்களிடம் தமிழீழம், தமிழ்நாடு இந்தியா, கனடா ஆகிய நாடுகளில் மிகச்சறந்த நாதஸ்வர தவில் வித்வான்கள் உள்ளார்கள் என்பதை அறியத் தருகிறோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தையல்ல, வாக்கியம்


- என். சொக்கன்

'காதல்' என்னும் வார்த்தையே இல்லாமல் எழுதப்பட்ட காதல் கதை இது ! சந்தேகமிருந்தால் உள்ளே தேடிப்பார்த்துக் கொள்ளுங்கள்!



அம்மாவுக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம் ?

விறுவிறுவென்று மூலைக்கு நடந்து, 'மணப்பெண்' என்று போர்ட் எழுதியிருந்த அறையைத் தட்டினான், 'அம்மா, அம்மா' சில நிமிடங்களுக்கு கதவு திறக்கப்படவில்லை. பொறுமையில்லாமல் மறுபடி தட்டியதும் கொஞ்சமாய்த் திறந்து குழல்விளக்கின் ஒளிக்கீற்று மட்டும் எட்டிப்பார்த்தது, பிறகு விமலாவின் தலைமட்டும் கொஞ்சம் தெரிந்தது, பாலாவைப்பார்த்ததும் தைரியமாய் முழுக்கதவையும் திறந்து வெளியே வந்து, 'நீயா ? இன்னா நைனா, இன்னா வோணும் உனக்கு ?' என்றாள் சரியாய் வராத சேரிபாஷையில். இப்போதுதான் தலையலங்காரம் பாதி நடந்திருக்கிறது என்பது தெரிந்தது, தலைநிறைய மல்லிகைப்பூவோடு அவள் ஜீன்ஸ் அணிந்திருந்தது பொருத்தமில்லாத வேடிக்கையாய் இருந்தது. ஆனாலும் அழகுதான், இன்னும் சின்னப்பெண்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாலேயே அவளைத் துரத்திக் கொண்டு அத்தை ஓடிவந்தாள், 'விமலா, நாங்க கதவைத் திறக்கறதுக்குள்ள உனக்கு என்னடி அவசரம் ?' அவள் விடாமல், 'ஏன் நான் திறக்கக்கூடாதா ?' என்றாள். 'சொன்னாக் கேளுடி, சின்னப்பிள்ளை மாதிரி எதுக்கெடுத்தாலும் மறுபேச்சு, இப்படி கொழாயைப் போட்டுகிட்டு வெளியே வராதே, மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பார்த்தா தப்பா நினைக்கப்போறாங்க' என்றதற்கு அவள் மறுபேச்சு பேசுவதற்குள் அவள் கையைப்பிடித்து இழுத்துப்போனாள் அத்தை. போகிறபோக்கில் விமலா, 'சித்தி, பாலா அண்ணன் வந்திருக்கு' என்று உள்ளே பார்த்துக் கத்தினாள்.

உள்ளேயிருந்து அம்மாவின் குரல் மட்டும் கேட்டது, 'என்ன விஷயம் பாலா ?'

'சொல்றேன், இங்க வாயேன்' உள்ளே போகவேண்டாம் என்று தயங்கி நின்றான்.

அம்மா சலித்துக்கொள்வது கேட்டது, முழுசாய் ஒரு நிமிடம் கழிந்தபிறகு கர்ச்சீபில் கைதுடைத்தபடி வந்துநின்று, 'சீக்கிரம் சொல்லு, எனக்கு தலைக்குமேலே வேலை இருக்கு' என்றாள்.

'இல்லைம்மா, தலைக்கு மேலே மல்லிகைப்பூதான் இருக்கு' என்று சிரித்தான்.

'கிண்டலா, சீக்கிரம் சொல்லுடா, இன்னும் தலை அலங்காரமே முடியலை, எனக்கு படபடன்னு இருக்கு'

கொஞ்சம் தயக்கமாய் இருந்தது, பிறகு தைரியம் சேர்த்துக்கொண்டு, 'யார்ம்மா அந்தப் பொண்ணு ?' என்று சட்டென்று கேட்டுவிட்டான். 'எந்தப்பொண்ணு ?' என்று அம்மா அவனை விநோதமாய்ப் பார்த்துக் கேட்டபிறகுதான் நாக்கைக் கடித்துக்கொண்டான், அம்மாவுக்கு அவளைச் சந்தித்தது தெரியாதே. 'என்கூட கொஞ்சம் வாயேன், காட்டறேன்'.

'ப்ச், வேலை இருக்குன்னு சொன்னேனே பாலா'

'இது அதைவிட முக்கியம்மா, ப்ளீஸ், வாயேன்' தாடையைப்பிடித்து கெஞ்சினான். 'அஞ்சே நிமிஷம், மீண்டும் உங்க ராஜாங்கத்துக்கே கொண்டுவந்து சேர்த்துடறேன்'

'சரி, சீக்கிரம் வா' கைக்குட்டையை இடுப்பில் செருகிக்கொண்டு அவனுக்கு முன்னால் விறுவிறென்று நடந்தாள்.

படிகளை நெருங்கியபோது அவளே படிகளில் இரண்டிரண்டாய் ஏறி வந்துகொண்டிருந்தாள். அம்மாவின் கையைப்பிடித்து நிறுத்திவைத்தான், 'இவதாம்மா'.

VIJAY RAJ
Sales Representative
வீடு வாங்க விற்க
416-431-7676
Fax: 416-431-9211
E-mail: vijay_exit@hotmail.com
EXIT REALTY
EXIT REALTY EXPERTS
1920 Ellesmere Rd. #206
Toronto ON M1H 2V6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அவளைப்பார்த்த அதே விநாடியில் அவளும் நிமிர்ந்து பார்த்தாள். இருவரும் புன்னகைத் துக்கொண்டார்கள். அம்மாவின் பக்கத்தில் பாலாவைப்பார்த்ததும் அவள்முகத்தில் சட்டென்று பரவியது வெட்கமா, பயமா, கோபமா தெரியவில்லை. சட்டென்று திரும்பி படிகளில் வேகமாய் இறங்கிப்போனாள். பாலா ஒன்றும்புரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

'இந்த பொண்ணா யார்ன்னு தெரியணும் ?' அம்மா தோள்களை உலுக்கிக் கேட்டதும்தான் நினைவுவந்து, 'ஆமாம்மா' என்றான் அவசரமாய். 'நம்ம ஜெயச்சந்திரம் பொண்ணுடா, திருப்பூர்ல இருக்கா'

'ப்ச், அதெல்லாம் எனக்கு வேணாம், இவளை நான் எங்கேயோ பார்த்திருக்கேன், அவளைக்கேட்டா ஃபோட்டோவில பார்த்திருக்கேன்னு சொல்றா' என்றான் கீழே ஒருமுறை பார்த்துக்கொண்டு.

'என்ன வக்கீல்டா நீ ? ஆறு மாசம் முன்னால பார்த்தது கூட மறந்துடுமா ? உனக்கு பொண்ணு பார்க்க ஆரம்பிச்சப்போ முதல்ல இவளைத்தான் பார்த்தோம், எல்லா பொருத்தமும் இருந்தது. நீதான் ஃபோட்டோவைப் பார்த்துட்டு பிடிக்கலைன்னு சொல்லிட்டே', அம்மா சொன்ன செய்தியின் அதிர்ச்சியிலிருந்து அவன் மீள்வதற்குள் அம்மா மீண்டும் மணப்பெண் அறைக்குள் போய்விட்டாள்.
அவன் காலியாய் இருந்த படிகளையே நம்பாமல் பார்த்துக்கொண்டிருந்தான். இவளையா நிராகரித்தேன் ?



Hi-Speed Internet
**Basic Cable**
புதிய இல்லம் செல்கிறீர்களா?
இலவச இணைப்பை பெறுவதற்கும்
**Digital Cable**
தமிழ் தொலைக்காட்சி சேவை
மற்றும் இன்ரநெற் தேவைகளுக்கும் அழையுங்கள்
**Sundar**
**416-564 6397**
**416-289-2082**
1st Month FREE
Back To School Spl.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கட கை கால்களை நம்பி.....

நேரம் 12மணி என்பதை சூரியனின் ஒளிக்கதிர்களின் அகோதரத்தில் விளங்கிக்கொண்டேன். பஸ் புறப்படுவதாய் தெரியவில்லை.

"சீ..வெளிக்கிட்டால் போயிடவேணும் இது..... அங்கநிண்டு, இங்க நிண்டு போறதுக்கிடையில வாழ்க்கை வெறுத்துப்போடும் பழஞ்சீலை கிழிந்ததாய் சுமித்தா புறு புறுத்துக் கொண்டாள்."பிள்ளைகள், வெளியல போகப்போறியள் மக்கள் இன்றைய நாட்டு நிலைமைகயைப்பற்றி கேட்பினம், பதில் சொல்லக்கூடிய நிலையில் நீங்கள் இருக்க வேணும். இந்தாங்கோ பேப்பர் இதுல முக்கியமான செய்திகளை வாசியுங்கோ" உதயாக்க ஈழநாதத்தை சுமித்தாவிடம் நீட்டினார்.

"ம்.... நான் சொன்னதில் என்ன பிழையிருக்கு முகாம விட்டு வெளிக்கிடவே 2,3 மணியாகும். பேந்தெங்க நிலைப்பாடுகளைப் புரியிறது... சுமித்தா முகத்தைச் சுழித்தபடி பத்திரிகையுடன் வந்தாள்.

"பிள்ளைகள் பேப்பரைதாங்கோ. நான் வாசிக்கிறன். கவனமா கேட்கவேணும். கேள்வி கேட்பன்" ஞானம் ரீச்சர் பேப்பர் வாசிக்கத் தொடங்கினார். அவர்களின் கவனம் வாகனச் சத்தம் கேட்கிறதா.....? என்பதிலேயே இருந்தது."அக்கா வாகனம் வந்திட்டுதா?" ஞானம் ரீச்சர் நிலைக்காவைக் கேட்டார். எங்கடநிலைப்பாடு புரிந்தது."ஓம் ரீச்சர் ஆக்களை அனுப்புங்கோ" வாகனத்தில் ஏறினோம் ம்...ஊ.......வாகனம் புறப்படுவதாய் இல்லை. சினத்துடன் சுமித்தா வதனாவைப் பார்த்தாள். வெய்யிலின் அகோரத்தில் சினக்கிறாள் என்பதை விளங்கிக் கொண்டு புரிந்தும் புரியாதவளாய்...."என்ன சுமித்தா சரியாய் வேர்க்குதென்ன?" சினந்த அவளுக்கு வதனாவின் நிமிண்டல் சிரிப்பூட்டியது. அவளின் கையை பிடித்தபடி வாகனத்தில் ஏறினாள்.பஸ் விட்டுவீதியாய் இருந்ததால், காற்று மேலில் பட சுகமாய் இருந்தது.

பஸ் பயணிக்கின்றது. வீதிகளில் மக்களின் நடமாட்டம் பெரிதாக இல்லை. ஒரு மாதத்திற்கு முன்பு பச்சைப் பசேலென காட்சியளித்த நெற்பயிர்கள், அறுவடை செய்யப்பட்டு பூசணிக்காய் வடிவில் உயர்ந்து இருந்தது. வீதி அருகு வயல் வெளி மர ஓர நிழல்களில் 200 மீற்றர் இடையிடை பெண் போராளிகள் ஆயுதங்களுடன், தலையில் சாக்குத்தொப்பி அணிந்து, வீதியால் செல்லும் வாகனங்களின் புழுதி முழுவதும் அவர்களில் தான் படிந்திருந்தது.கைவேலியடி காட்டுத் தொடர்ச்சிப் பிரதேசம், அது தான் விடியவே கிளியறின்போய் வருகினம். அணிக்கு விளக்கம் கற்பித்துக் கொள்கிறேன். நானும் ரீமில் நின்றிருந்தால் இப்ப இந்தக்கடமையில ஈடுபட்டிருப்பேன். சுமித்தா எட்டி எட்டி பார்த்தபடி வதனாவிற்கு விளங்கம் சொன்னாள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பஸ் ஒழுங்கை ஒன்றினுள் திரும்புகிறது. நடேசன் குடியிருப்பு தேவிபுரம் ஒழுங்கை போட் போடப்பட்டிருந்தது. மெயின் றோட்டில் இருந்து மிக அண்மையில் அந்தக்குடியிருப்பு."ஒருத்தரும் இறங்க மணமில்லைப் போல" சுமித்தா முண்டி அடித்துக் கொண்டு இறங்கினாள். வீதியையும் அரவணைத்துக்கிளைகள் பரப்பிப்படர்ந்திருந்தது ஆலயமரநிழலில். என்னை அந்த இடத்திலேயே இருக்கச்சொல்லியது. நிழலைப் பிரியமனமின்றி குடியிருப்புக்குச் சென்றேன். வாழைச் சருகால் அடைக்கப்பட்ட வேலி சிறிய மண்குடிசை முற்றத்தில் இரண்டு வாழைக்குட்டிகள். அருகே மாமரம் ஒன்று.

"வதனாக்கா வாங்கோ நாங்கள் இந்த வீட்ட போவம்" வெண்ணிலா அவள் கையைப்பிடித்துக்கொண்டே சொன்னாள்.

"வாங்கோ பிள்ளைகள், வாங்கோ வாங்கோ நீங்களும் என்ர பிள்ளைகள்தான்" உரிமையோடு வரவேற்றார். அம்மா புன்சிரிப்புடன் மருது வரவேற்கிறார். உயிரோடல்ல உயிரோட்டமுள்ள படத்திலிருந்து ஒரு கனம் அவனுக்கு தலை சாய்ந்து விட்டு அருகிருந்த குந்தில் அமர்ந்திருந்தோம்.

"அம்மா இங்க எத்தியாம் ஆண்டம்மா வந்தனீங்கள்? அடுத்து அவரிடம் கேள்வி கேட்கவேண்டிய அவசியமே இருக்கவில்லை.□எங்கட சொந்த இடம் திருகோணமலை கந்தளாய்பிள்ளை. அங்க இருந்து 76ம் ஆண்டு இனக்கலவரத்தில் இடம் பெயர்ந்தம். அண்டில இருந்து இன்றுவரைக்கும் இடம்பெயருறம்.... கந்தளாயிலிருந்து ஆலங்கேணிக்கு இடம் பெயர்ந்தம். 76ம் ஆண்டு 40 முஸ்லிம்காரர்ட கடையள் சிங்களக் பெடியள் கொழுத்திப் போட்டதாய்ச் சொன்னானுகள். எங்கள் பெடியள் கொழுத்தினது எண்டால் எங்களவிடுவாங்களே" இப்பவும் அப்படித்தான் நடக்குது. எங்கட தமிழ் மக்களை தாக்கிறதும் ஆயுதங்களைக் காட்டி, நாங்கள் விடுதலைப்புலிகள் என்டு, வேசம் போட்டு கப்பம்பறிக்கும், விடுதலைப்புலிகளுக்கும் எங்கட மக்களுக்கும்மிடையில பிரிவினை ஏற்படுத்தி தன்ரவசம் மக்களை எடுக்க அவன் கையாளுற தந்திரரோபாயங்களும் நினைவில் வந்துபோயின.

"ஐயோ நாங்கள் படாதபாடு கொஞ்சநெஞ்சமில்லப்பிள்ளை பிள்ளைகளைத் தூக்கிறதா, சமான்களைத் தூக்கிறதா. கடவுளே அவன் அடிக்கிற செல்லொன்று விழுந்து குடும்பத்தோட கொண்டுபோய் சேர்த்திடாதா என்று தோன்றிச்சு. இதத்தவிர அந்த நேரத்தில வேற ஒன்றுமே நல்ல வழியாத் தெரியேல்லபிள்ளை. அவனிட்டப்பிடிபட்டு சித்திரவதைப்பட ஏலாது. மிருகத்தனமா நடப்பாங்கள். (தொடர் 48ம் பக்கம்......)




Century 21

South Breeze Realty Inc.
7505 Kennedy Road,
Markham, Ontario L3R 0L8
Tel: (905) 477-5511

Thinking of Selling?
Call RAVI SIRISENA
For a Free Market Evaluation
of your Home
(416) 302 - 7653 ***
Commission as Low as 2.5%*

வீடு
வாங்க
விற்க

Ravi Sirisena, B.A.
Sales Representative

(416) 302-SOLD - (7653)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர். பகீரதன் (பகி)

**DR. BAHEE THURAIRAJAH**

# டாக்டர். சிவநேசன்

**DR. SHANMUGAM SIVANESAN**

## சகல பல்வைத்திய சேவைகளுக்கும்





## KENNEDY & FINCH

**3852 Finch Ave. E., Suite 207**
**Scarborough, ON**

**416-291-1085 416-728-0345**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Commercial Residential Investment**

Personal Income tax Returns
Book keeping payroll, GST & PST
Tax & Financial Consultiong

**Call me today for the service you deserve.**

**JESEETHA MANI, B.COM**
ஜெசீதா மணிவண்ணன்

416-746-9494
Cell: 416-566-0337
Res: 416-663-7030
Fax: 416-674-1682



**Jeseetha Mani,B.COM**
**Associate Broker**
**2001-2002 Platinum Award**

sutton group-commitment realty ltd. AN INDEPENDENT MEMBER BROKER
45 Woodbine Downs Blvd, Toronto, On M9W 6N5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mega Financial Services

A Division Of 1131169 Ontario Inc.

**தேவை**

காப்புறுதி முகவர்கள்
கல்விப் பதிவுச் சேமிப்புத் திட்ட முகவர்கள்

**WANTED**

INSURANCE AGENTS
RESP AGENTS

**SUB CONTRACTORS**

AGA CONTRACTS AVAILABLE FROM NATIONAL LIFE OF CANADA

- ✓ குறைந்த கட்டணத்தில் மிகுந்த காப்புறுதி வசதி
- ✓ வேறு காப்புறுதிக் கம்பனிகளால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி வசதி
- ✓ 85 வயது வரை காப்புறுதி வசதி
- ✓ RRSP & LIFE INSURANCE PLUS INVESTMENT



**Raj Nadarajah**
**President**
Tel: 416-293-5559 Ext.27
Cell: 416-666-1120
Mobile: 416-844-1120
Fax: 416-293-9409

- 10 ஆண்டுகள் கட்டியவர்கள் கட்டுப்பணத்தை மீட்கலாம்.
- அதற்குப் பின்னர் கட்டுப்பணத்தை வட்டியுடன் மீட்கலாம்.
- மீட்ட பின்னரும் அவர்கள் காப்புறுதியைத் தொடரலாம்.

**Mississauga Office**

**Thamara Rajeswaran**
Mortgage Specialist invis
Tel: 905-270-8754
Cell: 416-791-9999
Fax: 905-270-0802

தகுதி உண்டோ, இல்லையோ கவலைப்படாது
வீட்டு அடைமானத் தேவைகளுக்கு அழைக்கவும்.
கட்டணம் யாதுமின்றி செய்து கொடுக்கப்படும்:

## Mega Financial Services

In collaboration with 18 major Insurance companies

**4168 Finch Ave. East, Unit 306, Scarborough ON M1S 5H6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளமை துள்ளும் கனவு உலகம்!

"படம் ஆரம்பிச்சு முதல் இருபது நிமிஷத்துக்கு வசனமே கிடையாது. முழுக்க மியூஸிக்லயே மின்னலா காட்சிகள் நகரும். அதே போல கடைசி இருபது நிமிஷமும் டயலாக்கே இல்லை. படத்திலே இப்படி வித்தியாசமா புதுசு புதுசா பல விஷயங்கள் பண்ணியிருக்கோம். பொதுவா ஒரு படம்னா 70, 80 ஸீன்கள் இருக்கும். நாங்க 130 ஸீன்கள் பண்ணியிருக்கோம். பரபரனு இருக்கும் படம். இந்த வருஷத்தோட முதல் ஹிட் 'தூள்'. கடைசி சிக்ஸரா இது அமையும்!"






தனது 'எனக்கு 20 உனக்கு 18' படம் பற்றிச் சிலாகித்துச் சொல்கிறார் டைரக்டர் ஜோதிகிருஷ்ணா. படம் இந்த வாரம் ரிலீஸ்! "ரஹ்மான் புது ட்ரெண்ட்ல வித்தியாசமான பின்னணி இசை அமைச்சிருக்கார். இதுவரை தமிழ் சினிமாவிலேயே கேட்காத இசையா அது இருக்கும்" என்றவர், "காலேஜ் பின்னணியில் நகரும் காதல்தான்! இதுல புதுமை என்னன்னா, க்ளாஸ் ரூம்.. புரொபசர்கள்னு படத்திலே காட்டமாட்டோம். ஜாலியா இளமை துள்ளும் ஒரு கனவு உலகம்தான் உங்கள் முன் விரியப்போகுது!" என்கிறார் ஜோதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படம் ஆரம்பித்தபோது இவருக்கு 20 வயது.. த்ரிஷாவுக்கு வயது 18. "இப்போ படத் தலைப்பை 'எனக்கு 22 உனக்கு 20'னு மாத்திப்பீங் களா?" என்று கேட்டால், "ஹை.. இந்த ஜோக் நல்லாயிருக்கே.." என்று கடகடவெனச் சிரிக்கிறார் ஜோதிகிருஷ்ணா. "படம் ஆரம்பிச்சபோது, என்னையும் த்ரிஷா வையும் பற்றி கிசுகிசுக் கள் வர ஆரம்பிச்சது. அப்பல்லாம் த்ரிஷா என்னிடம் ரொம்ப வருத் தப்பட்டுச் சொல்வாங்க" என்றவர், "படத்தின் கவர்ச்சி மையமே த்ரிஷாதான். அவர் ஆடியிருக்கிற மூணு பாட்டும் சரியான விருந்து. அவருக்கு அறிமுகப்பட மாக வந்திருக்க வேண்டிய இந்தப் படம் நிச்சயமா அவருக்கு பேர் வாங்கித் தரும்" என்றார் நம்பிக்கையோடு.



" 'செரண்டிப்பட்டி' என்ற ஹாலிவுட் படத்தின் தழுவல்தான் இதன் கதை என்கிறார்களே.. நிஜமா?" | பேச்சோடு பேச்சாகக் கேட்டோம்.

"இப்படி யார் கிளப்பிவிட்டாங்கன்னே தெரியலை. ஃபாரின் பட ஃபார்முலாபடி, ஹாலிவுட் ஸ்டைல்ல செய்திருக்கிற படம் இது. அவ்வளவுதான். இன்னொரு விஷயம் தெரியுமா... இந்தக் கதையை நான் முதலில் சொன்னது கே.எஸ். ரவிக்குமார் சாருக்கு. அவரிடம் இரண்டு கதைகள் சொன்னேன். இரண்டுமே பெரிய பட்ஜெட் படம். 'பிரமாதமான கதை ஆனா, இதை நான் பண்றதைவிட, நீங்களே பண்ணினா பெட்டரா வரும்'னு சொன்னார். அப்புறம்தான் 'நட்புக்காக' கதை சொன்னேன். அதை அவர் எடுத்தார்.

அந்தக் கதைகளைச் சொன்ன போது அவர் எனக்குச் சொன்ன ஒரு அட்வைஸ்.. 'எந்தப் படம் பண்ணினாலும், பார்க்கிறவங்க ரெண்டு, மூணு ஸீன்லயாவது கண் கலங்கறாப்ல ஸீன் வெச்சுட்டா, படம் ஹிட்!'னு சொல்லித் தந்தார். இந்தப் படத்தில் அது உண்டு.

ஆனா, படத்திலே வர்ற காரெக் டர்ஸ் யாருமே அழமாட்டாங்க. 'கண்ல தண்ணீர் தேங்கின எஃபெக்ட் காட்டுங்க. தப்பித் தவறி ஒரு சொட்டுக் கண்ணீர்கூட கீழே விழுந்துடக் கூடாது'னு சொல்லிச் சொல்லிதான் படம் எடுத்தோம்" ஜாலியாகச் சொல்கிறார் ஜோதி.


invis Financial Group
MORTGAGES
Best Rate in Town
AHILA SENTHIL
MORTGAGE CONSULTANT
1st Mortgages
2nd Mortgage
Refinancing,
Transfers, Financing
COMMERCIAL BEST RATE
"Low Mortgage Rate Are Just The Begining"
Bad Bad Credit, Self Employed, Commision
100% Refinancing, 100% First Time Buyer
சகல விதமான நிதி தேவைகளுக்கும்
உடனடியாக தொடர்புகொள்ளவும்.
akitasenthil@invis.ca
416-895-4321






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் 01-01-04

# பாலுமகேந்திரா டைரக்ஷனில் 'உனக்கே உயிரானேன்'

'அழியாத கோலங்கள்', 'மூடு பனி', 'மூன்றாம் பிறை', 'வீடு', 'மறுபடியும்', 'சதிலீலாவதி' உள்பட பல தரமான-வித்தியாசமான படங்களை இயக்கி, தனக்கென ஒரு தனி பாணியை தக்க வைத்து வருபவர், "காமிரா கவிஞர்" பாலுமகேந்திரா. இவர் சமீபத்தில் டைரக்டு செய்த 'ஜுலி கணபதி', வெகுஜன ரசிகர்களால் பாராட்டு பெற்றபடம்.

புதிய படம்

இதையடுத்து பாலுமகேந்திரா டைரக்ஷனில் உருவாகும் புதிய படம், 'உனக்கே உயிரானேன்'.

சென்னை மற்றும் என்.எஸ். சி. ஏரியாவின் பிரபல வினியோகஸ்தரான கே.ஏ.சாய் சிதம்பரம், விஷ்வா பிலிம்ஸ் சார்பில் இந்த படத்தை தயாரிக்கிறார்.

தனுஷ்

இதில், கதாநாயகனாக தனுஷ் நடிக்கிறார். வித்தியாசமான கதாபாத்திரங்களில் தன்னை வெளிப்படுத்தும் தனுஷ், இந்த படத்திலும் ஒரு உணர்வுப் பூர்வமான இளைஞராக நடிக்கிறார்.

இவருக்கு ஜோடியாக ப்ரியா மணி நடிக்கிறார். இவர் பாரதி ராஜா டைரக்டு செய்து வரும் லட்சுமி மூவி மேக்கர்சின் 'கண்களால் கைது செய்' படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

கதை

இது ஒரு இளைஞனை பற்றிய படம். இளைஞர்களுக்கான படம்.


உறவுகளையும், அந்த உறவுகளால் ஏற்படும் புளகாங்கிதங்களையும், புல்லரிப்புகளையும் பற்றிய கதை.

படப்பிடிப்பு கடந்த 3-ந் தேதி பிரசாத் ஸ்டூடியோவில் தொடங்கியது. தொடர்ந்து 25 நாட்கள் படப்பிடிப்பு நடைபெறஇருக்கிறது.

இளையராஜா

இந்த படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார். கலை: ஜே.கே.

கதை-திரைக்கதை-வசனம்-ஒளிப்பதிவு- எடிட்டிங்-டைரக்ஷன்: பாலுமேகந்திரா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிஷாவின் திணறல்



மணிரத்னம் இயக்கி வரும் ஆயுத எழுத்து படத்தில் 3 கதாநாயகர்களும், நாயகிகளும் நடிக்கின்றனர். இந்த படத்தில் அனைவரும் சொந்த குரலில் பேசி நடிக்கின்றனர். ஆனால் படத்தின் ஹீரோயின்களான த்ரிஷாவுக்கும், இஷா தியோலுக்கும் தமிழ் பேசவரவில்லையாம். அவர்கள் படப்பிடிப்பில் திக்கித் திணறி தமிழ் பேசி வருகின்றனர். படப்பிடிப்புக்கு முன்பாகவே வசனங்கள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு விடுவதால் அவை முதலிலேயே த்ரிஷாவுக்கும், இஷா தியோலுக்கும் கொடுக்கப்படுகிறது.

அவர்கள் வீட்டில் உட்கார்ந்து மனப்பாடம் செய்து விட்டு வசனங்களை தெளிவாக பேச முயற்சித்து வருகின்றனர்.

## கண் பார்வையற்றவராக சினேகா



கட்ர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன் என்று கூறி வரும் சினேகா நல்ல கேரக்டர்களுக்காக காத்து கொண்டிருக்கிறார். இதனால் அவருக்கு படவாய்ப்புகள் குறைந்தாலும் சிறிதும் கவலைப்படுவதாக தெரியவில்லை. இந்த நிலையில் அது என்றபடத்தில் கண்பார்வையற்றவராக நடிக்க சினேகாவிற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது

இந்த படத்தை விஸ்வாஸ் சுந்தர் தயாரிக்கவுள்ளார். காசி படத்தில் விக்ரம் பார்வையற்றவராக நடித்து புகழ்பெற்றது போல் இந்த படத்தில் சிறப்பாக நடித்து சிறந்த நடிகை என்றபாராட்டை பெறுவேன் என்று கூறி வருகிறார் சினேகா

Sekar Jewellers

சேகர் நகைமாளிகை

Finest Quality 22K Gold &

Diamond Jewellery,

Birth Stones and Watches

3852 Finch Ave E, #-G04, Scarborough.

Tel: 416-299-5479






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகேஷ் சினிமாவுக்கு முழுக்கு



காலம் உள்ள அளவும் காமெடியில் மறக்க முடியாத மாமனிதர் நாகேஷ். நீர்க்குமிழி, எதிர்நீச்சல், திருவிளையாடல், சர்வர் சுந்தரம், காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனம்பாள், காசேதான் கடவுளடா, மைக்கேல் மதன காமராஜன் என நூற்றுக்கணக்கான படங்களில் தனக்கென தனி பாணியில் நடித்தவர்.விரசமில்லாத நகைச்சுவை உடலை வில்லாக வளைக்கும் வித்தியாசமான நடனம், சோகத்தை ஏற்படுத்தும் குணசித்திர நடிப்பு எனப் பல பரிணாமங்களை அந்தக் காலத் திலேயே திரையில் காட்டியவர். பெண்ணின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா? என்றசந்தேகம் பாண்டிய மன்னனுக்கு வர, தருமி என்கிறநாகேஷ் சிவ பெருமானிடம் கவிதை வாங்கி, அதன் மூலமாக "அந்த ஆயிரம்பொற்காசுகள் எனக்கே கிடைக்கட்டும்" என்கிறதிரு விளையாடல் காமெடியை இன்றைக்கு கேட்டாலும் குபீர் சிரிப்பு வரும்.

இதேபோல் 'காதலிக்க நேரமில்லை' படத்தில் ஓஹோ புரொடக்ஷன்ஸ் என்றபெயரில் சினிமா கம்பெனி ஆரம்பித்து குமாரி சச்சுவை கதாநாயகி ஆக்குவதும் தந்தை டி.எஸ். பாலையாவிடம் கதை சொல்வதும் ரசிகர்களை விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும். கிட்டதட்ட இன்றைய தனுஷ் போலத்தான் அந்தக் காலத்தில் நாகேஷின் உடல்வாகு. இதை வைத்துக் கொண்டுதான் தமிழ் சினிமாவை ஆட்டிப் படைத் திருக்கிறார். நாகேஷுக்கு இப்போது 70 வயதாகிறது. கடந்த 5ஆண்டுகளுக்கு முன்பே சினிமாவில் நடிக்க வேண்டாம் என்றமுடிவில் இருந்தார்.

ஆனால் பலரும் "நீங்க வந்தா போதும்... உங்களால முடிஞ்ச அளவுக்கு நடியுங்க" என்று கட்டாயப்படுத்தி அவரை சினிமாவில் தொடரச் செய்தனர். கடைசியாக காதல் கொண்டேன் படத்துடன் ஓய்வெடுத்துக் கொள்ளத் தீர்மானித்து வாய்ப்பு கேட்டு வருபவர்களிடம் நாகேஷ் மறுத்து வருகிறார்.

தினமும் காலையில் வாக்கிங் செல்கிறார். மாலையில் நண்பர்களை சந்திக்கிறார்.எனக்கு 70 வயதாகி விட்டதால் இதற்கு மேலும் ரிஸ்க் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. "காதல் கொண்டேன்" தான்எனது கடைசிப் படம் இனி ஓய்வெடுக்க விரும்புகிறேன் என்று நாகேஷ் கூறியுள்ளார். இப்போது வீட்டில் ஓய்வில் இருக்கும் நாகேஷ் தனது வாழ்க்கை அனுபவங்களை புத்தகமாக எழுதி வருகிறார்.


நீங்கள் வீடு வாங்க அல்லது விற்க

Sun Sanmugathas
Masters Diamond Club Award Winner
Sales Representative
#1 Office in Canada

Century 21. Percy Fulton Ltd.
Member Broker

இன்னல்கள் மறக்க இன்னிசை போதும்!
எலிவளையேனும் தனிவளை வேணும்!

2911 Kennedy Road
Scarborough (Toronto), ON M1V 1S8
Business 416-298-8200
Fax 416-298-6602
(24 Hr. Pager)
Direct 416-948-0693
E-Mail ssanmugathas@trebnet.com
Each Office Is Independently Owned And Operated

அடமானம் (Mortgage) இலகுவாகப் பெற ஒழுங்குகள் செய்து தரப்படும்



VIP Office
since 1990




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38ம் பக்கதொடர்ச்சி

தம்பலகாம்த்தில 10 வருசம் இருந்தம். ஒரே நோயும் நொடியும் தொழிலும் இல்ல. இப்பிடியே இருந்து என்ன செய்யிறது? குத்தகைக்கு இரண்டேக்கர் காணி விதைப்பமென்று வெளிக்கிட்டம். அடுத்த இடப்பெயர்வு. 86ம் ஆண்டு வடமாட்சிக்கு வந்தம் 2,3 வருசமாபடாத பாடு. நாயலைச்சல்தான்

என்ககு நாலு பிள்ளைகள் 3 பெடியனுக்கு இவள் ஒருத்தி தான் பெட்ட மூத்தவர் போராட்டத்துக்குப் போகப் போறன் எண்டு நிண்டார். தகப்பன் "நீ போறது சரி தம்பி O/L ரெஸ்ற் எடுத்துட்டுப்போ." என்றார் அவன் பிடியாய் நிண்டான். இப்ப வீரச்சாவு அடைந்த ராயு அவரிட்ட நாங்களே ஒப்படைச்சம் பிள்ள...1994 ஆம் ஆண்டு, 1996ம் ஆண்டு சாவகச்சேரியில வீரச்சாவடைத்திட்டார். பொடி கூட இல்லபிள்ளை..

96ம் ஆண்டு 10 மாதம் சூரியக்கதிர் நடவடிக்கையோட வன்னிக்கு இடம் பெயர்ந்தம். இங்க வந்து 6,7 மாதம் படாத கஸ்ரமில்லை. இந்த நிலையில் இளையவரும் போயிட்டார். மாவீரர், போராளிகள் குடும்பத்திற்கெண்டு இந்தக் காணி தந்தவையள்பிள்ளை இருக்கிறம். இவருக்கு மூத்தவன் நல்லா படிப்பான். எல்லாத்திலையும் நல்ல கெட்டிக்காரன். O/L லில் ஏழு பாடம் பாஸ் அவரும் வால் காட்டீட்டார். இவரும் இயக்கத்தோடு தான் வேலை நாங்கள் ரெண்டுபோர் தான் வீட்டில.

"அம்மா இப்ப பிரச்சினை இல்லத்தானே திருகோணமலைக்கு போகலாம்தானே"

"ஐயோ என்னால் திரும்பியோட முடியாது' பிள்ளை பட்ட அவலம்காணும்" இந்த குசுனி 10வது குசுனிபிள்ள. இயல்பு வரும் வரைக்கும் இந்த இடம்காணும்.

"அம்மா உங்களுக்கு நிறுவனங்கள் ஏதும் உதவி செய்து தந்ததில்லையா?

"பிள்ள எண்டைக்கும் எங்கட கை,கால்கள நம்பித்தான் நாங்கள் இருக்க வேணும். யாரும் உதவி செய்வாங்கள் எண்டு நினைக்கிறது பிழை பிள்ள."

அம்மாவின் பட்டறிவு பரிந்துரை. ம்...... எத்தினை பேர் எங்களுக்கு உதவுறத எண்டு வந்தவயள் என்ன நடந்தது. இப்பவுந்தான் நடுநிலை. தீர்க்கிறம் இந்தா,இந்தா எண்டு 2 வருசமாகப் போகுது ஏ-9 போக்குவரத்து தவிர என்னத்தக்கண்டம்

நினைவுகள் கனக்க பஸ்சில் ஏறுகிறேன். "வாங்கோ பிள்ளைக் நீங்களும் என்ர பிள்ளைகள் தான். எங்கட கை கால்களை நம்பித்தான், நாங்கள் இருக்கின்றோம்......."பஸ் வேகத்தைவிட என் மன வேகம் அதிகமாய் தாக்கிறது.



நபர் 1: அந்த வீட்டுல அழுறசத்தம் கேட்குதே. யாராவது மண்டையை போட்டுட்டாங்களா.

நபர் 2: இல்ல மெகா சீரியல் ஓடிக்கிட்டிருக்கு அதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரை மாற்றிய சாயாசிங்

மலையாள படங்களில் நடித்து வந்த மீரா ஜாஸ்மின் தமிழ் படங்களில் மும்முரமாகி விட்டார். இந்த நிலையில் 'திருடா திருடி' படம் கேரளாவில் வெளியிடப்பட்டது. இது மிகப் பெரிய வெற்றியை பெற்றுள்ளது.



இதைத் தொடர்ந்து மலையாள பட இயக்குனர்கள் சாயா சிங்கை மொய்க்கத் தொடங்கி விட்டனர். மீரா ஜாஸ்மீனுக்காக காத்திருந்த தயாரிப்பாளர்கள் அனைவரும் சாயா சிங்கை தங்கள் படங்களில் புக் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் சாயாசிங் என்றபெயர் மலையாளத்திற்கு பொருத்தமில்லை என்று பலர் கூறியதால் தன்னுடைய பெயரை 'மின்னு' என்று மாற்றியுள்ளார் சாயாசிங்.

Rashi Silks

*Importer and Retailer*

பட்டுச்சேலைகள், கைத்தறிச் சேலைகள், சிறுவர்க்கான ஆடைகள், மகளீர்க்கான ஆடைகள், ஆண்களுக்கான ஆடைகள், மற்றும் அனைத்து ஆடைகளும் மிகவும் மலிவாகவும், தரமாகவும் உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யப்பட இன்றே நாடுங்கள் எமது ஸ்தாபனத்திற்கு...



புதிய சீமா, வாணி, நியூ ரோஜா, பூர்ணிமா, நியூ துளசி, கிரிஜா, ஜெயந்தி சாரிகள் உண்டு.

**We also carry**

* Ladie's Wear
* Men's Wear
* Children's Wear
* Gift Items & Much More

ராசி சில்க்

416-264-1939


2649 EGLINTON AVE, E. SCARBOROUGH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஹீரோ

காமெடியில் கலக்கி வரும் விவேக்கிற்கு ஹீரோ ஆசை இன்னும் குறையவில்லை. 'விஸ்வநாதன் ராமமூர்த்தி' படத்தில் ராம்கியுடன் இணைந்து கதாநாயகனாக நடித்த விவேக் 'சர்வர் சுப்பு' என்றபடத்தில் மீண்டும் ஹீரோவாகியுள்ளார்.



இந்த படத்தில் அவருக்கு இரட்டை வேடமாம். 'சர்வர் சுப்பு' படத்தின் கதை 20 ஆண்டுகளுக்கு முன் சுருளிராஜனுக்காக உருவாக்கப்பட்டது.

அப்போது அவரை வைத்து படம் எடுக்க முடியாததால் விவேக்கை வைத்து புதிய முயற்சியில் இறங்கியுள்ளார் வி.சி.குகநாதன்.



# பேய் படம் எடுக்கும் பிரசாந்த்

ராம்கோபால்வர்மா இயக்கிய பூத் என்றபேய் படம் இந்தியில் சூப்பர் ஹிட்டானது. இந்தப்படத்தை ஷாக் என்றபெயரில் தமிழில் எடுக்க நடிகர் பிரசாந்த் முடிவு செய்துள்ளார். இந்த படத்தை அவரது தந்தை தியாகராஜன் தயாரிக்கவுள்ளார். பிரஹாந்த் தற்போது நடித்து வரும் ஜெய் படம் முடிவடைந்தவுடன் ஷாக் படத்தின் படபிடிப்பை தொடங்க திட்டமிட்டுள்ளனர். இந்த படத்தில் சிம்ரன், குஷ்பூ ஆகியோரை நடிக்க வைக்க அனுகிவருகிறார்கள்.


**Fine Line Kitchens**

**Manufacture and Installation**

*Buy Direct from Manufacturer*

15 வருட கனேடிய அனுபவமுள்ளவரின் தொழிற்சாலையில் இருந்து நேரடி விற்பனை

Our fine line quality includes..
Maple, Oak, Pine
PVC Thermo, Bird eye maple
Cherry, M.D.F



Call: Mahen
Tel: 905-206-0911/ 905-803-9265
416-436-5576 Fax: 905-206-1767
5040 Maingate Unit 1, Mississauga, ON.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு விரி

- செந்தமிழேந்தி.

சிகப்புக் கோலம் போட்டவளாய் கீழ் வானம், பூமிக்குக் குங்குமப் பொட்டிற்றாற் போல செந்நிறக் கதிரவன் கீழைக்கரையிலிருந்து எழும் நேரம் ஏலேலோ ஏலேலோ என்றவாறு கரைவலை இழுத்து வளைத்தபடி ஒரு தொகுதி மீனவர்கள், ஏலேலோ ஐலசா போட்டு கரை வந்து சேர்ந்த சந்தோசக் கூச்சலுடன் கட்டுமரக்காறர்கள், சயிக்கிள்களில் பெட்டிகட்டியபடியும், தலைகளில் பனையோலைப் பெட்டியை சுமந்தபடி பெண்கள் எல்லோரும் தங்களுக்குள் பலவாறு கதைத்துக்கொண்டும் வாய்த் தர்க்கம் செய்தவாறும் கற்கோவளம் கடற்கரையே வியாபாரக் கோலம் பூண்டிருந்தது. இவர்களின் சத்தத்திற்கு நடுவில் காட்டுக்கத்தலாய் அப்பா அப்பாஆஆஆ என்றவாறு ஓடிவந்தான். குமரன் என்னடா செல்வம் என்று குனிந்து வாரித்தூக்கினான் தன் மகனை. "ஏன் மோன இந்த பனிக்குள்ள வெள்ளன எழும்பி வந்தனி" என்றான் செல்லக்கிளி. அப்பா "இண்டைக்குத் தான் பள்ளிக்கூடத்திற்கு காசுகட்ட கடைசி நாள்" என்றான். பொறடா மோன கட்டுமரத்திலிருந்து மீனை இறக்கி ஏலக்காரரிடம் கொடுத்து விற்று காசு எடுத்துத்தாறன்'' என்றவாறே கட்டுமரத்தை நோக்கிப் போனான் செல்லக்கிளி. மீனுடன் ஏலக்கடைக்கு வந்தவனை விரைவு படுத்தினான் குமரன். அப்பா பள்ளிக்கு நேரம் போகுது "பொறடா பொறடா" என்றவன் கந்தசாமியண்ணை இதை முதல்ல கூறி வித்துத்தாங்கோ இவன் பள்ளிக்கு காசு கொண்டு போகவேணும். கந்தசாமியண்ண கூறத்தொடங்கினார். செல்லக்கிளி கொண்டுவந்த மீன் விளை, கலவாய்பாரை, சூடை, விரால் எல்லாம் கலந்திருக்கு. கூடை 180 ரூபா 190ரூபா 200... 215... 225 செல்லக்கிளியின் மனதில் சந்தோசம். ஆனால் குமரன் கெதியா விற்கவேணும். காசை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போக வேணும் என்று கடவுளிடம் வேண்டினான். அறியாப் பருவமெல்லோ. செல்லக்கிளியிடம் தனது கூறல்கூலி 10ல் ஒரு பங்கை எடுத்துவிட்டு கந்தசாமி அண்ணை 285 ரூபாவைக் கொடுத்தார். கூடவே இலவசமாக உவன் குமரனை பள்ளி அது இதெண்டு அனுப்பி காசை செலவளியாம உன்னோட தொழிலுக்கு கூட்டிக்கொண்டு போனா உனக்கும் உதவி கூடுதல் மீனும் பிடிக்கலா மெல்லே என்றாள். தன் அப்பா கை நிறைய காசுடன் நிற்பதையும், கந்தசாமியண்ணைவின் இலவச ஆலோசனையை செவிமடுத்த குமரனுக்கு தானும் அப்பா போல தொழிலுக்குப் போய் மீன் கொண்டு வந்த காசைக்காண ஆசை மலர்ந்தது. சிரித்தவாறே அதை அவன் தந்தையிடம் சொன்னான். அப்பா நான் பள்ளிக்கூடம் போகல்ல உங்களோட மீன் பிடிக்க வரப்போறன் என்றான். செல்லக்கிளிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. நீ வளர்ந்து படிப்பிலை பெரியவனாகி எங்களைப் பாக்கலாம். இப்ப பள்ளிக்குப் போ என்னை மாதிரியே காலங்காலமாக கட்டுமரம் வலிக்க நினையாதை என்று காசி அண்ணா சொன்ன

சிறகு விரி
பிறகு சிரி

என்ற பொன் மொழியைக் கூறி பள்ளிக்கு அனுப்பினான் செல்லக்கிளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பதற்கு முன்னர் போரில்லாத உலகத்தைக் காண ஆசைப்படுகிறார் ஏ.கே 47 இன் 'தந்தை'

இறப்பதற்கு முன்னர் போரில்லாத ஒரு சமூகத்தில் வாழ வேண்டும் என்பதே தனது ஒரே விருப்பம் என்கிறார். உலகின் மிக முக்கியமான அதிகளவு பயன்பாட்டில் உள்ள துப்பாக்கியமான **AK 47** ஐக் கண்டுபிடித்த கலாஷ்னி கோவ்.

கொலைகளும், போர்களும் ஓய்கின்ற அரசியல்வாதிகள் தமது பிரச்சினைகளை சமாதான வழியில் தீர்க்கப் பழகுகின்ற வகையில் உலகில் சமாதானத்தின் பரவலே தான் இவ்வுலகில் விட்டுச் செல்வதாக இருக்க வேண்டும் என்று கூறும் கலாஷ்னி கோவிற்கு இப்போது வயது 84. தற்போது உலகில் போர் நடைபெறுகின்ற இடங்களிலெல்லாம் அதிகளவு **AK 47** பரவிக் காணப்படுகின்றபோது தனது கண்டுபிடிப்பை தான் ஒருபோதும் ஒரு கொலை இயந்திரமாகப் பார்த்ததில்லை என்றும், சமாதானத்தின் கருவியாகவே அதனைக் கருதியதாகக் கலாஷினி கோவ் தெரிவிக்கிறார்.

**AK47** கண்டுபிடிக்கப்பட்டு ஏறக்குறைய 6 தசாப்த காலமாகிறது. "Automatic Kalashnikov -1947" என்பதன் சுருக்கமாக **AK 47**. 1947 இலேயே இந்தக் துப்பாக்கி கலாஷ்னி கோவால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆயுதத்தை ஜேர்மனிக்காவும் போருக்காகவுமே நான் உருவாக்கினேன். நான் அப்போது ஒரு படைவீரனாக இருந்தேன். படையினருக்கு அன்று மிக இலகுவான நம்பகரமான ஒரு ஆயுதம் தேவைப்பட்டது. என்று கூறும் கலாஷ்னிகோவ், **AK 47** பயன்படுத்தப்படும் போர்களுக்கெல்லாம் தனது கண்டுபிடிப்பான அந்தத் துப்பாக்கியே காரணம் என்று கூறப்படுவதை நிராகரிக்கிறார்.

'ஒரு போரை ஒரு தனி துப்பாக்கியே தொடக்குவதில்லை நவீன போரில் அனைத்து விதமான ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்காக இந்த ஆயுதத்திற்கும் போரிற்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறமுடியாது. என்று கலாஷ்னிகோவ் தெரிவித்துள்ளார்.

**AK 47** ஏனைய துப்பாக்கிகளை விட மிகக் சக்சிதமான ஒன்றாக இருக்கிறது. முதன் முதலாக உருவாக்கப்பட்ட போது இருந்ததைவிட தற்போது **AK 47** பாரம் குறைந்ததாக, எளிமையானதாக கொஞ்சம் மாறியுள்ளது. ஏனைய துப்பாக்கிகளைப் போலல்லாது **AK 47** மண், நீர், சேறு என எவற்றாலும் பாதிப்படை யாததாகும். குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடியது. அத்தோடு இதன் அளவு காரணமாக ஏனைய துப்பாக்கிகளை விட கடத்துவம் இலகுவாக உள்ளது. உலகில் அதிகளவு காணப்படும் இவ்வாயுதம் இதுவரை 50 மில்லியனுக்கும் மேலாக விற்பனையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது மாதம் 600 டொலர் ஓய்வூதியத்தை மட்டும் பெற்றுக்கொண்டு வாழும் கலாஷ்னி கோவ், தனது கண்டுபிடிப்பு ஆயுதம் மூலம் ஒரு சதத்தைக் கூட சம்பாதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் தனது கண்டுபிடிப்புகளுக்காக தனிக்காப்புரிமை பெறுவது சோவியத் பிரஜைகளுக்கு தடை செய்யப்பட்டிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.ஆயினும், இதற்காக அவர் சோவியத் (பின்னர் ரஷ்யா) அவர் குற்றஞ் சாட்டவில்லை. மாறாக தனக்கு ரஷ்யாவின் நாட்டுப்புறத்தில் ஒரு கோடைகால வீடு, மற்றும் 4 படுக்கையறைகள் கொண்டு ஒரு வீடு உட்பட பல வெகுமதிகளை அரசாங்கம் தனக்கு வழங்கியதாகக் குறிப்பிடுகிறார். பணத்தை விட வாழ்க்கையில் வேறு விடயங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன என்றும் அவர் தெரிவிக்கிறார். இவ்வாறான உணர்வுடையவராக கலாஷ்னி கோவ் இருக்கின்றபோதும், கடிகாரம், குடை போன்ற தனது உற்பத்திப் பொருட்களுக்கு கலாஷ்னிகோவின் பெயரைப் பயன்படுத்த விரும்பும் ஒரு ஜேர்மன் நிறுவனத்துடன் அவர் ஒப்பந்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோவியத் இராணுவத்தினருக்கு நாஸி ஆக்கிரமிப்பை எதிர்த்து தம்மைப் பாதுகாக்க உதவிய **AK 47** இன் எளிய நம்பகரமான தன்மையே ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் போராட்டங்களில் ஈடுபடும் சிறுவர்களால் அத்துப்பாக்கியை இலகுவாகப் பயன்படுத்தக் காரணமாக இருக்கிறது. உலகின் சில பகுதிகளில் குளிர்சாதனப் பெட்டிகள், கையடக்கத் தொலைபேசிகளை விட **AK 47** மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.படையில் உள்ள சிறுவர்களால் **AK 47** அதிகளவில் பயன்படுத்தப்படுவது குறித்து கேட்கப்பட்டபோது கலாஷ்னிகோவ் அதிகளவில் ஆத்திரப்படுகிறார். அவர்கள் கைகளில் **AK 47** ஐக் கொடுத்தது, தான் அல்ல என்று அவர் கூறுகிறார்

இதேவேளை, தான் சில சமயங்களில் மிகவும் பயனுள்ளதும் வன்முறையுடன் தொடர்பற்றதுமான புல் அறுக்கும் கருவி' போன்ற எதையாவது கண்டுபிடித்திருக்கலாம் என்று விரும்புவதாகவும் கலாஷ்னிகோவ் குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும் தனது கண்டுபிடிப்பான **AK 47** உலகிற்கு நன்மையே செய்துள்ளது என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்துவதுடன், அது குறித்து வருத்தமற்றவராகவும் கலாஷ்னிகோவ் இருக்கிறார்.

'**AK 47** ஏற்படுத்திய பாதிப்பை மட்டும் ஏன் மக்கள் என்னிடம் கேட்கிறார்கள்? பல நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தியுள்ளன. மொசப்பிக் அதிலொன்று அவர்களது தேசிய கொடியில் **AK 47** இருக்கிறது என்கிறார் கலாஷ்னிகோவ்

Private Institution

Mr. & Mrs. Shiva Sharmah
Near to McLevin & Neilson

Grade 10 and above - Physics
Grade 1 to University 1st Year - Maths

Res : (416) 724 8336
Cell: (416) 666 5515



New Batch Starts On Sep 2nd Week



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேட்டி காதல் திருமணம் செய்வேன்– மஞ்சரி பதில்கள்

உறவுகள் டி.வி. தொடர் மூலம் தமிழ் சின்னத்திரை உலகில் நுழைந்தவர் மஞ்சரி. அதன் பிறகு ஸ்வரங்கள், மந்திரவாசல், கிருஷ்ணதாசி, நிலா என்று பல தொடர்களில் நடித்து விட்டார். என்றாலும் அலைகள் தொடர்தான் டெலிவிஷன் நேயர்கள் மனதில் மஞ்சரிக்கு தனி இடத்தை ஏற்படுத்திவிட்டது. அந்த இடத்தை உயர்த்தி பிடித்து இருக்கிறது அண்ணாமலை தொடர். இந்த தொடரில் மஞ்சரி ஏற்றுள்ள தமிழரசி வேடம் மூலம் அவர் வில்லி ஆக முத்திரை குத்தப்பட்டுள்ளார்.



அந்த முத்திரையை தகர்த்து, தன்னால் எல்லா கேரக்டர்களிலும் நடிக்க முடியும் என்று சொல்லும்படி கோலங்கள் தொடரில் தேவயானியின் பாசமிகு தங்கை பாத்திரத்தை ஏற்றுள்ளார். சேத்துப்பட்டில் நடந்த கோலங்கள் தொடர் படப்பிடிப்பில் மஞ்சரியை சந்தித்துப்பேசியபோது, அவரது மறுபக்கத்தை உணர முடிந்தது. அவரது மினிப்பேட்டி...

**படிக்கிறகாலத்தில் டி.விக்கு வருவோம் என்று நினைத்துப் பார்த்ததுண்டா?**


# SELVAM PHOTOS

We specialized in wedding, Bithdays & any other Ocasions

திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் மங்கள வைபவங்களைச் சிறந்த வண்ணப் படமாக்கிட அன்றும், இன்றும், என்றும் உங்கள் செல்வம்ஸ்

SELVAMS PHOTOS
A.M.THIRUCHELVAM
Professional Photographer
25 Years Experience

**SELVAMS**
**Tel: 416-412-7568**
**Cell: 416-995-5945**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. நான் பிறந்து வளர்ந்த தெல்லாம் சிங்கப்பூரில். அப்பா தூதரக அதிகாரி. அம்மா ஒட்டல் வரவேற்பாளர். அதனால் நானும் ஒட்டல் நிர்வாகம் பற்றிதான் படித்தேன் .

ஏதேச்சையாக ஒரு டி.வி. நிறுவனத்தில் தயாரிப்பு அதிகாரியாக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சமயத்தில் என்னைப் பார்த்த குட்டி பத்மினி மேடம் என்னை டி.வி.யில் நடிக்க வைத்தார்.

உங்களை எல்லாரும் வில்லி என்கிறார்களே... இதை எப்படி போக்கப் போகிறீர்கள்? அண்ணாமலை தொடரைப் பார்த்து விட்டு எல்லாரும் என்னை வில்லி என்கிறார்கள். சிலர் என்னைப் பார்த்தாலே வில்லி மாதிரிதான் இருக்கு என்கிறார்கள்.ஆனால் உண்மையில் நான் ரொம்பவும் மென்மையான உள்ளம் கொண்டவள். என்னுடன் நெருக்கமாக பழகுபவர்களுக்குத்தான் இது தெரியும். வாய் இல்லா பிராணிகளிடம் நான் பாசத்தை காட்ட தயங்கவே மாட்டேன். சொன்னால் நம்ப மாட்டீர்கள்... நான் எனது ஆலப்பாக்கம் வீட்டில் 8 நாய்கள் வளர்த்து வருகிறேன். நான் ஆலப்பாக்கம் ஏரியாவுக்கு குடிவந்தபோது முதன் முதலில் என்னை உற்சாகமாக வரவேற்றது ஒரு தெரு நாய்தான். அந்த நாய் காரில் அடிபட்டபோது வேப்பேரியில் உள்ள புளுகிராஸ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்தேன்.அப்படிப்பட்ட என்னை நீங்கள் வில்லி என்று முத்திரை குத்தி ஒதுக்க முடியாது. உங்களுக்கும் உங்க மானேஜருக்கும் காதல்னு செய்தி அடிபடுதே, உண்மையா ?ஆரம்பிச்சுட்டீங்களா... என் மானேஜர் தேவகுரு என் உறவினர். அதனால இப்படி ஒரு வதந்தி பரவி இருக்கிறது .

ஆனா தெளிவா சொல்றேன். நான் நிச்சயமா காதல் திருமணம்தான் செய்வேன். காதலன் யார் என்றெல்லாம் கேட்காதீர்கள். கல்யாண ஏற்பாடு நடந்ததும் சொல்றேன், என்ன சரியா? இவ்வாறு மஞ்சரி கூறினார்.

YARL WINDOW BLINDS & DRAPERY

Your Dreams are our reality
for all your Blinds & Drapes

CUSTOM MADE...

VENETIAN BLINDS
VERTICAL BLINDS
ROLLERS BLINDS
PLEATED SHADES
DRAPERIES
SHUTTERS

CALL N.SELVAM:
416 332-8482
416 419-9247

For Beautiful Drapes Rely On The 25years Experience Of Our Workers







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுரேஷ்: என் அம்மாவும், மனைவியும் சிரிச்சு பேசிக்கிட்டிருக்காங்க.

மகேஷ்: அப்படியா? எங்கே?

சுரேஷ்: என் அம்மா எதிர்வீட்டுக்காரியுடனும் என் மனைவி பக்கத்து வீட்டுக்காரியுடனும் சிரித்துப்பேசி கொண்டு இருக்கின்றனர்.



ராணி: ஏண்டி உன் காதலரை காட்டறேன்னு சொல்லிட்டு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு வர்ற?

வாணி: நான்தான் சொன்னேனே, என் காதலர் என் மேலே "பைத்தியமா" இருக்கார்னு.


# நிதிப் பிரச்சனையா

வாகனக்கடன் மற்றும் அனைத்து நிதித்தேவைகளுக்கும் என்னை அழையுங்கள்
ஆகக் கூடியது 3 நாட்களில் உங்கள் தேவைகள் நிறைவேற்றப்படும்

Mortgage,
Bank Lons,
Line of Credit,
Credit Card

ரூபன்: 647-388-0859




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடம்புக்கு மருந்தாகும் சஞ்சீவி

வாழைப்பூ. இது வியாதிகளுக்கெல்லாம் சஞ்சீவி போன்றது. சற்று துவர்ப்பாக இருக்கும். பொடியாக நறுக்கி சிறிது சுண்ணாம்பையோ அல்லது அரிசி கழுவிய தண்ணீரையோ கலந்து சற்று வடிய வைத்தால் அதன் துவர்ப்புச் சுவையெல்லாம் நீராக இறங்கி விடும். அதன் பிறகு அதை அவித்து பருப்பு கலந்து சமைத்து உண்ணலாம். வெகு சுவையாகவே இருக்கும்.

பேயன் வாழைப் பூவில் துவர்ப்பே இருக்காது. அதை அப்படியே (பட்டைகளை நீக்கி) சமைத்துச் சாப்பிட லாம்.



இதைப் பதமாகச் செய்து சாப்பிட்டு வந்தால் வெள்ளை நோய் நீங்கும். ரத்த மூலம் போக்கும். உதிரக் கடுப்பு இருக்காது. கை, கால் எரிச்சல் நீங்கும்.

வாழைப் பூவை நறுக்கி சாறு எடுத்து அத்துடன் பனங் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் மேற்கண்ட பிணிகள் எல்லாம் உடனே குணமாகும்.

வாழைப்பூக் கறி பித்தம், வாதம் உடலில் ரத்தக் குறைவு, கிராணி, வயிற்றில் பூச்சி முதலிய வியாதி களுக்கு சஞ்சீவி போன்றது.

வாழைப்பூசாற்றில் தயிரைக் கலந்து உட்கொண்டால் ரத்தக் கிராணி, பெரும்பாடு முதலியவை நீங்கும். நால தோலா சாற்றில் இரண்டு தோலா தயிரைக் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை உட்கொண்டால் நல்ல குணம் தெரியும்.

வாழைப்பூவை இடித்து சிற்றாமணக்கு எண்ணெய்யை விட்டு வதக்கி, கைகால் எரிச்சல் உள்ள இடத்தில் ஒற்றடமிட்டால் எரிச்சல் போகும்.

வாழைப் பூவை வாரத்திற்கொரு முறையேனும் சமைத்துச் சாப்பிடுவது மிகவும் நல்லது

HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Grandview Realty Inc.
Realtor-Member
1085 Bellamy Rd, North, Suite # 212,
Toronto, ON. M1H 3C7

வீடு
விற்க
வாங்க

Direct: 416-735-6551
Office: 416-439-4800



SENTHITSEYON
KANDIAH (SEYON)
Sales Representative



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவருடன் சண்டையா ..?

கணவன்-மனைவிக்கிடையே சண்டை இல்லாத குடும்பங்கள் அரிது. அது இல்லா விட்டால் தாம்பத்தியத்தில் சுவாரசியமும் இருக் கா து. தம்பதியரிடையே சண்டை வரும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில விஷயங் கள்..... சண்டை முடிந்த பிறகு ஈகோ பார்த்துக் கொண்டு இருவரும் பேசாமலிருக்க வேண்டாம். நானாகப் போய் ஏன் பேச வேண்டும், மன்னிப்பு கேட்க வேண்டும் என இருவருமே ஒதுங்கி இருந்தால் சண்டை பெரிதாகுமே தவிர, முடிவுக்கு வராது. விட்டுக் கொடுத்துப் போனவர்கள் வீழ்ந்ததாக சரித்திரம் இல்லை. நீங்களாகவே சமாதானத் தூது அனுப்புங்கள்.

சண்டைக்குக் காரணம் நீங்கள்தான் என்பது உறுதியான விஷயமா? தயங்காமல் நீங்கள்தான் மன்னிப்பு கேட்க வேண்டும். மன்னிப்பு கேட்பதும், மன்னிப்பதும் மகத்தான குணங்கள்.

சண்டையின் போது நாகரிகம் கடைப்பிடியுங்கள். அநாகரிக வார்த்தைகளைப் பேசுவது, குடும்பத்தாரை இழுப்பது போன்றவை வேண்டாம்.

சண்டை போடுகிற போது அந்தச் சண்டைக்கான விஷயம் பற்றி மட்டுமே பேசுங்கள். கடந்த காலச் சம்பவங்கள் வேண்டாம். அது பிரச்சினையை மேலும் வளர்க்கும்.

குழந்தைகள் முன்னிலை யில் எக்காரணம் கொண்டும் சண்டை போடாதீர்கள். குழந் தைகளுக்குப் பெற்றோரே முதல் ரோல் மாடல்கள். சண்டையின் போது அவர்கள் மனத்தளவில் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப் புகள் அதிகம். இரண்டு கைகளும் தட்டப்பட்டால்தான் ஓசை. எனவே சண்டை ஆரம்பமாகும் எனத் தெரிகிற போது இருவரில் யாராவது ஒருவர் மவுனமாக இருந்து விடுவது என முடிவு செய்யுங்கள். எக்காரணம் கொண்டும் எதிர் பேச்சு பேசாதீர்கள். ஒரு கட்டத்தில் உங்களுக்கு எதிராக சண்டையிடுகிறவருக்கு அது அலுத்துப் போகும்.

சண்டை முடிந்த பிறகு இருவரும் சமாதானமானதும், அந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதியுங்கள். பொறுமையாகப் பேசுங்கள். மீண்டும் அது சண்டையில் போய் முடியும் எனத் தோன்றினால் அத்துடன் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வேறு வேலையைப் பாருங்கள்.

சண்டையிட்ட பிறகு மன்னிப்பு கேட்கவோ, சமாதானம் சொல்லவோ கூச்சமாக இருக்கிறதா? வார்த்தைகளால் மன்னிப்பு கேட்காமல், உங்களுக்குப் பிடித்த விஷயங்களைச் செய்து அதன் மூலம் சமாதானத்தைத் தெரிவிக் கலாம். ஆசையாய் ஒரு முத்தம், மன்னிப்புக் கடிதம் என எந்த வகையிலாவது அதைத் தெரிவிக்கலாம்.






வீட்டில் முதலீடு வீண்விரயமாவதில்லை.
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்

பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி

பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில் முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

www.themathuram.com

தேமதுரம்

**Param Gnana**
**Sales Representative**

Homelife GTA Realty Inc,

Cell: 416-230-1107
Bus; 416-321-6969
Res: 905-670-9969 Mississauga




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்க விற்க

Century 21

Affiliate Realty Inc.



**Mortgage**
**Lawyer**
**Inspection**
ஒழுங்குகள் செய்து தரப்படும்

# பஞ் சொக்கலிங்கம்


**Sales Representative**

**Res: 416-490-1340**
**Cell: 416-414-2374**
**Bus: 416-290-1200**

80 Corporate Drive. Unite # 208 Scarborough, ON.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் வைத்தியத்திற்கு விசேடமாக கிளிப் போடுவதற்கு




## Dr. M. ILLANGO

B.D.S. Dip. Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics

பற்களை ஒழுங்குபடுத்துவதில்
பயிற்சி பெற்ற பல் வைத்தியர்

BRACE FOR A GREAT SMILE

## DR. ILLANGO & ASSOCIATES

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204
Scarborough, ON
**(416) 292-7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அமுதம்



## சின்ன செய்திகள்



ஒருவகை முதலை இனங்கள், மிகப்பெரிய டினோஸர் விலங்குக்கு நெருங்கிய உறவு முறை கொண்டது. இவ்வகை முதலைகள் குளிர்ந்த மணற் பரப்பில் மட்டுமே

ம முட்டையிடும்.

சூரிய கதிர்கள் பலவிதமான அளவுகளில் சக்தியை உள்ளடக்கி உள்ளன. இந்த கதிர்களில் மஞ்சள், சிவப்பு, நீலம், அல்ட்ராவயலட், பச்சை போன்ற நிறங்கள் கலந்துள்ளன. அதனால்தான் வானவில் தோன்றும் போது வண்ணங்கள் காண்கிறோம். அமெரிக்காவின் கொலராடே என்ற இடத்தில் மிகப் பெரிய சூரிய அடுப்பு உள்ளது. இதன் சுற்றளவு 13.7 மீட்டர்.

மான்கள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருக்கும்போது தொலைவில் புலியோ, சிங்கமோ வந்தால், காற்றின் மூலமாக அதன் வாசனையை அறிந்து தப்பித்து விடும் திறன் கொண்டது.

பூனைகள் தங்களின் சிறிய உணவான எலியிடம் சிறிதுநேரம் விளை

ளயாடிய பிறகே அவற்றை கொன்று உணவாக உட்கொள்ளும். இது தங்களின் குட்டிகள் எவ்வாறு வேட்டையாட வேண்டும் என்று கற்றுக் கொடுப்பதற் காகத்தான் என்று விலங்கியல் வல்லு னர்கள் கூறுகின்றனர்.

சேஸ்பியன், ஸூபர்ப் சைபீரியன், ஜாவன், பாலி ஆகிய இவ்வகை நான்கு சிங்கங்கள் தான் உலகில் மிகவும் ஆபத்தானவை என்று உலக வனவியல் மையம் அறிவித்துள்ளது.

உலகிலுள்ள மொத்த பனிப் பொழிவுகளில் 90 சதவிகிதம் அண்டார்டிகாவில்தான் பெய் கின்றன. 2 கிலோமீட்டர் அளவுக்கு அடர்த்தியாக பனி படர்ந்திருக்கும்.

அமெரிக்கா, கனடா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள ரயில்களின் வேகம் மணிக்கு 500 கிலோமீட்டர்.

நத்தை, மாலஸ்க், லிம்பெட்ஸ், காக்லெட்ஸ், ஸ்கா லோட்ஸ் போன்ற உயிரினங்களுக்கு அவற் றின் முதுகில் ஓடுகள் அமையப் பெற்றிருக்கும்.

ஸ்கைலார்க் எனும் பறவை மிகவும் உரத்த குரலில் பாடும் திறமை கொண்டது. இதன் பாடும் திறமையால் மிகவும் பிரபலமானது.

எலுமிச்சை மரத்தில் 300 முதல் 400 வகை இனங்கள் இருக்கின்றன. சிலவகை எலுமிச்சை மரங்கள் 40 மீட்டர் உயரம் வரை வளரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம் வரலியா...

தூங்கச் செல்வதற்கு முன்பாக வெது வெதுப்பான பால் ஒரு டம்ளர் குடியுங்கள். பாலில் உள்ள டிரிப்டோஃபன் என்கிற அமினோ அமிலம் தூக்கத்தை வரவழைக்கும்.

படுக்கும் நேரத்தில் திகில் காட்சிகள் நிறைந்த புத்தகங்கள் படிப்பதோ, டி.வி, சினிமா பார்ப்பதோ வேண்டாம்.

தூங்குவதற்கு முன்பாகக் குளிப்பது நல்ல அமைதியான உறக்கம் தரும்.

மூச்சை நன்றாக இழுத்து வெளியே விடுகிற பயிற்சியை தினமும் செய்து வரவும்.

தூங்கும் நேரத்துக்கு இரண்டு மணி நேரம் முன்பாக சாப்பிட வேண்டும். வயிறு முட்ட சாப்பிடுவதும் தூக்கத்தைக் கெடுக்கும்.

மாலை நேரத்தில் காபி, டீ, கோலா போன்ற பானங்கள் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

வைட்டமின் பி, கால்சியம், இரும்பு, தாமிரம் போன்ற சத்துக் குறைபாடு இருந்தாலும் தூக்கமின்மைப் பிரச்சினை இருக்கும்.

இரவுச் சாப்பாடு முடித்த பிறகு காரசாரமான வாக்குவாதங்களில் ஈடுபடுவது வேண்டாம்.

நம்பிக்கை இருந்தால் கடவுளை அல்லது மனதுக்குப் பிடித்த நபர்களை, விஷயங்களை நினைத்தபடி ரிலாக்ஸ் செய்யலாம்.





**N.K.S. DRAPERES & BLINDS**

உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளுக்கும், கேட்டின் துணிவகைகளுக்கும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

தொடர்புகளுக்கு: சேதுரா

MARKHAM 905-944-0218 416-738-3370

SCARBOROUGH 416-321-6420 416-738-3370



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லவ் பண்ணப் போறீங்களா..?

காதலிக்கிற ஐடியாவில் இருக்கிறீர்களா? ஆளைப் பார்த்து விட்டீர்களா? அவருக்காக எதையும் இழக்கலாம் என்கிறதா உங்கள் மனசு? எல்லாம் இருக்கட்டும். காதலை உறுதி செய்வதற்கு முன்பாக நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள் இவை.... நினைவில் கொள்ளுங்கள்.

நீங்கள் அவரைக் காதலிக்கக் காரணம் என்ன என்று சீரியஸாக யோசியுங்கள். அழகு, அந்தஸ்து, பணம் போன்ற விஷயங்கள் லிஸ்ட்டில் முதலிடம் பெற்றால் அவசரப் படாதீர்கள். அந்தக் காதலை உறுதி செய்வதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் யோசிப்பது நல்லது.

அவரது மைனஸ் பாயிண்ட்டுகள் உங்களுக்குத் தெரியுமா? அவற்றை உங்களால் காலம் முழுவதும் சகித்துக் கொள்ள முடியுமா? கல்யாணத்திற்குப் பிறகு மாற்றி விடலாம் என்று மட்டும் அலட்சியமாக இருக்காதீர்கள். ஏமாந்து போவீர்கள்.

அவரது குடும்பப் பின்னணி, நண்பர்கள் வட்டம் பற்றியெல்லாம் தகவல்களைத் திரட்டுங்கள். அவருக்காக நீங்கள் உயிரையே கொடுக்கத் தயாராக இருப்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாதீர்கள். அதையே உங்கள் பலவீனமாக அவர் நினைக்கக் கூடும்.

அவருடன் வெளியே சுற்றுவது உங்களுக்கு அப் போதைக்கு ஆனந்தமாகத்தான் இருக்கும். ஆனால் அதை எவ்வளவுக்கெவ்வளவு தவிர்க்கிறீர்களோ அவ்வளவு நல்லது. நீண்ட நேரம் தொலைபேசியில் அரட்டையடிப்பதையும் நிறுத்துங்கள். பின்னாளில் அதற்கு நீங்கள் அடிமையாகவே ஆகக்கூடும்.

காதலரைப் பற்றிக் கனவு காணுங்கள். அவரைக் கணவராகவே நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் எல்லாம் உங்களுக்குள்ளேயே இருக்கட்டும். எதையும் அவரிடம் தெரிவிக்க வேண்டாம். அதற்கென ஒரு நேரம் உண்டு. அப்போது சொல்லிக் கொண்டால் போதும்.

காதலித்தவரைத்தான் நீங்கள் கைப்பிடிக்கப் போவதாகவே இருக்கட்டும். அதற்காக செக்ஸுக்கு மட்டும் இணங்க வேண்டாம். இந்த விஷயத்தில் ஆசைகளை அடக்கிக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். காதலிகிற காலத்தில் உங்களை செக்ஸ் உறவுக்குக் கட்டாயப்படுத்துகிற அதே நபர், கல்யாணத்திற்குப் பிறகு அதையே பெரிய குற்றமாக, உங்கள் நடத்தையை அவமானப்படுத்துகிற விஷயமாகப் பேசக் கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்களுக்குக் கடந்த காலத்தில் கசப்பான அனுபவங்கள் இருக்கலாம். அது காதலிலும் இருக்கலாம். உங்கள் குடும்பத்தில் சில வேண்டாத விஷயங்கள் நடந்திருக்கலாம். அவற்றைப் பற்றிய ரகசியங்களை எல்லாம் நீங்கள் உங்கள் காதலரிடம் ஒப்பித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. திருமணத்திற்குப் பிறகு நீங்கள் அவருக்கு நேர்மையான வராக இருந்தால் போதும். உங்களைப் பற்றிய ரகசியங்கள் உங்களுக்கு மட்டுமே சொந்தமானவை. விருப்பமில்லாத பட்சத்தில் எந்தக் காலத்திலும் அவற்றை நீங்கள் வெளிப்படுத்த வேண்டியதில்லை.

உங்கள் காதலரிடம் இரக்கத்தையும், நல்லெண்ணத்தையும் சம்பாதித்துக் கொள்ளும் எண்ணத்தில் எதையும் செய்யாதீர்கள். நீங்களும், உங்கள் காதலும் சீக்கிரமே அவருக்குப் போரடித்துப் போகக் கூடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் 01-01-04

# காதலர் நல்லவரா கெட்டவரா..

விரும்புபவை அனைத்தும் நல்லவைதான் என்று அர்த்தமில்லை. காதலும் அப்படித்தான். உங்களுக்குப் பிடித்திருக்கிற காரணத்தினாலேயே உங்கள் காதலர் நல்லவராகத்தான் இருப்பார் என்பதற்கில்லை. காதலர் எப்படிப்பட்டவர் என்று தெரிந்து கொள்ள இதோ சில டிப்ஸ்.... இதயத்தில் தொடங்கிக் கண்களில் முடிகிற காதலெல்லாம் கதைகளுக்குத் தான் சரி. நிஜ வாழ்க்கைக் காதல்களில் உடற்கவர்ச்சியே பிரதானம். உங்கள் காதலர் கண்களைப் பார்த்துப் பேசுவதில்லையா? சதா சர்வ காலமும் செக்ஸ் பேச்சுக்கே முக்கியத்துவம் தருகிறாரா? எதேச்சையாகத் தொடுகிற மாதிரி உங்களிடம் சில்லறை சில்மிஷங்கள் செய்கிறாரா? காதலர்களின் மன நெருக்கத்துக்கு செக்ஸ் அவசியம் என்கிற ஆண்களின் ரகமா உங்கள் காதலர்? அவரிடம் கல்யாணம் வரை ஜாக்கிரதையாகவே இருங்கள். அவருக்கு உங்களைவிட உங்கள் உடல் மீதும், இளமையின் மீதும்தான் மோகம் அதிகம். காதலிக்க ஆரம்பித்த புதிதில் அதைப் பற்றி வெளியே சொல்ல எல்லாருக்கும் தயக்கம் இருக்கத்தான் செய்யும். ஆனால் வருடக் கணக்கில் காதலித்தும், தன் காதலை நண்பர்கள், உறவினர்கள் என யாரிடமுமே சொல்லாமல் மறைத்துக் கொண்டிருக்கிறாரா? உங்கள் காதலர் உங்களுக்கு எந்த நிமிடமும் குட்பை சொல்லலாம். ஜாக்கிரதை! ஜன நடமாட்டம் அதிகமில்லாத இடங்களுக்கும், வெளிச்சமில்லாத பகுதிகளுக்கும் மட்டுமே உங்களை அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறாரா? பார்ட்டி உங்களைக் கவுக்கப் பார்க்கிறார் என்று தெரிந்து கொண்டு, அவருடன் தனிமையில் செல்வதைத் தவிருங்கள். உங்கள் காதலரைப் பற்றி உங்களுக்கு என்னவெல்லாம் தெரியும்? அவரது வேலை, குடும்பப் பின்னணி, நண்பர்கள் வட்டம் என எதையுமே உங்களிடம் சொல்லாமல் மழுப்பு கிறாரா? அவர் நம்பிக்கையானவர் இல்லை எனப் புரிந்து கொண்டு விலகுங்கள். உங்கள் வேலை, சம்பளம், சொத்து விவரங்கள் போன்ற வற்றைப் பற்றியே அதிகம் பேசுகிறாரா? அவருக்கு நீங்கள் முக்கியமில்லை. நீங்கள் கொண்டு வரும் பணம்தான் முக்கியம். இப்படிப்பட்ட நபர் உங்களுக்கு ஏற்றவர் இல்லை.உங்கள் காதலருக்கு உங்களைப் பிடிக்குமா? அப்படியானால் உங்களுக்குப் பிடித்த எல்லாமும் அவருக்குப் பிடிக்க வேண்டும். உங்கள் உறவினர்களையும், நண்பர் களையும் வெறுத்து ஒதுக்கும் ஆசாமியாக அவர் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் மட்டும்தான் வேண்டும் என நினைத்தால் அது சுயநலம். அந்த எண்ணம் பிற்காலத்தில் உங்கள் வாழ்க்கையின் அமைதியைக் குலைத்து விடும். காதலிக்கிற காலத்தில் எல்லாக் காதலர்களுக்கும் பொஸஸிவ்னஸ் இருக்கும். அதில் தப்பில்லை. ஆனால் பொஸஸிவ்னஸின் அடுத்தக் கட்டம் சந்தேகம். அது அத்து மீறினால் ஆபத்து என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அண்ணனிடம், அப்பாவிடம், உறவுக்கார ஆண்களிடம் பேசினால்கூட சந்தேகப் புத்தியுடன் பார்க்கும், பேசும் ஆள் உங்கள் எதிர்கால நிம்மதியைக் கெடுக்கப் போகிற எமன் என முன்னாடியே தெரிந்து கொண்டு விலகுங்கள்.

நீங்கள் வேலை பார்க்கும் இடத்துக்கு திடீர் விசிட் அடிக்கிறாரா? நீங்கள் இல்லாத நேரமாகப் பார்த்து அலுவலகத்துக்கு ஃபோன் போட்டு உங்களைப் பற்றி விசாரிக்கிறாரா? உங்கள் தோழிகளிடம் உங்களைப் பற்றி விசாரிக் கிறாரா? இந்த மாதிரி வேவு பார்க் கிற ஆசாமியு டன் உங்களால் காலத்துக்கும் நிம்மதியாகக் குப்பை கொட்ட முடியுமா? அவர் நல்லவரில்லை என்று கண்டு கொள்ளுங்கள். விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை காதலிக்கும் போதிலிருந்தே அவருக்கு இருக்க வேண்டும். நீங்கள் அவர் வலையில் விழுந்து விட்டது தெரிந்து, எந்த விஷயத்துக்கும் உங்களை மிரட்டியே பணிய வைப்பதோ, எல்லா விஷயங்களுக்கும் நீங்கள்தான் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதோ சரி வராது. அப்படிப்பட்ட காதலைக் கண்ணை மூடிக் கொண்டு தூக்கி எறியுங்கள். காதல் என்றால் அது கல்யாணத்தில் முடிய வேண்டும். ஆனால் கல்யாணப் பேச்சை எடுக்கிற போதெல்லாம் உங்கள் காதலர் நழுவுற மீனில் நழுவுகிற டைப்பா? அப்போது அவருக்குக் காதல் என்பது டைம் பாசிங். ஒரு வேடிக்கை. விட்டு விலகிடுதல் உங்களுக்குப் பாதுகாப்பு. காதலைத் தூக்கியெறிந்தவுடன் சில நாட் களுக்கு இதயத்தில் முள் தைத்த மாதிரி வலிக் கத்தான் செய்யும். அந்தக் காதலிலிருந்து நீங்கள் தப்பித்திருக்காவிட்டால் என்னாகி யிருக்கும் என யோசித்துப் பார்த்து, ஆறுதலடையுங்கள். பெட்டர் லவ் நெக்ஸ்ட் டைம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகைப் புயலின் கதறல் இப்படி இருக்கிறது !



ஒரு படம் நல்லா வந்தால் போதும் மக்களுக்கு புத்தி சொல்லப் போறதெல்லாம் நமக்குப் பிடிக்காத வேலை என்கிறார் வடிவேல்.மக்கள் ரசிக்கறதை அறிந்து அதை சிறப்பாக செய்கிறவன் எவனோ அவன்தான் கலைஞன் என்றும் சவால் விட்டுள்ளார்.கோயில் படத்தில் மிருகங்களை அடித்து விரட்டும் ஒரு பாத்திரத்தில் பிரமாதமாக நடித்துள்ளாராம் வடிவேல். நான் நடிச்ச காட்சியைப் பார்த்துவிட்டு ஒரு கதாநாயகன் குமுறியதால் அந்தப் படத்தின் நகைச்சுவைக் காட்சிகளையே வெட்டிய இயக்குநர் இப்போது நாயாக அலைவதாக சொன்னார்.

# நடிகை சரிகா விவாகரத்து!



கேரளத்தை சேர்ந்தவரும் சுமார் 75 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவருமான நடிகை சரிதா கணவரை விவாகரத்து செயயவுள்ளார். தன்னைவிட வயதில் மூத்தவரான மலையாள நடிகர் முகேஷ் என்பவரை திருமணம் செய்த சரிகா இப்போது அவரை விவாகரத்து செய்வது ஏன் என்பது கேள்வி. பாலு மகேந்திராவின் ஜூலிகணபதியில் சரிதாவினுடைய நடிப்பு பாராட்டப்பட்டது இதன் பின் சரிதா - முகேஷ் பிரிவு ஏற்பட்டுள்ளது. இது சரிகா சின்னத்திரையில் நடித்து சம்பாதிக்க திட்டமிட்டதால் ஏற்பட்ட பிரிவா என்பதை சில மாதங்களில் அறியலாமோ ?

# எங்கள் அண்ணா ஆகிறார் விஜயகாந்த் !



விஜயகாந்த் தானே தயாரித்து நடிக்கும் புதிய படத்தின் பெயர் எங்கள் அண்ணா. கடந்த ஒரு மாதகாலமாக இந்தப் படத்திற்கான படப்பிடிப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. சித்திக் இயக்கும் இப்படத்தில் இதுவரை நடித்திராத புதுமையான வேடத்தில் விஜயகாந்த் நடிக்கிறார். பொங்கலுக்கு வெளிவரவுள்ள இப்படத்தை விரைவாக முடிக்கும் இரண்டாவது கட்டப் படப்பிடிப்புகளில் விஜயகாந்த் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரை மதிப்பது முக்கிய கடமையே

ஆண்டொன்று போனால் வயதொன்று போகிறதல்லவா? நாம் அனைவருமே மூப்பை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது எம்மை வந்தடையத்தான் போகிறது. வாழ்க்கையில் மூப்பும் சாவும் விதிக்கப்பட்டவை. அதை ஆணாயினும் பெண்ணாயினும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அன்னையும் பிதாவும முன்னறி தெய்வம். எம்மைப் பெற்றவர்களைக் காப்பாற்றுவது என்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகின்றது.

ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரைத் தெய்வமாக மதிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் செய்த தியாகத்தினால்தான் நாம் இன்று இந்த உயர்ந்த நிலையில் இருக்கின்றோம் என்பதை நாம் உணர்ந்தாலே போதும் அவர்களை அலட்சியப் படுத்தும் எண்ணமே நமக்கு என்றும் வருவதில்லை.

முதியவர்களைப் புரிந்துகொள்ள புரிந்துணர்வும், பொறுமையும் எமக்கு நிறைய வேண்டும். அவர்கள் எது சொன்னாலும் 'சுள்' என்று எரிந்து விழுவது தவிர்க்கப்பட வேண்டும். முதலில், காயப்படுத்திவிட்டுப் பின்னர் அதனை நியாயப்படுத்துகிறவர்கள் நம்மில் ஏராளம்.

வயோதிபர்கள் முதுமைப் பருவத்தில் தங்களது பழைய ஆளுமை இயல்புகளை இழக்கின்றார்கள். அதனால்தான் எப்பொழுதும் மற்றவர்கள் தம்மீது அக்கறையாகவும், அன்பாகவும் இருப்பதையே பெரிதும் விரும்புகின்றார்கள்.

அவர்களின் முக்கிய பிரச்சினை உடல்நலக்குறைவு. தசைகள் தளர்ந்து போகின்றன. அதனால் முன்புபோல கடினமான வேலைகளை அவர்களால் செய்ய முடிவதில்லை.

அடிக்கடி நோய் வருவதால் அவர்களுக்கு தம் எதிர்காலத்தை நினைத்து ஒரு வித பயம் ஏற்படுவது இயல்புதாதே. எனவேதான் ஆறுதல் சொல்வதற்கும், அன்புடன் கவனிப்பதற்கும் நெருங்கிய உறவினர்களை அவர்களின் மனம் நாடுகின்றது.

எல்லோர் குடும்பத்திலும் வயோதிபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் பிரச்சனைக்குரியவர்களாகவே இருக்கிறார்களா? இல்லை. நாம்தான் அவர்களை அப்படிக் கருதுகின்றோமா?

நமக்கும் நாளை இதை நிலைமை வருமென்பதைநாம் உணர்வதில்லையே. என்றும் பதினாறாக வாழ நாம் ஒன்றும் மார்க்கண்டேயரில்லையே!

அன்பு என்பது அள்ளிக் கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம். அன்பால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. நமக்கு அதுதான் ஆயுதம். எல்லோரும் அந்த ஆயுதத்தை வைத்திருக்கிறார்கள். அதை சரியாகப் பயன்படுத்தத்தான் தெரியவில்லை.

பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை, புரிந்து கொள்ளல் என்ற தெளிவோடு முதியோரை அணுகுங்கள். அப்போதுதான் நீங்கள் முதியோராகும்போது உங்களுக்கு இதன் பிரதிபலன் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

- யாரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு

01. பக்தியில்லாத அறிவு கூர் இல்லாத கத்திபோன்றது. அதனால் பயனில்லை.

02. முழுமையான மன்னிப்பை மனிதர்கள் தருவதில்லை. இறைவன் மட்டுமே தருகிறான்.

03. எல்லோர் வீட்டிலும் கடவுள் இருக்கிறார். ஆனால், சிலர் மட்டுமே அவரை அடையாளம் காண்கின்றனர்.

04. பிறரது குறைகளை மன்னிப்பவன் இறைவனுக்கு நெருக்கமானவன் ஆகிறான்.

05. இனிப்பை நாவால் மட்டுமே உணரமுடியும். இறைவனை மனதால் மட்டுமே உணர முடியும்.

06. அகந்தை உள்ள மனதில் ஆண்டவன் குடியேறுவதில்லை.

07. குற்றமற்ற பலனைத் தருவது இறை நம்பிக்கை மட்டுமே.

08. நீ இறைவனைத் தேடுவதை விட, அவன் உன்னை நாடிவரும்படி நடந்துகொள்.

09. எங்கு அன்பும் அமைதியும் நிலவுகிறதோ அங்கு இறைவன் அழைக்காமலே செல்கிறான்.

10. இக்கட்டான சூழலில் பதட்டப்படுவதைவிட பொறுமையாயிருப்பது விரைவில் தீர்வளிக்கும்.

11. பக்தி எனும் சூரியன் உதித்தால் நம் மனத்தாமரை மலரும்.

12. நம்பிக்கையோடு செய்யப்படும் பிராாத்தனை நிச்சயம் பயனளிக்கும்.

13. இறை நினைவுகளால் இதயத்தை நிரப்பி வைத்தால் அங்கு இருள் சேராது.

14. பொறுமையே மிகப்பெரிய பிரார்த்தனை.

15. பிறரை மன்னிப்பதைவிட மகத்தான செயல் எதுவுமில்லை.

16. கடவுள் நம்பிக்கையற்று இருப்பதே கொடிய பாவம்.

17. இறைவனை ஏற்றிக்கொண்டால் மற்றப் பற்றுக்கள் நம்மைவிட்டு விலகிவிடும்.

18. ஓரே பிரார்த்தனை எல்லா கடவுளுக்கும் கேட்கும்.

19. இறை வழிபாடு எந்த வயதுக்கும் உகந்தது.

20. கோபத்தை வெல்லும் ஓரே ஆயுதம் அன்புதான்.

தொகுத்து அனுப்பியவர் - எஸ். என் சர்மா - மிஸ்சிசாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ONE STOP MORTGAGE SHOPPING



## PAYING HIGH INTEREST ON CREDIT CARD!

**100% RE - FINACING AVAILABLE**

OR TAKE HOME EQUITY LINE OF CREDIT UPTO 85% TO SOLVE YOUR CREDIT PROPLAM

**Mortgage Specialist**
**Ontario Mortgage Services Inc.**

## SERVICES WE OFFER

- **0% Down Payment**
- **More than 1% Discount from Bank's Posted Rate**
- **Bankruptcy Discharge**
- **Bad Credit**
- **Re- Financing & Switching**
- **1st, 2nd & 3rd Mortgages**
- **Debt Consolidatation**
- **Equity Take Out**

*MAKING HOME OWNERSHIP DREAMS A REALITY*

Don't Waste Your Time and Credit by Going to Different Banks!
We Take Off all Your Headache!



FOR MORE INFORMATION CALL:
KOKILA VARATHES

**Tel: 416-410-3496**
**Fax: 905-940-0080**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்ப பல் வைதியர்

**Dr. GOPAL GOPALAKRISHNAN**

**Family Dentist with Orthodontic Practice**

**Tel: 416-299-7080**

**வாரத்தில் ஏழு நாட்களும் சேவை உண்டு**

உங்களுக்கு தெரியுமா?
பல் வலித்தால் பிடுங்கத் தேவை இல்லை
வேர் அடைத்தல் மூலம் பிடுங்காமல்
வைத்திருக்க முடியும்












**Tel: 416-299-7080**

**1910 Kennedy Rd. Scarborough (Kennedy / Ellesmere)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் 01-01-04

# புதுவிதைகள்

S.S.துரையின் வானொலி நாடகத் தொகுப்பில் இருந்து

ஜெக: அப்புடித்தான் நான் கேள் விப்பட்டனான்.

கலா: நீ சொல்லுறத்தைப்பாத்தால் எனக்கே உந்தப்பக்கத்துக் கடைக்குப் போக பயமாக கிடக்குதடா?

ஜெக: நீங்கள் உங்களைப்பற்றி யோசிக்கிறீங்கள். உங்களைப் பற்றி யோசிக்கிறத்தை விட்டிட்டு, முதல்ல ஜெனி சாவைப் பற்றி நினைச்சுப பாருங்கோ பாப்பம். நான் அப்பவே சொன்னனான். வீட்டில சும்மா இருக்காமல் அவளை Schoolலுக்கு கூட்டிக்கொண்டுபோய் விட்டிட்டு, School முடிய கூட்டிக்கொண்டு வரச்சொல்லி. ம்... என்ர சொல்லை ஆர் கேக்கிறீங்கள். சரி இனியாவது அப்பாட்டைச் சொல்லி அதை யாவது செய்யச்சொல்லுங்கோ.

கலா: செய்யத்தான் வேணும். சரி கடைக்குப் போட்டார் வரட்டும் சொல்லுவம்.

ஜெக: ஜெனிசாவெண்டு கதைக்கத் தானம்மா ஞாபகம் வருகுது.

கலா: என்ன?

ஜெக: இவன் ஆர் என்ர Friend பாலா இருக்கிறான்தானே?

கலா: ஓ.....

ஜெக: அவனைப்பற்றி என்னம்மா நீங்கள் நினைக்கிறீங்கள்?

கலா: ஏன்? அந்தப் பெடியன் நல்ல ஒழுக்கமான பெடியன்தா னே.ஏன் கேக்கிறா?

ஜெக: இல்லையம்மா அவன் வந்து ஜெனிசாவை மரிபண்ண விருப்பப்படுகிறான்.

கலா: அ.... ஜெனிசாவையோ?

ஜெக: ஓமம்மா. எப்பபாத்தாலும் என்னை கேட்டபடி இருக்கிறான். எனக்கும் என்ன பதில் சொல்லுறதெண்டு தெரியேல்லை.

கலா: இப்ப நாங்கள் விருப்பப்பட்டாலும், ஜெனிசாவுக்கு என்ன வயசு?

ஜெக: அது எனக்கும் தெரியும்தான். இருந்தாலும் அவன் பாலா ஒரு நல்ல பெடியனம்மா. வாற சந்தர்ப்பத்தை ஏனம்மா தவற விடுவான், சொல்லுங்கோ பாப்பம்.

கலா: அதுக்காக, படிச்சுக்கொண்டு இருக்கேக்கை எப்புடித் தம்பி படிப்பை நிறுத்தி செய்து வைக்கிறது?

ஜெக: இல்லையம்மா, நான் அப்புடிச் செய்ய வேணுமெண்டு சொல்லேல்லை.

கலா: வேற.....

ஜெக: இப்ப... கலியாணத்தை செய்து வைச்சாக்கூட ஜெனிசா தொடந்து படிக்கக்கூடிய வசதி இஞ்ச இருக்குது. பிறகேன் நாங்கள் அதைப்பற்றி Worry பண்ணவேணும்?

கலா: பெடியன்ர தாய் தகப்பனோடை கதைச்சு அவையளின்ர சம்மதத்தை கேளாமல், எப்புடியடா நாங்கள் எங்கட எண்ணப்படி செய்து வைக்கிறது?

ஜெக: கதைக்கத்தான் வேணும். கதைக்காமல் எப்புடியம்மா. நீங்கள் அப்பாக்கு விசயத்தைச் சொல்லி, முதல்ல அவற்ர சம்மதத்தை கேட்டு வையுங கோவன். பாலாவின்ர Parents என்னில் நல்ல அபிப்பிராயம் வைச்சிருக்கினம். அவைய ளோடை நான் கதைக்கிறன். நீங்கள் அதைப்பற்றி யோசிக்கா தேங்கோ.

கலா: நான் யோசிக்கேல்லை. சரி எதுக்கும் அப்பா வரட்டுமன் கதைப்பம்.

ஜெக: சரியம்மா வேற என்ன? எனக்கு Lateராகுது. நான் போட்டு வாறன்

கலா: ம்.... சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 6

இடம்: வீடு - கலா, ஜெனிசா, ரட்ணம்.

ஜெனி: (சத்தி எடுப்பதுபோல் பாவனை.)

கலா: ஜெனிசா.... பிள்ளை என்ன செய்யுது? ஏன் ஓங்காளிக்சு சத்தி எடுக்கிறா?

ஜெனி: தலையை சுத்துதம்மா.

கலா: தலையைச் சுத்துதோ? கண்ட நிண்டதுகளைச் சாப்பிறது. அது செமிக்கேல்லப்போல கிடக்குது. எங்க திரும்பு பாப்பம்.

ஜெனி: இல்லையம்மா, ரெண்டு மூண்டுநாளா காலமையில எழும்பேக்கை தஞ்சக்கேடா கிடக்குதம்மா?

கலா: ஆ.... அது பித்தம்போல கிடக்குது. சரி நீ போய் சுடுதண்ணியில முகத்தை ஒருக்கா கழுவு. நான் இஞ்சிபோட்டு தேத்தண்ணி வைச்சுக்கொண்டு வாறன்.

ஜெனி: (சத்தி எடுப்பதுபோல் பாவனை)

ரட்ண: (ரட்ணம் வீட்டின் உள்ளே வருகிறார்) கலா.... என்னப்பா எங்க நிக்கிறீர்? ஆர் இந்த வெளிக்கதவை திறந்து விட்டது?

கலா: அது... இவன் தம்பி வேலைக்குப்போகேக்கை பூட்டாமல் போட்டான்போல கிடக்குது.

ரட்ண: சரி. இந்தாரும், வாங்கிக் கொண்டு வந்த பாலைக், கொண்டுபோய் உள்ள வையும் பாப்பம்.

கலா: வாறன்.... கொஞ்சம் பொறுங்கோ...

ஜெனி: (இதே நேரம் மீண்டும் ஜெனிசா சத்தி எடுப்பதுபோல் பாவனை)

ரட்ண: என்ன இது? ஏன் பிள்ளை சத்தி எடுத்து, ஓங்காளிக்கிறாள்? அ... என்ன நடந்தது?

கலா: சாப்பிட்டது செமிக் கேல்லைப்போல கிடக்குது. அதுதான் இஞ்சி குத்தி தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன் குடுக்கிறத்துக்கு. இந்தா ஜெனிசா இதைக் குடிபாப்பம்.

ரட்ண: எனக்கு அப்பவே தெரியும். உப்புடி நடக்குமெண்டு. உனக்குப் பிள்ளை நான் சொன்னனான் தானே. வெய்யில்ல நிண்டு உந்த நெற்போல் கிற்போலெல்லாம் விளையாடவேண்டாமெண்டு கேட்டால்தானே?

ஜெனி: (குடித்ததை வெளியில் துப்ப)

ரட்ண: அ.... என்ன இது. பிள்ளைக்கி கடுமைபோல கிடக்குதப்பா. ஜெனிசா.... பிள்ளை...

ஜெனி: அப்பா.... அ...

ரட்ண: என்ன பிள்ளை செய்யுது? அ... என்ன செய்யுது?

ஜெனி: Tiredடா இருக்குதப்பா. கண்ணெல்லாம் இருண்டு கொண்டு வருகுது.

ரட்ண: சரி... கையை... கையை இப்புடி நீட்டு பாப்பம். இதென்ன கையெல்லாம் காப்பு. ஆனைக்கி மணி கட்டினமாதிரி.

கலா: ம்... கைபிடிச்சுப்பாக்க வந்திட்டார். ஊரில எல்லாற்ர கையையும் புடிச்சுப் பாத்ததுதானே மிச்சம். ஒழுங்கா எங்க மருந்து குடுத்தது.

ரட்ண: மருந்து குடுத்தனோ இல்லையோ. ஆனா இன்ன வருத்தமெண்டு சொன்னால் சொன்னதுதான்.

கலா: ம்.... சொன்னதுதான்.

ரட்ண: (ஆச்சரியம்) கலா

கலா: என்னப்பா....

ரட்ண: இஞ்ச ஒருக்கா வாபாப்பம்.

கலா: என்னப்பா....? என்ன... என்ன?

ரட்ண: இஞ்சால வாருமெண்டு சொல்லுறன். அங்க நிண்டு என்னெண்டு கேட்டுக்கொண்டு நிக்கிறீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா: அ.... என்ன.....? (ஆச்சரியம்)
ரட்ண: நாங்கள்.... இவளை.... குழந்தை குழந்தையெண்டு நினைச்சுக் கொண்டிருக்க, இவள் வயித்தில குழந்தை ஒண்டை வேண்டி வைச்சிருக்கிறாளப்பா.
ஜெனி: அப்பா.....கலா: (அழுகை) ஐயோ என்னப்பா சொல்லுறீங்கள்?
ரட்ண: நானென்ன, பொய்யே சொல்லுறன்? அதுவும் பெத்த பிள்ளையைப்பற்றி...
கலா: கடவுளே என்ன வேலையடி செய்து போட்டு வந்து நிக்கிறா (என்று அடிக்க)
ஜெனி: ஐயோ அம்மா அடிக்காதேங்கம்மா. அடிக்கா தேங்கம்மா...
கலா: உன்னை அடிச்சே சாக்கொல்ல வேணுமடி (மீண்டும் அடிப்பதுபோல்) உன்னை....
ஜெனி: அம்மா... அம்மா அடிக்காதேங்கம்மா. வலிக்குதம்மா.... அடிக்காதேங்கோ அம்மா...ஆ...
ரட்ண: ஆர்.... ஆர்... அந்தப் பெடியன்? நீ இப்ப சொல்லப்போறியோ இல்லையோ?
ஜெனி: எனக்கு தெரியாதப்பா....
ரட்ண: ஆ... தெரியாதோ?
கலா: தெரியாதெண்டு சொல்லுறாளே. என்ர கடவுளே நான் இப்ப என்ன செய்யிறது?
ரட்ண: ஜெனிசா... இஞ்சபார் நீ இப்ப உண்மையைச் சொல்லேல்லை நானும் அடிச்சுப்போடுவன். உண்மையைச் சொல்லு.
ஜெனி: அது.... அது வந்தப்பா... வந்து என்னோடை படிக்கிறவர்.
ரட்ண: படிக்கிறவனோ, அ...
கலா: ஊர்பேர் தெரியாதவனோடை எப்புடியடி பழகுவா... (என்று அடிக்க)
ஜெனி: அடிக்காதேங்கம்மா... அவர் என்னை கலியாணம் செய்யிறனெண்டு Promise பண்ணியிருக்கிறார்.
கலா: Promise பண்ணினவனோ?
ரட்ண: சும்மா Promise பண்ணுறனெண்டு சொல்லி, உன்னை ஏமாத்திப் போட்டான்.
ஜெனி: இல்லையப்பா அவர் என்னை ஏமாத்தமாட்டார்.
ரட்ண: ஏமாத்தமாட்டானெண்டால், இஞ்சகொண்டா அவன்ர விலாசத்தை தாய் தகப்பனோடைபோய் நான் கதைக்கிறன்.
ஜெனி: அவையள் இஞ்ச இல்லையப்பா.
ரட்ண: வேற எங்க?
கலா: வேற எங்கையடி?
ஜெனி: Sri Lankaவிலையம்மா.
ரட்ண: அ.... Sri Lankaவிலையோ?
கலா: ஊர் உலகம் எங்களைப் பாத்துச் சிரிக்கப்போகுதே. கடவுளே என்ன செய்யுறது? வேலைக்குப்போகேக்கையும், இவளைப் பற்றி கதைச்சுப்போட்டுத்தானே தமயன் போனவன். இனி அவனுக்கு நான் என்ன பதிலைச் சொல்லுறது? எப்புடிச்சமாளிக்கப்போறனோ தெரியேல்லையே.
ரட்ண: பெடியன், இண்டைக்கி Schoolலுக்கு வருவான்தானே. பெடியனைப் பற்றிய முழுவிபரமும் என்ர கைக்கு வந்தாகவேணும். இல்லை பெடியனை இஞ்ச கூட்டிக்கொண்டுவா நான் கதைக்கிறன்.
ஜெனி: சரியப்பா. நான் கூட்டிக் கொண்டுவாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் 01-01-04

# தப்புக் கணக்கு

தொட்டிலையும் ஆட்டி குழந்தையும் கிள்ளுபவர்கள் போலன்றி, குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு அதன் தூக்கம் கலையமுன்பு கதவைப் பூட்டிக் கொண்டு வெளியில் செல்ல ஆயத்தமானேன். கதவைப்பூட்டிய சத்தத்தினால் நித்திரை குழம்ப, வீரிட்டுக் கத்தினாள் ரெலிபோன் பேபி. என்னுடைய விதி, சரியான நேரத்திற்கு கொமினிக்கேசனைப் பூட்டிக் கொண்டு போக முடிவதில்லை. சிணுங்கிச் சிணுங்கி உடலைப்பழுதாக்க முதல் அவளைத்தூக்கிக் கொண்டேன். என் ஸ்பரிசம் பட்டதும் தன் அழுகையை நிறுத்திய, பேபி ரெலி.ஃ.போனுக்கு 'ஹலோ!' சொன்னேன். ஹலோ, கஸ்தூரியக்காவா................? கேட்டது ஆண் குரல். "கஸ்தூரியா? அப்படி ஒருத்தரும் இங்கில்லை, நீங்க யார் பேசறது? குரலை உயர்த்தியபடிதான் கேட்டேன்.இந்தக்காலப் பெடியன் களைப்பற்றி எனக்குத் தெரியாதே, நேரம் போகவில்லையென்றால், டெலி.ஃ.போன் பண்ணி பெட்டையளின்ரை தொடர்பை ஏற்படுத்தி, என்ன செய்கிறீங்க, சுகமாயிருக்கிறீங்களா.. வழிகிறது தானே பொழுதுபோக்கு, பெட்டை யளின்ரை பெயர்களை யறிதவற்கு அவன்கள் பாவிக்கிற ரெக்னிக் நல்ல மூளைசாலிகள்தான்.

"நான் ஜீவா கதைக்கிறன். உது யாழ்ப்பாண டவுன்(வுழறெ) .............. கொமினிக்கேசன் தானே" தழுதழுத்த குரலைக்கேட்ட போது மன்னித்துக் கொள்ளுங்கோ எனச் சொல்லுறான் போல இருந்தது. அவனின் குரல் நல்லவனாக காட்டியது வம்பு கதைக்கும் வர்க்கமாகத் தெரியவில்லை.

"ஓமோம், இது திருநெல்வேலி கொமினிக் கேசன், நீங்க கேட்கிற பெயரிலே இங்கு எவரும் வரவில்லை. விலாசம் சொன்னீங்களென்றால் அவவை இங்கே வரச்சொல்லலாம்"

- கொமினிக்கேசன் பூட்ட வேண்டிய நேரம்தானென்றாலும், வருகின்ற உழைப்பை ஏன் விடுவானென்று விலாசமெழுத பேனாவைக் கையிலெடுத் தேன். "பரவாயில்லீங்க, உங்கிருந்து கப்பல் எப்போ புறப்படுகின்றதென் அவவைக் கேட்பதற்குத்தான் எடுத்தனான்;.......... நம்பர் மட்டும்தான் எழுதினவ விபரம் எழுதவில்லை, அதனால் .......... உங்களைத் தொந்தரவு பண்ணிவிட்டேன் ஞழசசல.என்றான்

பண்பான அவனின் குரல் படித்தவன் போலக் காட்டியது.

SUBASUVARRAVTHI
சுவாருதி Fashion
MAGNIFICENT FASHION
FOR THE ENTIRE FAMILY
சிறுவர் சிறுமியர்க்கான புதிய
ஆடைத் தெரிவுகள்
புதிய வகை பஞ்சாபி வகைகள்
Tel: 416-754-0730
4810 Sheppard Ave E Unit 226 Scar, ON.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளைக்கு இப்படியான அழைப்புக்கள் எத்தனை வருகின்றன. இவற்றுக்கெல்லாம் நான் கோபிக்க முடியுமா. எனது வேலையே இதுதானே. வம்புப் பெடியளோ என எண்ணித்தான் உரத்த சத்தத்தில் கத்தினனான். உண்மைக்கும் நான்தான் மன்னிப்பச் சொல்லவேண்டும். மனதினில் எண்ணிய மறுவினாடியே அவனுடன் நல்ல தொனியில் கதைக்கத் தொடங்கினேன்.

"கப்பலா, அது இங்கேயிருந்து 20ம் திகதி புறப்படுமென பேப்பரில் போட்டியிருக்கு. ஆனால் நிச்சயமாகச் சொல்லமுடியாது.'' இப்ப ஒரு கிழமையாகக், கப்பல் எப்ப வரும் என நானும் பேப்பர் பார்த்துக் கொண்டு தானிருக்கின்றேன். இன்று, நாளை என பொய்யைத்தானே போடுறான்கள்.

''திருகோணமலையிலிருந்து நாலு நாளில் புறப்படுது" - என மனநிலையை அறிந்தவன் போல் காதுக்குக் குளிரளித்தான். இன்னும் நாலுநாளில் கப்பல் வரப்போகுதெனச் சந்தோசத துடன் கதவைப்பூட்டிவிட்டு அவசர அவசரமாக நடந்தேன்; திரும்பவும் குழந்தை எழுந்து விடுவாள் என்ற பயந்தினால். இந்தக் கொமினிக்கேசன் தொடங்கிய பிறகு நாம் எவ்வளவோ முன்னேறிவிட்டோம். டெக், ஃபிரிட்ஜ் என எல்லாச்சாமான்களும் வாங்கியது இந்த வருமானத்தில்தான். வந்தாலும் வந்தான்கள் கரண்ட் தந்திட டான்கள்.............. இதெல்லாம் எத்தனை நாளைன்கோ(?), எரிமலை எப்படி வெடிக்கும், எப்போது வெடிக்குமென்று யாருக்குத் தெரியும். காற்றுள்ள போதே துாற்றிக்கொள்ள வேண்டும். அதிகாலையே கொமினிக்கேசனை திறந்து வைத்தேன். வழமையைவிட, உள்வரும் அழைப்புக்களைப் பெற வந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்தது. ஆனால் ரெலிபோன் பேபி தூங்கிக் கொண்டிருந்தாள். ''துாக்கமாக கண்மணி அழைப்புக்கட்டணமாக 5 ரூபா வாங்குறம். சர்வதேசக்குடும்பப் பெற்றோர்கள் நிறையப்பேர் வந்திருக்கினம். எப்படியும் இன்றைக்கு நிறைய வருமானமிருக்கு. என் மனதையறிந்த பேபி குரல் கொடுத்துக் கண்திறந்தான். செல்லமாகத் தூக்கி

"ஹலோ குட்மோர்னிங்" - கூறினேன்

"ஹலோ, நான் ஜீவா கதைக்கிறன்"

என மறுமுனை சிரித்துக் கொண்டது.

'ஜீவா கதைக்கிறார்' என வந்திருந்தவர்களைப் பார்த்து கொண்டேன். எல்லோரும் மௌனமாகவிருந்ததால் திரும்ப அவனிடமே 'யாரு கதைக்கிறீங்க?' என்றேன்.

'நான்தான் ஜீவாவுங்க, நேற்று கப்பல் விடயமா உங்களுடன் கதைத்தேன், அதுக்குள்ளே மறந்திட்டீங்களா?'

- உரிமையுடன் கேட்டான்.

"ஓகோ, நேற்றைய ஆளா?'' - ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

"எப்ப கப்பல் உங்கிருந்து வருகுது?"

- எனக் கேட்டவனிடம் நானும் அதே கேள்வியை திருப்பிக் கேட்டேன்.

"இப்போதைக்குப் கப்பல் புறப்படாது"

அவனிடமிருந்து இப்படியொரு செய்தி அதுவும் அதிகாலை வந்ததும் மனசெல்லாம் காய்ந்க மரம்போலா கிவிட்டது. பட்டுப்போன மரத்திற்குத் தண்ணீர் ஊற்றவேண்டுமென்று நினைத்தானோ, என்னவோ அடிக்கடி ரெலிஃபேன் பண்ணி கப்பல் விடயத்தில் தொடங்கி வீட்டு நிலைமை வரை கதைக்கின்றான். ஜீவா, இப்போ நல்ல நண்பனாகிவிட்டான். அவனுடன் கதைக்கத் தொடங்கினால் நேரம்போ வதே தெரிவதில்லை. என்மனம் ஏங்கத் தொடங்கிவிட்டது. ஜீவா எடுக்க மாட்டானா? கொமினிக்கேசனில் ஆட்கள் வராதநேரத்தில் நிறைய அலட்டலாம். அது என்னவோ தெரியவில்லை, ஏதொ புரியவில்லை அவனுடன் கதைக்கின்ற போது எனக்கு மிகவும் சந்தோசமாகவும் ஆறுதலாகவும் இருக்கின்றது. இந்தக் கானல்நீர்ச் சந்தோஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுடன் முடியப்போகுதென்று தெரியாமல் வீட்டுக்கு வந்தபோது பேரதிர்ச்சியும் காத்திருக்குமென நான் நினைக்க வேயில்லை.

''வாங்கோப்பா, என்ன லேட், கொமினிகேசனில் நிறையச் சனமா(?)''

வரவேற்பு பலமாகவிருந்தது. "இன்றைக்கு கப்பல் வந்ததா?"

- சந்தோசமென்றாலும் ஏதோ அதிர்ச்சியில் சந்தேகமாகக்க கேட்டேன்.

"கப்பல் இப்போதைக்கு வராது, நான் ஃபிளேனில் வந்திட்டன்...... அது போகட்டும், ரெலிஃபோனில் நல்லா அலட்டுகிறீங்க; ஹலோ சொன்னதும் யாரு ஜீவாவா என்றால்..........(?) கொமினிக்கேசனை நாளையிலிருந்து நான் பார்த்துக் கொள்கிறேன், நீ வீட்டிலேயிருந்து வீட்டு வேலைகளைக் கவனி, புரியுதா?

- கண்டிப்பாகச் சொன்னவரை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் கணவர்தான் என்னுடன் ஃபோனில் வேறோர் பெயரைச் சொல்லிச் கதைத்து என்னை ஆழம் பார்க்கிறார் என்பதையறியாத மடந்தையாகிவிட்டேனோ என்ற வெட்கம் ஒருபுறம் அவரைக்கண்ட சந்தோசம் மறுபுறம், சிலையாகி நின்றேன்.

"இஞ்சரப்பா, இன்றைய காலகட்டத்தில் பெண்கள் நாட்டையாள்கிறார்கள். நீங்க என்னவென்றால் என்னை ஹவுஸ் வைஃப் என்ற பெயரினால் ஹவுஸ் அரெஸ்ட் பண்ணுகிறீகள்''

- சொல்ல நினைத்தேன். ஆனால் சொல்லவில்லை. உந்தாளோடை வாதாட முடியாது. பக்கத்து வீட்டுப் பாக்கியக்கா, மாதர் சங்கத்தலைவி, பெண்களுக்கு சம உரிமைகள் தரப்பட வேண்டுமென குரல் எழுப்பிக் கொண்டிருப்பவ. அவவுடன் வாதாடிய வாய்வீரர் இவர்.

''பெண்களுக்கு சமவுரிமை கேட்கிறீங்கள். பட்டப்படிப்பு, தொழில்வாய்ப்பு, அரசியல் என எல்லாவற்றிலும் சமபங்கு வேண்டுமென்கிறீங்கள். இங்கு ஒரு ஆண் மாட்டுவண்டி சவாரி செய்து, முட்டை தூக்கி உழைக்கும் தொழிலை பெண்கள் செய்வார்களா?

உடைகளிலும் சமவுரிமை வேண்டுமென்று சேட்டும் ஃபாண்டும் போடத் தொடங்கிவிட்டியள்........ மாதர் சங்கம் மகளிர் சங்கம் என வீட்டுப்பக்கம் வந்து என் மனைவியையும் குழப்பிவிடாதேங்கோ''

பாவம் பாக்கியக்கா, இதற்குப்பின் எங்க வீட்டுப்பக்கம் வருவாயே(?) வரவேயில்லை.

"சரிங்கப்பா, நீங்கள் சொன்னதுபோல செய்கிறேன். உங்களைக் கல்யாணம் கட்டியதுக்கு......உங்க சொல்லுக்கு எதிராக ஏதாவது செய்தனானே? என் வீட்டை விட்டு, சொந்த பந்தத்தை விட்டு உங்க நிழலாக வந்துவிட்டேன். ஹவுஸ் வைஃப் ஆகவிருந்தும் நிறைய சாதிக்கலாம்தான். ஒரு குழந்தை நல்லவனாவதும் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே. குழந்தைகளைச் சீராக கவனித்து நன்றாகப் படிக்க வைத்துப் பாசமழை பொழிந்து நல்ல பிள்ளைகளாக வளர்க்க வசதி ஆகவிருக்கும்."

- மன மகிழ்வாக சம்மதத்தை தெரிவித்துக் கொள்ள அவரின் முகம் அப்போது மலர்ந்த தாமரை மலர் போலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இராமன் சீதையைச் சந்தேகப்பட்டுத் தீக்குளிக்கச் சொன்னான். அதில் அர்த்தமிருந்தது. நியாயமிருந்தது. தன்னைப்பற்றி எவர் எப்படிக் கதைத்தாலும் பரவாயில்லை. ஆனால் என் மனைவி குற்றமற்றவர், களங்கமற்றவர், பத்தினி என உலகம் கதைக்கவேண்டுமென விரும்பித்தான் அந்தத் திருவிளையாடலைப் புரிந்தான். இராமன் கிருஸ்ணனின் அவதாரம் அவனுக்குத் தெரியாதா? அயோத்தியென்றாலும் சரி ஆசோகவனமென்றாலும் சரி பெண்கள் பெண்களாக விருக்க வேண்டும் என்ற மறைமுகக் கருத்தையும் நீங்கள் மறக்கவோ மறுக்கவோ கூடாது. இன்றைய ஆண்கள் கூறும் வேடிக்கை வினோத வசனம், " ஆனானப்பட்ட இராமனே, தன் மனைவியைச் சந்தேகப்பட்டிருக்கிறானென்றால் நாங்கள் சந்தேகப்பட்டால் என்ன பிழை?............ இவர்கள் ஒன்றைக் கவனிக்கணும், இராமன் சந்தேகப்பட்டானென்பதால் சந்தேகப்படுபவர்கள் எல்லாம் இராமனாக முடியாது, இந்த இராமன்கள் இவ்வுலகில் வாழக்கூடாது. அவர்களை பூண்டோடு ஒழிக்கவேண்டும். முதலில் அவர்கள் போட்டுள்ள தப்புக்கணக்கைத் தகர்க்க வேண்டும்.............."

## பணக்காதல்

தாடி வளர்த்தேன்
நடை தளர்ந்தேன்
மனம் சோர்ந்தேன்
செலவு செய்தே
செல்லரித்துப் போனேன்
இருந்தும்-
அவளிடமிருந்து
சம்மதம் வரவில்லை...
கடிதம் மட்டும் வந்தது...
செலவுக்கு பணம்
அனுப்பச் சொல்லி!



# விடை

01. கடிகாரம்
02. பலாப்பழம்.
03. கோழி.
04. புத்தகம் (நூல்)
05. பொரிவிளாங்காய்.
06. குன்றிமணி.
07. விரல்கள்.
08. வைக்கோல்,

நெல்.

09. பிறைச்சந்திரன்.
10. வாழைப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதம்

**Director**
**B.** *Atputharasah,*

**Managing Director**
*N.Kamalavannan*



**Editorial Board**

திரு. றெஜிஸ்
**Dr.** குமாரசிறீ
திரு. பாலசரவணன் (இந்தியா)
செல்வி. அஞ்சலா ஞானரட்னம்
திரு. பாலன் மயில்வாகனம்
திரு. சிவசர்மா



**Graphic Design & Layout**
*Sooriyan Graphic (Ruban)*

**Computer Typing**
*J.E. Regis*

**Printing**
*RJ Multi Litho Inc.*



அலுவலகம் - **Office**

**Off : 416-388-4181**
**Fax : 416-724-9511**

**E-mail :**
**editor@amudam.com**
**editor@amudham.com**
**Web:www.Amudam.com**





எனக்கென்று ஓர் பாணி!!
எனது விளம்பரத்தைப் படிக்கும்
உங்களுக்கு என் நன்றிகள்
என்பதனை, மகிழ்ச்சியுடன்
உங்களிடம்
தெரியப்படுத்துகிறேன்
அன்புடன்
சிவசர்மா



HOMELIFE
HIGHER STANDARDS

**Shiva Sharmah**

Bus : (416) 321 6969
Cell : (416) 666 5515




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KISKINTHA

## BUILDING MAINTENANCE LTD

### Kiskintha Carpet & Duct Cleaning



- COMMERCIAL & INDUSTRIAL
- JANITORIAL CLEANING
- 7 DAY A WEEK
- 24 HRS EMERGENCY SERVICE
- FULLY LICENSED AND INSURED



**Sale**
Whole House
Deluxe cleaning
$120.00
**Besement Free**

Full House Steam cleaning $ 80.00
Full House Deluxe cleaning $120.00
Full House Duct cleaning $150.00
Car Interlor Wash $50.00
2 Room & Hallway $45.00

### Kiskintha Express Moving Service

ANY PICK UP AND DELIVERY
SHORT OR LONG DISTANCE

உங்களது சகலவிதமான
இடமாற்றங்களின்
போதும் பொருட்களை
பாதுகாப்பாகவும்.
துரிதமாகவும்
இடமாற்றம் செய்வதற்கு
அழையுங்கள்



**Call: MANO**
**416 -732-4574**



### Kiskintha Painting Work



உங்கள் இல்லங்களை அலுவலகங்களை
அழகுபடுத்தும் அனைத்து Painting
வேலைகளையும் குறித்த நேரத்தில்
முடித்துக் கொள்ள அழையுங்கள்.

### Call For Free Estimate (Mano)

# 416 -732-4574

Your Satisfaction
Guaranteed

www.kiskintha.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்குவதும் விற்பதும் ஓர் வியாபாரமே;
என்னிடம் கிடைப்பது நட்பான சேவை, அதிக மனத்திருப்தி



“உங்கள்
எண்ணங்களை
அடைகாக்க”



தயாPKகந்தையா
SALES REPRESENTATIVE

Direct: 416-716-8707

RE/MAX
Rouge River Realty Ltd. Realtor.
Independently owned & operated.

Bus: 416.286.3993
Fax: 416.286.3348
Toll Free: 1800.663.7119
thayapk@canada.com

அதே நட்பான சேவை அதே தரம்

என்மூலம் வீடு விற்பனை
செய்பவர்களுக்கு
எனது தரகுக்கூலி(கொமிசன்)1% மாத்திரமே

Total commision Typical (2.5%+2.5%) ~~5%~~

Total Commsion PK 1% + selling agent 2.5% = 3.5%

1265 Morningside Avenue, 2nd floor, Toronto, M1B 3V9, Ontario, Canada.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org